(கா-ம்) இந்தச் சாஸ்திரத்தால் நிரூபணம் செய்யப்படுகின்ற விஷயங்களைச்சுருக்கமாய் நான்கு விதமாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். 1. காரணமாகவே இருக்கக்கூடியது. 2. காரியமாகவே இருக்கின்றவை. 3. ஒன்றிற்குக்காரணமாயும், மற்றொன்றிற்குக்காரியமாயு மிருக்கின்றவை. 4. காரணமாகவோ காரியமாகவோ ஆகாமலிருக்கக்கூடியது. அவற்றுள் மூலப்பிரகிருதி, பிரதானம் என்று வழங்கப்படும் வஸ்து காரணமாகவே இருப்பது எனப்படும். சத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களின் சமமானநிலை பிரதானம், பிரகிருதி என்று வியவஹரிக்கப்படுகிறது. இதுவே சகல பிரபஞ்சத்திற்கும் ஆதிகாணமாயிருக்கக்கூடியது. இதற்கு வேறுகாரணம் கிடையா. ஏனேயா? வெனின்; இதற்கும் ஒருகாரணத்தை ஒத்துக்கொள்வோமாயின், அக்காரணத்திற்கும் வேறு காரணமிருப்பதாய் ஏன் அங்கீகரிக்க

प्रकृतिः प्रधानम्, सत्वरजस्तमसां साम्यावस्था, सा अविकृतिः, प्रकृतिरेवेत्यर्थः । कस्मादित्यत उक्तम्—"मूल" इति । मूलश्चासौ प्रकृतिश्चेति मूलप्रकृतिः विश्वस्य कार्यसंघातस्य सा मूलाम्, न त्वस्या मूलान्तरमस्ति अनवस्थाप्रसङ्गात् । न चानवस्थायां प्रमाणमस्तीति भावः ॥

कतमाः पुनःप्रकृतिविकृतयः, कियत्यश्चेत्यत उक्तम्—" मह दाद्याः प्रकृति विकृतयः सप्त" इति । प्रकृतयश्च विकृतयश्च ता इति "प्रकृति विकृतयः" सप्त । तथाहि—महत्तत्वमहङ्कारस्य प्रकृतिः, विकृतिश्च मूलप्रकृतेः । एवमहङ्कारतत्वं तन्मात्राणामिन्द्रियाणां च प्रकृतिः, विकृतिश्च महतः । एवं पंचतन्मात्राणि तत्वानि भूतानामाकाशादीनां प्रकृतयः विकृतयश्चाहङ्कारस्य ॥

கூடாதென்ற கேள்வை சம்பவிக்கும். இவ்விதம் காரியகாரண பாவத்தின் கிரமத்திற்கு முடிவில்லாமையை அங்கீகரிப்போமேயாயின் அநவஸ்தை (முடிவில்லாமை அதாவது: பிரமாணமன்றியே பலவஸ்துக்களை இருப்பனவாய் அங்கீகரிப்பது) என்ற தோஷம் சம்பவிக்கும். அவ்விதம் அந்த தோஷத்தை அங்கீகரிப்பதில் பிரமாணம்யாதுமில்லை யாதல்பற்றி காரியகாரணபாவக்கிரமத்தின் முடிவை பிரகிருதியினிடம் அங்கீகரிக்கிறோம். ஆனதுபற்றியே அதற்கு "மூலப்பிரகிருதி"(ஆதிகாரணம்)எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

மஹத், அஹங்காரம், மண்ஜலம் நெருப்பு காற்று ஆகாசம் இவைகளின் தன்மாத்திரைகள் (சூக்ஷ்மங்கள்.) என்ற ஏழுதத்வங்கள் "பிரகிருதிவிகிருதி" எனப்படும். அதாவது மேற்சொன்ன ஏழுதத்வங்களுள் ஒவ்வொன்றும் ஒன்றிற்குக்காரணமாயும் மற்றொன்றிற்குக் காரியமாயுமிருக்கின்றது. எவ்விதமெனின், மஹத்தத்வம் என்பது அஹந்தத்வத்திற்குப் பிரகிருதியா (காரணமா) யும், மூலப்பிரகிருதியின் விகார (காரிய) மாயுமிருக்கின்றது. இவ்விதமே அஹந்தத்வம்என்பது பிருதிவி முதலிய பஞ்ச பூதங்களின் தன்மாத்திரைகளுக்கும், இந்திரியங்களுக்கும் பிரகிருதி

अथ का विकृतिरेव कियतीचः इत्यत उक्तम्—"षोडशकस्तु विकारः" इति । षोडशसंख्यापरिमितोगणः षोडशकः । 'तु' शब्दो अवधारणे, भिन्नक्रमः—पञ्चमहाभूतानि एकदशेन्द्रियाणि षोडशको गणः, विकार एव, न प्रकृतिरिति । यद्यपि पृथिव्यादीनां गोवटवृक्षादयोविकाराः, एवन्तद्विकारभेदानां पयोबीजादीनां दध्यङ्कुरादयः, तथापि गवादयो बीजादयो वा न

யாயும், மஹத்தத்துவத்தின் காரியமாயுமிருக்கின்றது. இவ்விதமே ஆகாசம் முதலியவற்றின் ஐந்துதந்மாத்திரைகள் என்றதத்துவங்கள் ஆகாசம்முதலிய ஐந்துமஹாபூதங்கட்கும் காரணங்களாயும், அஹங்காரத்தின் காரியங்களாயுமிருக்கின்றன. எது காரியமாகவே இருக்கின்றது? எவ்வளவு? என்பதைச் சொல்லுகிறார்—**षोडशकस्तु विकार इति.** 16 என்ற எண்ணல் அளவிடப்பட்டகூட்டம் **षोडशक** என்ற பதத்தின்பொருள். **तु** என்றபதத்திற்கு அவதாரணம் (நிச்சயிப்பது) பொருள். அதை **षोडशक** என்ற பதத்தினிடமிருந்துப்பிரித்து **विकार** என்றபதத்துடன் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆகவே ஐந்து மஹாபூதங்களும் 11 இந்திரியங்களும் 16 என்ற எண்ணல் அளவிடப்பட்ட கூட்டம் எனப்படும்; அதுமற்றொன்றின் காரியமாகவே இருக்கின்றது; வேறு தத்துவத்திற்குக் காரணமாக ஆவதில்லை என்று ஏற்பட்டது.

சங்கை—பிருதிவிமுதலிய மஹாபூதங்கட்கு பசு, குடம், மரம் முதலியன காரியங்களாகின்றன; அதன் காரியங்களான பால், விதை முதலியவற்றிற்கு தயிர், மூளை முதலியன காரியங்களாகின்றன; ஆதலால் பிருதிவீ முதலிய மஹாபூதங்கள் மற்றவற்றிற்குக் காரணமாவதில்லை என்று கூறியது எங்ஙனம் பொருந்தும்?

உதாரம்—பசு முதலியனவோ, விதை முதலியனவோ பிருதிவீ முதலியவற்றைக் காட்டிலும் வேறுதத்துவங்களல்ல.

पृथिव्यादिभ्यस्तत्वान्तरम् । तत्वान्तरोपादानत्वं च प्रकृतित्वमिहाभिप्रेतम्, इति न दोषः । सर्वेषां च गोघटादीनां स्थूलता इन्द्रियग्राह्यता च समेति न तत्वान्तरत्वम् । अनुभयरूपमाह—"न प्रकृतिर्नविकृतिःपुरुषः" इति । एतत्सर्वमुपरिष्टादुपपादयिष्यते ॥ ३ ॥

तमिममर्थं प्रामाणिकं कर्तुमभिमताः प्रमाणभेदा लक्षणीयाः । न च

வேறுதத்துவத்திற்கு *உபாதானகாரணமாயிருத்தலே இங்குள்ள "பிரகிருதித்வம்" என்றதின்பொருள். ஆதலால் நாம் கூறியவற்றில் தவறுதல் எதுவுமில்லை. பசு, குடம் முதலியவற்றிற்கு ஸ்தூலமாயிருக்குகையும், இந்திரியங்கட்குப் புலப்படுகையும் சமமாயிருப்பது பற்றி அவைவேறுதத்துவங்களல்ல. ஆதலால் அவைகட்கு பிருதிவீ முதலிய மஹாபூதங்கள் காரணங்களாயினும் பிரகிருதியாயிருத்தலே யடையமாட்டாது. காரணமாகவோ, காரியமாகவோ ஆகாமலிருப்பதைச் சொல்லுகிறார்—**न प्रकृतिर्न विकृतिः पुरुषः इति** । புருஷன் (ஜீவன்) ஒன்றிற்குக்காரணமாகவோ காரியமாகவோ ஆவதில்லை. இதனைப்பின்னர் நிரூபணஞ் செய்வாம் .(எ-று.)

நான்காவது சுலோகம்.

(அ-கை) மூன்றுவது சுலோகத்தாற் சொல்லிய சமாசாரங்களை பிரமாணங்களால் புலப்படக்கூடியதாக நிரூபணம்

---

* காரணம் மூன்றுவிதம்; 1. உபாதானகாரணம், 2. அசமவாயிகாரணம், 3 .நிமித்தகாரணம். எதில்காரியமானது உண்டாவதற்குமுன் சூக்ஷ்மநிலையில் அடங்கி இருக்கின்றதோ அதை அந்தக்காரியத்திற்கு 'உபாதானகாரணம்' என்கிறோம். உதாஹரணம்:—குடத்திற்கு மண், மரத்திற்கு விதை, தயிருக்குப் பால் முதலியன உபாதானகாரணங்களாம். இதையே நையாயிகர்கள் "ஸமவாயிகாரணம்" என்கின்றனர்.

सामान्यलक्षणमन्तरेण शक्यते विशेषलक्षणं कर्तुम्, इति प्रमाणसामान्यं तावल्लक्षयति—

मू० । दृष्टमनुमानमाप्तवचनं च सर्वप्रमाणसिद्धत्वात् ।
त्रिविधं प्रमाणमिष्टं प्रमेयसिद्धिः प्रमाणाद्धि ॥ ४ ॥

செய்யவேண்டி ஒத்துக்கொள்ளப்பட்ட பிரமாணங்களின் பிரிவினைகளுக்கு லக்ஷணங்களைக்கூறவேண்டும். முதலில் எல்லாப் பிரமாணங்களுக்கும் பொது லக்ஷணங்கூறாமல் தனித்தனியே பிரமாணங்களுக்கு லக்ஷணங்கூறுதல் *சந்தர்ப்பத்திற்குப் பொருந்தாதானதால் முதலில் எல்லாப் பிரமாணங்கட்கும் பொதுவான லக்ஷணத்தைக் கூறுகிறார்—

दृष्टम्	प्रत्यक्षमும்
अनुमानम्	அநுமானமும
आप्तवचनं च	ஆப்தவசனமும்
प्रमाणम्	பிரமாணமாக
इष्टम्	அங்கீகரிக்கப்படுகின்றன.
सर्वप्रमाणसिद्ध-त्वात्	மற்றெல்லாப் பிரமாணங்களும் இவற்றிலேயே அடங்கிவிடுவதால்

---

* ஒருவன் ஒருவஸ்துவைப்பற்றிப் பொதுவாய்த்தெரிந்து கொண்டபிறகே அதன் உட்பிரிவினைகளைத் தெரிந்துகொள்ள விரும்புவானேயொழிய முதலிலேயே பிரிவினைகளைப்பற்றித் தெரிந்து கொள்ள முயர்ச்சிப்பதில்லை. ஆதலால் பொதுவான லக்ஷணத்தை முதலில் கூறி அதனால் அவ்வஸ்துவைப்பற்றி மொத்தமாய் ஓர் உணர்ச்சியையுண்டு பண்ணவேண்டும். பிறகு இதன் பிரிவினைகள் எவ்வளவு? எத்தனையன? என்று அறிய விருப்பமுண்டாகும். அதற்குப்பிறகே தனித்தனியே லக்ஷணங்களைக்கூறவேண்டும். இவ்விதமன்றி முதலிலேயே தனித்தனி லக்ஷணங்களைக் கூறுவது சந்தர்ப்பவிருத்தம் என்று அறியவும்.

"प्रमाणमिष्टम्" इति । अत्रच प्रमाणमिति समाख्या लक्ष्यपदम् । तन्निर्वचनं च लक्षणम् । प्रमीयते अनेनेति निर्वचनात् प्रमां प्रति करणत्व मवगम्यते । तच्चाऽसंदिग्धानधिगतविषया चित्तवृत्तिः । बोधश्च पौरुषेयः

(तत्)	அந்தப்பிரமாணம்
त्रिविधम्	மூன்றுவிதமாயுள்ளது.
प्रमेयसिद्धिः	ஒருவஸ்து இருப்பதாகச் சித்திப்பது
प्रमाणाद्धि	பிரமாணத்திலேலே தான் ஏற்படவேண்டும்.

(தா-ம்) இந்தச் சுலோகத்திலுள்ள **प्रमाणम्** என்றபதத்தை ஆவிருத்தி (இரண்டுதர மிருப்பதாய்ப் பாவித்தல்) செய்து கொண்டு ஒருபதம் லக்ஷ்யத்தைப்போதிப்பதாகவும், மற்றப்பதம் லக்ஷணத்தை விளக்குவதாகவும் அறியவேண்டும். ஆகவே அறிவதற்குச் சாதனமாயிருக்குகையே பிரமாணங்கட்குப்பொது லக்ஷணம். அந்தப்பிரமாணம் என்பது யாது? எனின்:—சந்தே ஹமற்றதும், மாறுதலற்றதும், இதற்குமுன் அறியப்படாத மான வஸ்துவை விஷயமாக்கிக்கொண்டு (பற்றிக்கொண்டு) ஏற்படுகின்ற சித்தவிருத்தியாம். போதம் என்பது புருஷ சம்பந்தமுள்ளது. அதாவது:—அந்தந்தவஸ்துக்களைப்பற்றிக் கொண்டு ஏற்படுகின்ற நிர்மலமான சித்தவிருத்தியில் புருஷன் பிரதிபலிக்கிறான். அந்தப்பிரதிபலித்தல் என்றபுருஷ சம்பந்த முள்ள சித்தவிருத்தியே "போதம்" என்றும் **प्रमा** என்றும் சொல்லப்படும். அதற்குச் சாதனமாயிருப்பதே பிரமாணம். சந் தேகமற்றதும், மாறுதலற்றதும், அறியப்படாததுமான வஸ்து வைப்பற்றிய சித்தவிருத்திதான் பிரமாணமாகும் என்றதால் தூரத்திலிருக்கும் வஸ்துவைப்பார்த்து சொல்பவெளிச்சத்தில் உண்டாகின்ற "கட்டையோ புருஷனோ" என்றசந்தேகரூப மான சித்தவிருத்தியும், தூரத்திலிருக்கும் மினுங்குசலைப்பார் த்து உண்டாகின்ற "வெள்ளி" என்ற விபரீதமான சித்தவிருத் தியும், முன் அறியப்பட்டவஸ்து வைப்பற்றியே உண்டாகின்ற "நினைவு" என்ற சித்தவிருத்தியும் பிரமாணமல்ல என்று ஏற் பட்டது.

फलं प्रमा, तत्साधनं प्रमाणमिति । एतेन संशयविपर्ययस्मृतिसाधनेष्वप्रमाणेष्वप्रसङ्गः ॥ संख्याविप्रतिपत्तिं निराकरोति—"त्रिविधम्" इति । तिस्रो विधा अस्य प्रमाणसामान्यस्य तत् त्रिविधम्, न न्यूनम्, नाप्यधिकमित्यर्थः विशेषलक्षणानन्तरं चैतदुपपादयिष्यामः ॥ कतमाः पुनस्तास्तिस्रो विधा इत्यत आह—"दृष्टमनुमानमाप्तवचनम्" इति। एतच्च लौकिकप्रमाणाभिप्रायेण ।

பிரமாணம் நான்கு என்று சிலரும், 6 என்று சிலரும், இரண்டுதான் என்று சிலரும் சொல்லுகின்றனராதலால் பிரமாணங்களின் எண்விஷயத்தில் பல விப்ரதிபத்திகள் (சித்தாந்தங்கள்) இருக்கின்றன. அவற்றை நிராகரிக்கிறார்— **त्रिविधमिति** । பிரமாணம் மூன்று பிரிவினையுள்ளது. இதை அவ்வவற்றிற்குத் தனித்தனியே லக்ஷணங்களைக் கூறியபிறகு யுக்திகளால் ஸ்திரப்படுத்துவாம். அம்மூன்றுவித பிரமாணங்கள் எவையெவை என்பதைக்கூறுகிறார்—**दृष्टमनुमानमाप्तवचनमिति** । பிரமாணம் பிரத்யக்ஷம், அநுமானம், ஆப்தவசனம் என்றுமூன்றுவிதமாயுள்ளது. இவ்விதம் சொன்னதற்கு "லோகத்தாரால் கையாளப்படும் பிரமாணம்மூன்று" என்று கருத்துக்கொள்ளவேண்டும். எனென்றால் லோகத்தாருக்கு அறிவைப்புகட்டுவதற்காகவே சாஸ்திரமேற்பட்டிருக்கின்றது. அவர்களுக்குத்தான் இச்சாஸ்திரத்திலதிகாரம். (கற்கமீயாக்யதை) இந்திரியத்தை (புருஷனின் சரீரத்திலிருக்கும் 7வதுதாதுவை) மேல்நோக்கிச்செல்லும்படிசெய்த யோகிகளுடைய அநுபவத்திற்கு விஷயமான *"ஆர்ஷஜ்ஞானம்" என்றபிரமாணம் ஒன்றிருப்பினும் அதுலௌகிகர்களுக்கு அறிவைப்புகட்டச் சாதனமாகமாட்டாதென்று இங்கு கூறப்படாமல் விடுக்கப்பட்டது.

---

* இப்பிரமாணத்தினால் ருஷிகள் முன் நடந்தவற்றையும், நடக்கப்போகின்றமையும் அறிவார்கள். இதையே நையாயிகர்கள் "யோகஜதர்மம்" என்கின்றனர். இதனாலேயே, யுகத்தின்முடிவில் மறைந்திருந்த வேதபாகங்களைக்கண்டு வெளியிட்டனர். மந்திரங்களோ ருஷிகள் செய்தனர் என்பதின் கருத்துமிதுவே என்றறியவும்.

यम्, लोकव्युत्पादनार्थत्वाच्छास्त्रस्य, तस्यैवात्राधिकारात् । आर्षं तु विज्ञानं योगिनामूर्ध्वस्रोतसां न लोकव्युत्पादनायालमिति सदपि नाभिहितम् अनधिकारात् ॥ स्यादेतत्, माभून्न्यूनम्, अधिकं तु कस्मान्न भवति? संगिरन्ते हि प्रतिवादिनः उपमानादीन्यपि प्रमाणानि इत्यत आह—"सर्व-प्रमाणसिद्धत्वात्" इति । एष्वेव दृष्टानुमानाप्तवचनेषु सर्वेषां प्रमाणानां सिद्धत्वात्=अन्तर्भावादित्यर्थः। एतच्चोपपादयिष्यत इत्युक्तम् ॥ अथ प्रमेय-व्युत्पादनाय प्रवृत्तं शास्त्रं कस्मात्प्रमाणं सामान्यतो विशेषतश्च लक्षयति?

சங்கை—இஃதல்லாமிருக்கட்டும். பிரமாணங்கள் மூன்றிற்குக்குறைவாக இருக்கவேண்டும். அதிகமாக ஏன் இருக்கக் கூடாது? பிரதிவாதிகள் உபமானம் முதலியவற்றையும் பிரமாண மாகக் கூறுகின்றனரே? என்றால் பதிலளிக்கிறார்—**सर्वप्रमाणसि-द्धत्वादिति** । நாம் கூடிய பிரத்யக்ஷம், அநுமானம், ஆப்தவசனம் என்ற மூன்றுவித பிரமாணங்களிலேயே மற்றப்பிரமாணங்க ளடங்கிவிடுகின்றன. ஆதலால் அவைதனிப் பிரமாணங்களல்ல. இவ்விஷயத்தைப் பற்றிப்பின்னர் வறைவதாய்முன்னரே கூறி யுளாம்.

சங்கை—பிரமேயங்களை நிரூபணஞ் செய்வதக்காகத் தொடங்கிய சாஸ்திரம், பிரமாணங்களுக்குப் பொதுவாயும், தனித்தனியும் லக்ஷணங்களை எதற்காகக் கூறுகின்றது? என்றால் பதிலளிக்கிறார்—**प्रमेयसिद्धिः प्रमाणाद्धि इति** । பிரமேயங்கள் பிர மாணங்களினாலேயே அறியப்படவேண்டி இருப்பதால் முத லில் பிரமாணங்கள் நிரூபிக்கப்படுகின்றன. இந்தச்சுலோகம் *அர்த்தக்கிரமத்தை அநுசரித்து பாடக்கிரமத்தைக் கவனியா மல் வியாக்யானம் செய்யப்பட்டது (எ-று)

---

* அநுஷ்டிக்கவேண்டிய காரியங்களுக்குக் கிரமத்தை ஏற்படுத்திக் கொள்ள श्रुति, अर्थ, पाठ, स्थान, मुख्य, प्रवृत्ति என்ற ஆறுபிரமாணங்க ளிருக்கின்றன. அவற்றுள் अर्थ என்ற ஒரு பிரமாணம். பிரயோஜனம்;

इत्यत आह—"प्रमेयसिद्धिः प्रमाणाद्धि" इति ॥ सिद्धिः=प्रतीतिः ॥ सेयमार्या अर्थक्रमानुरोधेन पाठक्रममनादृत्यैव व्याख्याता ॥ ४ ॥

संप्रति प्रमाणविशेषलक्षणावसरे प्रत्यक्षस्य सर्वप्रमाणेषु ज्येष्ठत्वात् तदधीनत्वाच्चानुमानादीनां, सर्ववादिनामविप्रतिपत्तेश्च तमेवतावल्लक्षयति—

मू० । प्रतिविषयाध्यवसायो दृष्टं त्रिविधमनुमानमाख्यातम् ।
तल्लिङ्गलिङ्गिपूर्वकमाप्तश्रुतिराप्तवचनं तु ॥ ५ ॥

ஐந்தாவது சூலோகம்

(அ-கை) இப்பொழுது தனித்தனியே பிரமாணங்கட்கு லக்ஷணங்கூறும் சந்தர்ப்பத்தில் பிரத்யக்ஷம் என்ற பிரமாணம் மற்றெல்லாப்பிரமாணங்களிலும் சிறந்ததாயிருப்பதாலும், அநுமானம்முதலிய பிரமாணங்கள் பிரத்யக்ஷத்தை அண்டி இருப்பதாலும், எல்லாவாதிகளாலும் இம்மது அங்கீகரிக்கப்பட்டிருப்பதாலும் பிரத்யக்ஷத்திற்கே முதலில் லக்ஷணங்கூறுகிறார்.

प्रतिविषयाध्य-वसायः	ஒவ்வொரு விஷயத்துடனும் சேர்ந்த இந்திரியத்தால் உண்டாகின்றக் ஞானமானது
दृष्टम्	பிரத்யக்ஷம் எனப்படும்.
अनुमानम्	அநுமானம்

பயன்; என்று அதன் பொருள். பாடம் என்றால் படிக்கப்படும் வாக்கியங்களின் முறை. "போஜனம் செய்துவை இலையைப்போடு" என்று சொன்னவிடத்தில் பிரயோஜனத்தை அனுசரித்து முதலில் இலையைப் போடவேண்டும், பிறகுபோஜனம் செய்துவைக்கவேண்டும் என்று கொள்ளுகிறோம். இதுவே அருத்தக்கிரமம். "காலையில் எழுந்திரு, கடவுள் த்யானஞ்செய், கைகால்களைக்கழுவி சுத்தஞ்செய்துகொள்" என்று சொன்னவிடத்தில் வாக்கியத்தின் முறையே அனுசரித்தே காரியங்களனுஷ்டிக்கப்படுகின்றன. இதுவேபாடக்கிரமமாம். இவற்றுள்பாடக்கிரமத்திலும் அர்த்தக்கிரமம் சிறந்தது என்று பூர்வமீமாம்சையில் 5வது அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"प्रतिविषयाध्यवसायो दृष्टम्" इति । अत्र "दृष्टम्" इति लक्ष्यनिर्देशः, परिशिष्टं तु लक्षणम् । समानासमानजातीयव्यवच्छेदो लक्षणार्थः । अवयवार्थस्तु——विषिण्वन्ति विषयिणमनुबध्नन्ति, स्वेनरूपेणनिरूपणीयं कुर्वन्तीति यावत् विषयाः पृथिव्यादयस्सुखादयश्च । अस्मदादीनामविषया स्तन्मात्रलक्षणाः योगिनामूर्ध्वस्रोतसां च विषयाः ।

लिङ्गलिङ्गिपूर्वकम् வ்யாப்யம், வியாபகம், பக்ஷதர்மதை இவை களைப்பற்றியக் ஞானத்தை முன்னதாக வுடையது. அதாவது இவைகளின் க்ஞானத்தாலுண்டாகின்றது.

तत् அந்த அநுமானம்

त्रिविधम् மூன்றுவிதமாக

आख्यातम् கூறப்பட்டுள்ளது.

आप्तवचनम् ஆப்தவசனம் என்ற பிரமாணம்

आप्तश्रुतिः பொருத்தமுள்ள வாக்யார்த்தக் ஞானரூபமாயுள்ளது.

(தா-ம்) **प्रतिविषयाध्यवसायो दृष्टम्** என்ற விடத்தில் **दृष्टम्** என்றபதம் லக்ஷ்யத்தைப் போதிக்கின்றது. மீதமுள்ளபதங்கள் லக்ஷணத்தைப்போதிக்கின்றன. ஒன்றிற்குலக்ஷணங் கூறுவதின் பிரயோஜனம் என்னை? எனின்—சமான ஜாதீயங்களிலிருந்தும் (அதைப்போன்றவஸ்துக்களிலிருந்தும்) அசமான ஜாதீயங்களிலிருந்தும் (அதற்கு முற்றிலும் வேறுபட்டவஸ்துக்களிலிருந்தும்) ஒன்றை வேறுபட்டதாயறிவதேயாம். உதாஹரணம்:—பிரத்யக்ஷத்திற்கு, பிரமாணமாயிருத்தல் என்றபதுதர்மத்தால் சமான ஜாதீயமாயிருப்பது அநுமானம். அப்பிரமாணமான சம்யம் முதலியன அசமான ஜாதீயமாயுள்ளன. இவ்விரண்டிலும் வேறுபட்டதாய் பிரத்யக்ஷம் என்பது லக்ஷணத்தாலறியப்படுகிறது.

विषयं विषयं प्रति वर्तत इति प्रतिविषयम्=इन्द्रियम्। वृत्तिश्च सन्निकर्षः, अर्थसन्निकृष्टमिन्द्रियमित्यर्थः, तस्मिन् अध्यवसायस्तदाश्रित इत्यर्थः। अध्यवसायश्च बुद्धिव्यापारो ज्ञानम्, उपात्तविषयाणामिन्द्रियाणां वृत्तौ सत्यां बुद्धेस्तमोऽभिभवे सति यस्सत्त्वमुद्रेकः सोऽध्यवसाय इति वृत्तिरिति ज्ञानमिति चाख्यायते। इदं तावत्प्रमाणम्। अनेन यश्चेतनाशक्तेरनुग्रह-

---

ஒருவஸ்துவைக் கண்டவுடன் ஓர்விதமான உணர்ச்சியுண்டாகின்றது. அவ்வுணர்ச்சிக்கு நாமரூபம் இயற்கையில் கிடையாது. அதற்கு நாமரூபத்தை எதுகற்பிக்கின்றதோ அதுவே விஷயம் எனப்படும். மரத்தைக்கண்டவுடன் உண்டாகின்ற உணர்ச்சியை "மரம்" என்ற உணர்ச்சியென்கிறோம். ஆதலால் மரம் என்பது விஷயம். இவ்விதம் நம்போன்றவர்களின் அறிவுக்கு விஷயமாகின்ற பிருதிவீமுதலியனவும், சுகம் முதலியனவும், யோகிகளின் அறிவுக்குமாத்திரம் விஷயமாகின்ற பிருதிவீ முதலியவற்றின் தன்மாத்திரைகளும் "விஷயம்" என்ற பதத்தின்பொருள். **प्रति** என்றபதத்திற்குச் சேர்ந்துள்ளது என்றுபொருள். எதுசேர்ந்துள்ளது என்றால் "இந்திரியம்" என்று ஏற்படுகிறது. (இங்கு) இந்திரியங்களுக்கு விஷயங்களுடன் விருத்தி என்பது சன்னிகர்ஷ (சம்பந்த) ரூபம். ஆகவே **प्रतिविषय** என்றபதத்திற்கு அந்தந்த விஷயத்துடன் சேர்க்கையை அடைந்த இந்திரியம் என்ற பொருள் மொத்தமாகக்கிடைக்கின்றது. விஷயத்திற்கும் இந்திரியத்திற்கும் சம்பந்த மிருக்கும் பொழுது அச்சம்பந்தத்தை ஆசிரயித்த அத்யவசாயம் ஏற்படுகின்றது. புத்தி வியாபாரரூபமான க்ஞானம் அத்யவசாயமெனப்படும். (தானிருக்குமிட மிருந்தே) *விஷயத்தைப்பெற்ற

---

* சாங்கிய சித்தாந்தத்தில் இந்திரியங்கள் தானிருக்கு மிடத்திலேயே இருக்கின்றனவென்றும், வெளியுள்ள விஷயங்களே இந்திரியங்களிருக்குமிடம் வருகின்றன வென்றும், அவ்விதம் விஷயங்கள் தன்னிடம் வந்ததும் ஏற்படும் இந்திரியங்களுக்கும் விஷயங்களுக்கும் உள்ள சம்பந்தமே விருத்தியென்றும் சன்னிகர்ஷம் என்றும் கொள்ளவேண்டுமென்பதைக் காட்டவேண்டுவதற்காகவே இங்கு "உபாத்த விஷயாணும் இந்திரி

स्तत् फलं प्रमा बोधः॥ बुद्धितत्वं हि प्राकृतत्वादचेतनमिति तदीयोऽध्यवसायोप्यचेतनो घटादिवत्। एवं बुद्धितत्वस्य सुखादयोऽपि परिणामभेदा अचेतनाः। पुरुषस्तु सुखाद्यननुषङ्गी चेतनः। सोयं बुद्धितत्ववर्तिना ज्ञानसुखादिना तत्प्रतिबिंबितस्तच्छायापत्त्या ज्ञानसुखादिमानिव भवतीति चेतनोऽनुगृह्यते। चितिच्छायापत्त्याअचेतनापि बुद्धिस्तदध्यवसायोप्यचेतनश्चेतनवद्भवतीति। तथाच वक्ष्यति—

இந்திரியங்களுக்கு (தன்னிடம் வந்த விஷயங்களுடன்) விருத்தி (சன்னிகர்ஷம்-சம்பந்தம்) இருக்கும் பொழுது அந்தக் காரணம் என்ற புத்தியின் தமோகுணம் குறைவை அடையவே சத்துவ குணம்சத்திற்கு ஆதிக்யம் உண்டாகின்றது இதையே "அத்யவசாயம்" "விருத்தி" "க்ஞானம்" என்று அழைக்கிறோம். இதுதான் பிரத்யக்ஷம் என்ற பிரமாணம். இந்தப்புத்திவிருத்திரூபமானக் ஞானத்தால் புருஷனுக்குண்டாகின்றயாதொரு அனுக்கிரஹம் என்றசம்பந்தமுண்டோ அது

யாணம் வ்ருத்தெளசத்யாம்" என்று சொன்னதாக எற்படுகிறது. எனைய சித்தாந்தங்களில் சக்ஷுரிந்திரியம் மட்டும் விஷய தேசம் செல்லுகின்ற தென்றும், மற்றும் நான்கு இந்திரியங்கள் இருக்குமிடத்திற்கே விஷயங்கள் வருகின்றனவென்றும் சொல்லப்படுகின்றது. வேதாந்த பரிபாஷையில் சுரோத்ர இந்திரியமானது விஷயதேசஞ் சென்றே சப்தத்தைக் கிரகிக்கின்றது என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆயினும் அது **योसौ दूरादाकर्णयतः कर्णपथमवतरति सशब्दः** "எது தூலயில் நின்று கேட்பவனின் காதின்வழியை வந்தடைகின்றதோ அதுவே சப்தம்" என்று சூத்திர பாஷ்யத்தில் தேவதாதி காரணத்தில் சொல்லியிருப்பதற்கு மாறுகஇருப்பதுடன் எனை சித்தாந்தங்களுக்கும் அனுபவத்திற்கும் முற்றும் மாறுகவே காணப்படுகின்றது. ஆகவே எந்த இந்திரியங்களும் விஷயதேசம் செல்லுகின்றதில்லை யென்றும் விஷயங்களே இந்திரியங்களிருக்குமிடத்திற்கு வாயுவின் உதவியால் கொண்டுவரப்படுகின்றன வென்றும் தக்கால அனுபவத்திற் கண்கூடாகக் கண்டிருப்பதால் இங்கு கூறினதேதயுக்தி அனுபவம் இரண்டிற்கும் பொருத்தமானது என்றறியவும்.

तस्मात्तत्संयोगादचेतनं चेतनावदिव लिङ्गम् ।
गुणकर्तृत्वेऽपि तथा कर्तेव भवत्युदासीनः ॥ इति (कारिका-२०.)

अत्र अध्यवसायग्रहणेन संशयं व्यवच्छिनत्ति। संशयस्य अनवस्थित-ग्रहणेनानिश्चितरूपत्वात्। निश्चयोऽध्यवसाय इतिचानर्थान्तरम्। विषयग्रहणेन चासद्विषयं विपर्ययमपाकरोति। प्रतिग्रहणेन च इन्द्रियार्थसन्निकर्षसूचनादनुमानस्मृत्यादयश्च पराकृता भवन्ति। तदेवं समानासमानजातीयव्यवच्छेद-

---

தான் பிரமாணத்தின் பயன் என்றும், **प्रमा** என்றும், போத மென்றுமறியவேண்டும். அதாவது:— புத்திதத்துவம் என்பது பிரகிருதியின் விகாரமாயிருப்பதுபற்றி அசேதனமாயிருப்பதால் அதன் அத்யவசாயமும் குடம் முதலியவற்றைப்போல் அசேதநமாயிருக்கின்றது. இவ்விதமே புத்திதத்துவத்தின் விகாரமான சுகம்முதலியனவும் அசேதனங்களே. புருஷனென்னுமுண்மையில் சுகம்முதலியவற்றின் சம்பந்தமற்றவனாகவும் சேதனனாகவுமிருக்கிறான். அந்தப்புருஷன் நிர்மலமான புத்திதத்துவத்தில் பிரதிபலிக்கின்றான். அதனால், அழுக்கடைந்த கண்ணாடியில் பிரதிபலித்தமுகம் விவேகமற்றவனுக்கு அழுக்குள்ள தாய்ப்புலப்படுவதுபோல் புருஷனும் அந்தக்கரணத்திலுள்ள க்ஞானம் சுகம் முதலியவற்றோடு கூடியவன்போல் தோன்றுகிறான். இதுதான் க்ஞானம் முதலியவற்றோடு புருஷனுக்கு ஏற்படும்சம்பந்தம். அசேதனமானபுத்தியும், அசேதனமான அத்யவசாயமும் உண்மையில் சைதன்யமற்றதாயினும் சேதனனான புருஷனின் பிரதிபலனத்தையடைந்தபடியால் நன்றாய்க் காய்ச்சப்பட்ட இரும்பே நேரில் நெருப்பென்றுதோன்றுவதுபோல் இவைகளும் சைதன்யமுள்ளவைகள் போலாகின்றன. இவ்விஷயத்தைப்பற்றி 20வது சுலோகத்தில் விரிவாய்ச் சொல்லப்போகிறார்.

प्रतिविषयाध्यवसायः என்ற பிரத்யக்ஷலக்ஷணத்தில் **अध्यवसाय** என்றபதம் சேர்த்தபடியால் நிச்சயரூபமாயில்லாத சம்சயக்ஞா

कत्वात् "प्रतिविषयाध्यवसाय" इति दृष्टस्य संपूर्णं लक्षणम्। तन्त्रान्तरेषु लक्षणान्तराणि तैर्थिकानां न भूषितानि, न दूषितानि, विस्तरभयादिति।

नानुमानं प्रमाणमिति वदता लोकायतिकेन अप्रतिपन्नस्सन्दिग्धो विपर्यस्तो वा पुरुषः कथं प्रतिपद्येत? न च पुरुषान्तरगता अज्ञानसन्देहविपर्ययाः शक्या अदर्शिना प्रत्यक्षेण प्रतिपत्तुम्। नापि प्रमाणान्तरेण, अनभ्युपगमात्।

னம்பிரத்யக்ஷமல்ல வென்று விலக்கப்படுகிறது. நிச்சயம், அத்யவசாயம் இரண்டும் ஒரேபொருளையுடைய பதங்கள். **विषय** என்றபதத்தைச் சேர்த்தபடியால் விஷயமன்றியே உண்டாகின்ற ப்ரமரூபமானக்ஞானம் பிரத்யக்ஷமல்ல வென்றுவிலக்கப்படுகிறது. **प्रति** என்றபதத்தால் இந்திரியம்பொருள் இவற்றின் சம்பந்தம் தெரிவிக்கப்படுவதால் அதன்றியே உண்டாகின்ற அநுமானம், நிஜனவுமுதலியக்ஞானங்கள் ப்ரத்யக்ஷமல்லவென்று விலக்கப்படுகின்றன. ஆகவே சமானஜாதீயங்களான அநுமானம் முதலியவற்றினின்றும், அசமானஜாதீயங்களான ப்ரமம் முதலியவற்றினின்றும் பேதத்தைப்புகட்டுவதால் **प्रतिविषयाध्यवसायः** என்பது பிரத்யக்ஷத்தின் தோஷமற்ற லக்ஷணம் என்று ஏற்படுகிறது. வேறு சாஸ்திரங்களில சாஸ்திரக்காரர்களாற் சொல்லப்பட்ட பிரத்யக்ஷத்தின் வேறு லக்ஷணங்கள் கிரந்தம் விரிவடையுமென்ற பயத்தால் போற்றப் படவுமில்லை, தூற்றப் படவுமில்லை என்றறியவும்.

அநுமானம் பிரமாணமல்ல வென்றுசொல்லும் லோகாயதிகனுல், இவன் இவ்விஷயத்தை முற்றிலுமறியாதவன், இவன் இவ்விஷயத்தில் சந்தேஹமுள்ளவன், இவன் இவ்விஷயத்தை மாறுபாடாகக்கிரஹித்தவன் என்று எவ்விதம் ஓர் புருஷன் அறியப்படுவான். வேறுபுருஷனிடமுள்ள அக்ஞானம் (அறியாமை) சந்தேஹம், ப்ரமம் இவைகள் லௌகிகர்களால் தனில் பிரத்யக்ஷமாய் அறியப்படுமா? மற்றப்பிரமாணங்களை ஒத்துக் கொள்ளவில்லையாதலால் வேறுப் பிரமாணங்களாலறியப்படு

अनवधृताज्ञानसंशयविपर्ययस्तु यं कं चन पुरुषं प्रति वर्तमानोऽनवधेयवचनतया प्रेक्षावद्भिरुन्मत्तवदुपेक्ष्येत । तदनेनाज्ञानादयः परपुरुषवर्तिनो अभिप्रायभेदाद्वचनभेदाद्वा लिङ्गात् अनुमातव्याः, इत्यकामेनापि अनुमानं प्रमाणमभ्युपेयम् । तच्च प्रत्यक्षकार्यत्वात् अनुमानं प्रत्यक्षानन्तरं लक्षणीयम् । तत्रापि सामान्यलक्षणपूर्वकत्वाद्विशेषलक्षणस्यानुमानसामान्यं तावल्लक्षयति—तल्लि-

---

கின்றன என்றும் நாஸ்திகன் சொல்லமுடியாது. இவன் இவ்விஷயத்தைப்பற்றி நன்றுய்த்தெரிந்து கொள்ளாதவன்; ஆதலால் இவனுக்கு இவ்விஷயத்தைப்பற்றி இவ்விதம் போதிக்கவேண்டும்; இவன் இவ்விஷயத்தில் சந்தேகங்கொண்டிருக்கிறன், அல்லது இவ்விஷயத்தை விபரீதமாகக்கிரஹித்திருக்கிறன்; ஆதலால் இவனுக்குத்தக்கபடி பேசவேண்டும் என்று தெரிந்து கொள்ளாமலே யாதானும் ஓர்புருஷனிடம் ஒருவன் வியஹரிப்பானேல் அவனது வார்த்தைகளைக் கவனிப்பதற்குரியகாரணமில்லாமையால் அவனைப்"பித்தன்"என்று அறிஞர் உபேக்ஷித்துவிடுவர். ஆதலால் மற்றவனிடமுள்ள அறியாமை முதலியவைகள் மாறுபட்ட அவனது அபிப்பிராயம், வார்த்தை இவைகள் ரூபமான லிங்கத்தை (அடையாளத்தை) க்கொண்டே ஊஹிக்கவேண்டுமாதல் பற்றி இஷ்டப்படாதவனுலும். அநுமானம் ப்ரமாணம் என்றே ஒத்துக்கொள்ளத்தக்கது. பிரமாணங்களுள் அனுமானம் என்பது ப்ரத்யக்ஷத்தின் *காரியமாகஇருப்பதால் பிரத்யக்ஷ லக்ஷணங்கூறிய பிறகு அநுமானத்திற்கு லக்ஷணங் கூறவேண்டும். அநுமானத்தின் உட்பிரிவினைகளுக்கு லக்ஷணங்கூறுதல் பொதுலக்ஷணத்தை முன்னிட்டே ஏற்படவேண்டுமாதல்பற்றி முதலில் அநுமானத்

---

*தூரத்திலிருக்கின்ற புருஷன் மலையிற் புகையைக் கண்டு மலை நெருப்புள்ளது என்று ஊஹிக்கிறன். இதுவே அநுமானமெனப்படும். மலைநெருப்புள்ளது என்றக் ஞானம் மலையிற் புகையை நேரில் காணுதலாலுண்டாகின்றது. அந்தக் ஞானம் பிரத்யக்ஷம். ஆதலால் அநுமானம் பிரத்யக்ஷத்தின் காரியமாகின்றது என்றறியவும்.

ङ्गलिङ्गिपूर्वकमिति। लिङ्गं व्यप्यम्। लिङ्गि व्यापकम्। शङ्कितसमारोपितोपाधि-निराकरणेन च स्वभावप्रतिबद्धं व्याप्यम्, येन प्रतिबद्धं तद्व्यापकम्। लिङ्ग-

---

கிற்குப் பொதுலக்ஷணம் கூறுகிறார்:—**तल्लिङ्गलिङ्गिपूर्वकम् इति**। லிங்கம் என்றால் வியாப்பியம் என்று பொருள். லிங்கி என்றால் வியாபகம் என்றுபொருள். *சந்தேஹிக்கப் பட்டதாகவோ, ப்ரமிக்கப்பட்டதாகவோவுள்ள உபாதிகளற்றதாயும் சுவபாவத்திலேற்பட்ட சம்பந்தமுள்ளதாயுமிருப்பது (ஹேது) வியாப்யம் எனப்படும். எதுடன் சேர்ந்திருக்கிறதோ அது வியாபகம் எனப்படும். விஷயத்தைக் குறிக்கின்ற **लिङ्गलिङ्गि** என்ற பதத்திற்கு அவைகளை விஷயமாக்கிக் கொண்டு ஏற்படுகின்ற க்ஞானத்தைப் பொருளாகக்கொள்ளவேண்டும். ஆதலால் புகை முதலியன வியாப்யம், நெருப்புமுதலியன வியாபகம் என்றக் ஞானத்தை முன்னதாகவுடையது அநுமானம் என்று ஏற்படுகிறது. **लिङ्गि** என்றபதத்தை இரண்டுதாமுச்சரித்து (பாவித்துக்) கொள்ளவேண்டும். ஒருலிங்கி என்றபதத்திற்கு ஹேதுவுள்

---

* தூரத்திலிருக்கின்ற புருஷன் மலையிற் புகையை மட்டும் கண்டு மலை நெருப்புள்ளது என்று ஊஹிக்கிறான் என்று எடுத்துக் கொள்வோம். இவ்விடத்தில் புகை வியாப்யம். நெருப்பு வியாபகம். இவ்விதமே மற்ற விடங்களிலும் ஹேது வெல்லாம் வியாப்யம் என்றும், சாத்தியமெல்லாம் வியாபகமென்றும் அறியவேண்டும். புகைக்கும் நெருப்புக்கும் சுவபாவத்தில் ஒரு சம்பந்தமிருக்கிறது. அதுவே வியாப்தி எனப்படும். அதாவது:—ஹேது இருக்கின்ற விடமெல்லாமிருக்கின்ற சாத்தியத்துடன் கூடியிருத்தல். பாகிருதஸ்தலத்தில் புகை ஹேது. நெருப்பு சாத்தியம். புகை இருக்கின்ற விடமெல்லாம் நெருப்பு இருக்கிறது. அத்தகைய சாத்தியத்துடன் புகை கூடியிருப்பதால் வியாப்யமாகின்றது. புகைக்கு உபாதியுமில்லை. சாத்திய மிருக்கின்ற இடமெல்லா மிருக்கின்றதாயும், ஹேது விருக்கின்ற சிலவிடங்களி லில்லாததாயு மிருப்பதே உபாதியாகும். உதாஹரணம்:— நெருப்பிருப்பதால் புகையு மிருக்க வேண்டு மென்று ஒருவன் ஊஹித்தான் என்று வைத்துக்கொள்வோம் இவ்விடத்தில் களிகின் [illegible]

लिङ्गिग्रहणेन विषयवाचिना विषयिणं प्रत्ययमुपलक्षयति । धूमादिर्व्याप्यो वह्न्यादिर्व्यापक इति यः प्रत्ययस्तत्पूर्वकम् । लिङ्गिग्रहणं च आवर्तनीयम् । तेन च लिङ्गमस्यास्तीति पक्षधर्मताज्ञानमपि दर्शितं भवति। तद्व्याप्यव्यापकभावपक्ष-धर्मताज्ञानपूर्वकमनुमानमित्यनुमानसामान्यं लक्षितम् ।

ளது என்று பொருள்கொள்வதால் *பக்ஷதர்மதாக்ஞானமும் காண்பிக்கப்பட்டதாயாகின்றது. ஆகவே வியாப்தி பக்ஷதர்மதை (ஹேதுவானது பக்ஷத்திலிருப்பது) இவைகளின் க்ஞானத்தாலுண்டாகின்ற உஹமே அநுமானம் என்று அநுமானத்திற்குப் பொதுலக்ஷணங் கூறியதாக ஏற்படுகின்றது.

வேறு சாஸ்திரங்களில் லக்ஷணங்கள் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளதும் தமக்கு இஷ்டமானதுமான அநுமானத்தின் பிரிவினைகளைச்சொல்லுகிறார்—**त्रिविधमनुमानमाख्यातमिति**. முன்னர்

னின்—பிரகிருதஸ்தலத்தில் சாத்தியம் புகை. ஹேது நெருப்பு. புகை இருக்கின்ற விடமெல்லாம் ஈரவிரகின் சேர்க்கை இருக்கின்றது. நன்ரூய்க் காய்ச்சப்பட்ட இரும்பில் நெருப்பிருந்தாலும் ஈரவிரகின் சேர்க்கையில்லையாதலால் நெருப்பு இருக்குமிடமெல்லாம் ஈரவிரகின் சேர்க்கை இருப்பதாகச் சொல்வதற்கில்லை. ஆதலால் நெருப்பால் புகையைச்சாதிக்கின்றவிடத்தில் ஈரவிரகின் சேர்க்கை உபாதியாகின்றது. இத்தகைய உபாதியின் சேர்க்கையிருப்பதாய்ச் சந்தேஹமேற்பட்டபோதிலும் நிச்சயமேற்பட்டாலும், ப்ரமமுண்டானாலும் ஹேதுவிருக்கின்ற இடமெல்லாமிருக்கின்ற சாத்யத்துடன் இந்தஹேது கூடியிருக்கிறது என்றவியாப்திக்ஞானம் எற்படுவதில்லை என்றறியவும்.

*ஹேதுவானது பக்ஷத்திலிருக்கிறது என்றக்ஞானம் "பக்ஷதர்மதாக்ஞானம்" என்றுசொல்லப்படும். எந்த இடத்தில் ஒருவஸ்துவானது இருப்பதாய் உஹிக்கப்படுகின்றதோ அது "பக்ஷம்" எனப்படும். எதைக்கொண்டு ஒன்றை உஹிக்கின்றோமோ அதுஹேது எனப்படும். உதாஹரணம்:—மலை முதலியன பக்ஷம். புகைமுதலியன ஹேதுவென்று அறியவும்.

अनुमानविशेषान् तन्त्रान्तरलक्षितानभिमतान् स्मारयति—त्रिविधमनुमानमाख्यातम् इति । तत्=सामान्यतो लक्षितमनुमानं विशेषतस्त्रिविधम् —पूर्ववत्, शेषवत् सामान्यतो दृष्टं चेति। तत्र प्रथमं तावद्द्विविधम्—वीतमवीतं च अन्वयमुखेन प्रवर्तमानं विधायकं वीतम्, व्यतिरेकमुखेन प्रवर्तमानं निषेधकमवीतम् ।

பொதுவாய் நிரூபிக்கப்பட்ட அநுமானம் பூர்வவத், சேஷவத், சாமாந்யதோ திருஷ்டமென்று மூன்று விதமாயிருக்கின்றது. அநுமானத்தை முதலில் வீதமென்றும் அவீதமென்றும் இரண்டு விதமாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். *அந்வய வியாப்திக்ஞானத்தாலுண்டாகின்ற சாத்திய க்ஞானம் வீதமென்றும், வ்யதிரேக வியாப்தி க்ஞானத்தாலுண்டாகின்ற சாத்தியக்ஞானம் அவீதமென்றும் சொல்லப்படும். அவற்றுள் அவீதம் என்ற அநுமானம் சேஷவத் எனப்படும். ஏனென்றால்:—சேஷ என்றபதத்திற்கு மீதமுள்ளது என்று பொருள். அதை விஷயமாக்கிக்கொண்டு எந்த அநுமானக்ஞான முண்டாகின்றதோ அது சேஷவத் என்றுசொல்லப்படுகிறது. வாத்ஸ்யாயன நியாய பாஷ்யத்தில் **प्रसक्तप्रतिषेधे अन्यत्राप्रसङ्गात् शिष्यमाणे संप्रत्ययः परिशेषः** என்று சேஷவத் என்ற அனுமானத்திற்கு லக்ஷணங் கூறியிருக்கிறார்.

வியாப்தி இரண்டுவிதம் 1 அந்வயவியாப்தி. 2 வ்யதிரேகவியாப்தி. ஹேது விருக்கின்ற இடமெல்லாம் சாத்தியமிருப்பதாய் அறிவது அந்வய வியாப்திக்ஞானம். சாத்யமில்லாத விடங்களில் ஹேதுவில்லை என்று அறிவது வ்யதிரேகவியாப்திக்ஞானம். சிலஹேதுக்களில் இரண்டு விதவியாப்த்திக்ஞானமும் சிலஹேதுக்களில் இவற்றுள் ஒன்றுமாத்திரமிருக்கலாம். அந்வயவியாப்த்தி சம்பவிக்கின்ற ஹேதுவிலுல் உண்டாகின்ற அநுமானக்ஞானம் வீதமென்று சொல்லப்படுவதாகவும், வ்யதிரேகவியாப்த்தி மாத்திரம் சம்பவிக்கின்றஹேதுவிலுல் உண்டாகின்ற அநுமானக்ஞானம் அவீதம் என்று சொல்லப்படுவதாகவும் அறியவேண்டும்.

तत्रावीतं शेषवत् । शिष्यते परिशिष्यते इति शेषः, स एव विषयतया यस्यास्त्यनुमानज्ञानस्य तच्छेषवत् । यदाहुः---"प्रसक्तप्रतिषेधे, अन्यत्राप्रसङ्गात् शिष्यमाणे संप्रत्ययः परिशेषः" इति (वात्स्यायनन्याय भाष्यम्) अस्य चावीतस्य व्यतिरेकिण उदाहरणमग्रेऽभिधास्यते । वीतं द्वेधा —पूर्ववत्, सामान्यतो दृष्टं च । तत्रैकं दृष्टस्वलक्षणसामान्यविषयं यत्तत्पूर्ववत्, पूर्वम्=प्रसिद्धम्, दृष्टस्वलक्षणसामान्यमिति यावत् । तदस्य विषयत्वेनास्त्यनुमानज्ञानस्येति पूर्ववत् । यथा धूमाद्वन्हित्वसामान्यविशेषः पर्वते अनुमीयते, तस्य वन्हित्वसामान्यविशेषस्य स्वलक्षणं वन्हिविशेषो दृष्टो रसवत्याम् ।

இதன் பொருள்:—**प्रसक्त प्रतिषेधे**=எந்தவிடத்தில் எந்த வஸ்து இருக்கக்கூடுமோ அவ்விடத்தில் அஃதில்லை என்று பிரபலப்பிரமாணத்தாலறியப்பட்ட பிறகு **अन्यत्र**=இருக்கக்கூடியதாக ஊஹிக்கப்படும் வேறு இடத்தில் **अप्रसङ्गात्**=இருப்பதற்குப் பிரசக்தியே இல்லாமையால் **शिष्यमाणे**=மீதமுள்ள இடத்தில் **संप्रत्ययः**=இருப்பதாய் ஏற்படும்யதார்த்தக்ஞானம் என்பது. வியதிரேகவியாப்திக் ஞானத்தாலுண்டாகின்றதும், அவீதம் என்று பெயர்கொண்டதுவுமான அநுமானத்திற்கு உதாஹரணம் பின்னர் **असदकरणात्** என்ற 9வதுசுலோகத்தில் தெளிவாய்ச் சொல்லப்படப்போகிறது. பூர்வவத்என்றும், சாமான்யதோதாதிருஷ்டமென்றும் வீதம் இரண்டுவிதமாகப்பிரிக்கப்படும். அவற்றுள் முதலாவது:-எது அனுமிப்பதற்குமுன் பார்க்கப்பட்டவ்யக்தியிலிருக்கின்ற தர்மமுள்ளதை விஷயமாக்கிக்கொண்டு ஏற்படுகின்றதோதா அது "பூர்வவத்" எனப்படும். **पूर्वम्** என்றபதத்திற்கு பிரசித்தம் என்றுபொருள். அதாவது:—அனுமிப்பதற்குமுன் அறியப்பட்ட வஸ்துவிலிருக்கின்ற தர்மமுள்ளது. அத்தகைய தர்மமுள்ளது இந்த அனுமானக்ஞானத்திற்கு விஷயமாகின்றது. ஆனதுபற்றி அது 'பூர்வவத்' எனப்படுகின்றது. உதாஹரணம்:—புகையினால் வன்ஹித்வம் என்ற தர்மமுள்ள நெருப்பானது மலையில் அனுமிக்கப்படுகின்றது என்று எடுத்துக்கொள்வோம். இவ்விடத்தில் அந்தவன்ஹித்வம் என்ற தர்மமுள்ள

अपरं च वीतं सामान्यतो दृष्टम् अदृष्टस्वलक्षणसामान्यविषयम्। यथाइन्द्रिय-विषयमनुमानम्। अत्र हि रूपादिविज्ञानानां क्रियात्वेन करणवत्वमनुमीयते। यद्यपि करणत्वसामान्यस्य च्छिदादौ वास्यादि स्वलक्षणमुपलब्धम्, तथापि यज्जातीयं रूपादिज्ञाने करणत्वमनुमीयते तज्जातीयस्य न दृष्टं स्वलक्षणं प्रत्यक्षेण। इन्द्रियजातीयं हि तत्करणम्, न चेन्द्रियत्वसामान्यस्य स्वलक्षण-मिन्द्रियविशेषः प्रत्यक्षगोचरोऽवाग्दृशाम्, यथा वन्हित्वसामान्यस्य स्वक्षणं वन्हिः। सोऽयं पूर्ववतः सामान्यतो दृष्टात् सत्यपि वीतत्वेन तुल्यत्वे विशे-

---

நெருப்பானது சமயல்செய்யுமிடத்தில் பார்க்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது வீதமான சாமான்யதோ திருஷ்டமென்பது அனுமிப்பதற்குமுன் அறியப்படாதவ்யக்தியினிடமுள்ள தர்மமுள்ளதை விஷயமாயுடையது. உதாஹரணம் இந்திரியமிருப்பதாயனுமிப்பது. அதாவது:—ரூபம் முதலியவற்றைப்பற்றிய அறிவானது கிரியாரூபமாயிருப்பதால் கரணம் (அசாதாரணகாரணம்) உள்ளதாகவே இருக்கவேண்டும் என்று அனுமிக்கப்படுகிறது. இவ்விடத்தில் அனுமிக்கப்படுகின்ற கரணத்வம் என்ற தர்மமுள்ளகரணமானது இதற்குமுன் ஓரிடத்திலும் அறியப்பட்டதல்ல. எண்டிடப்பது முதலியக்ரியைகளில் கரணத்வம் என்ற தர்மமுள்ள வாச்சிமுதலிய கரணங்கள் பார்க்கப்பட்டிருக்கின்றனவாயினும் ரூபம்முதலியவற்றைப் பற்றிய அறிவில் எந்தத் தர்மமுள்ளகரணம் அனுமிக்கப்படுகின்றதோ அந்தத்தர்மமுள்ள கரணம் பிரத்யக்ஷமல்ல. நாம் இப்பொழுது அனுமிக்கின்ற கரணமானது இந்திரியத்வம் என்ற தர்மமுள்ளது. அந்த இந்திரியத்வம் என்றதர்மமுள்ள இந்திரியமானது, வந்ஹித்வம் என்ற தர்மமுள்ள நெருப்பானது பிரத்யக்ஷமாயாவதுபோல் யோகப்பயிர்ச்சியற்றவர்க்குப் பிரத்யக்ஷமாயாகுமா? ஆவதில்லை. பூர்வவத், சேஷவத் இரண்டிடர்க்கும் வீதம் என்றமுறையில் ஒற்றுமை இருப்பினும் சாமான்யதோ திருஷ்டானுமானத்தைக் காட்டிலும் பூர்வத்என்ற அனுமானத்திற்குரிய வேற்றுமை இதுவே. **सामान्यतो दृष्टम्** என்றதின்பொருள்:—**दृष्टम्**=என்றபதத்

ः। अत्र च दृष्टं=दर्शनम्, सामान्यत इति सामान्यस्य, सार्वविभक्तिकस्तसिः। अदृष्टस्वलक्षणस्य सामान्यविशेषस्य, दर्शनं सामान्यतो दृष्टमनुमानमित्यर्थः। सर्वं चैतदस्माभिर्न्यायवार्तिकतात्पर्यटीकायां व्युत्पादितमितिहोक्तं विस्तरभयात्॥

प्रयोजकवृद्धशब्दश्रवणसमनन्तरं प्रयोज्यवृद्धप्रवृत्तिहेतुज्ञानानुमानपूर्वकत्वात् शब्दार्थसंबंधग्रहस्य, स्वार्थसंबंधज्ञानसहकारिणश्च शब्दस्यार्थप्रत्यायकत्वा

பிற்கு பிரத்யக்ஷம் என்று பொருள். **सामान्यतः** என்றவிடத்தில் எல்லாவிபக்தியின் அர்த்தத்திலும்வருகின்ற தஸில்பிரத்யமிருக்கின்றது. அனுமானத்திற்கு முன்பார்க்கப்படாதவ்யக்தியிலிருக்கின்ற தர்மமுள்ளதையறிதல் **सामान्यतो दृष्टम्** என்றதின்பொருள் என்று எற்படுகின்றது. இவ்விஷயமெல்லாம் நம்மால் நியாயவார்திகதாத்பர்ய டீகை என்ற புஸ்தகத்தில் நிரூபணஞ் செய்ப்பட்டிருப்பதுபற்றி கிரந்தம் விஸ்தாரமடையுமென்ற பயத்தால் இங்கு விஸ்திரிக்காமல் விடுக்கப்பட்டன.

பிரயோஜகவிருத்தனின் வார்த்தையைக் கேட்டவுடன் பிரயோஜ்யவிருத்தனுக்குப் பிரவிருத்தியுண்டாகின்றது. அவனது பிரவிருத்திக்கு வாக்யார்த்தக்ஞானம்காரணம். பிரவிருத்திகாரணமான க்ஞானத்தை விஷயமாகவுடைய அனுமானத்தை முன்னிட்டே சப்தம் அர்த்தம் இவற்றின் சம்பந்தக் ஞானமுண்டாகின்ற படியாலும், தனது அர்த்தத்துடனுள்ள சம்பந்தத்தின் க்ஞானத்தை சஹாயமாகவுடைய சப்தத்திற்கே அந்தப் போதத்தை யுண்டுபண்ணக் கூடியசக்தி இருப்பதாலும் சப்தப்பிரமாணத்திற்கு அனுமானத்தை முன்னிட்டிருத்தல் அசவசியமாகின்றது என்ற காரணம்பற்றி அனுமானத்தை நிரூபணஞ் செய்தபிறகு சப்தத்தை நிரூபணஞ் செய்கிறார்:—**आप्तश्रुतिरासवचनंविति।* आप्तवचनं** என்ற பதம் லக்ஷ்யத்தைக் குறிக்கின்றது.

---

*'பசுவை அழைத்துவா' என்றது முதலியவார்த்தைகளைச்சொல்லிக் காய்யத்தில் எவரிறவன் பிரயோஜகவிருத்தன் எனப்படுவன். அதை

दनुमानपूर्वकत्वमित्यनुमानानन्तरं शब्दं लक्षयंति—"आप्तश्रुतिराप्तवचनं तु" इति। आप्तवचनमिति लक्ष्यनिर्देशः, परिशिष्टं लक्षणम्। आप्ता=प्राप्ता, युक्तेति यावत्। आप्ता चासौ श्रुतिश्चेति आप्तश्रुतिः, श्रुतिः=वाक्यजनितं वाक्यार्थज्ञानम्॥ तच्च स्वतः प्रमाणम्। अपौरुषेयवेदवाक्यजनितत्वेन सकल-

---

மீதமுள்ள **आप्तश्रुतिः** என்ற பதம் லக்ஷணத்தைப் போதிக்கின்றது. **आप्त** என்றபதத்திற்கு=யுக்தமானது—அதாவது:—பாதிக்கப்படாதபொருளை விஷயமாகவுடையது என்று பொருள். **श्रुति** என்றபதத்திற்கு வாக்யத்திலால் உண்டுபண்ணப்பட்டவாக்யார்த்தக்ஞானம் என்று பொருள். வேதவாக்யத்தா லுண்டுபண்ணப்பட்ட வாக்யார்த்தக்ஞானம் ஸ்வதப்பிரமாணமாயாகின்றது. எனெண்ணில் வேதம் அபௌருஷேயமா யிருப்பது பற்றி பௌருஷேய வாக்கியங்களுக்குரிய பிரமம், தவறுதல், வஞ்சிக்கவேண்டுமென்ற எண்ணம் முதலிய தோஷங்கள் சம்ப

கேட்டு பசுவை அழைத்துவருபவன் பிரயோஜ்யவிருத்தன் எனப்படுவன். ஒருவனது வார்த்தையின் பொருள் அறியப்படவேண்டுமாயில் அவ்வார்த்தைக்கும் அப்பொருளுக்குமுள்ள சம்பந்தமறியப்படவேண்டும். அந்தக் ஞானம் வியவஹாரத்தினின்று முண்டாகின்றது. அதாவது:—பசுவைக் கொண்டுவா என்றவிடத்திலுள்ள பசுவென்றபதத்தின் பொருளறியாதவன் ஒருவன். மற்றும் இருவர் அதன்பொருளையறிந்தவர்கள். அர்த்தமறிந்த இருவருள் ஒருவர் ஒருவரைப்பார்த்துப் "பசுவைக்கொண்டுவா" என்று சொல்வதாக வைத்துக்கொள்வோம். அதுகேட்ட அவன் பசுவைக் கொண்டுவந்து விடுகிறான். இதைக்கவனித்தவனும், பசுவென்ற வார்த்தையின்பொருளையறியாதவனுமான மனிதன் பசுவையழைத்து வந்தமனிதனுக்குண்டான பிரவிருத்திக்குப் பசுவென்ற வார்த்தையாலுண்டான பசுவைப்பற்றிய அறிவேகாரணமாக இருக்கவேண்டுமென்றும், அவ்வறிவு பசுவுக்கும், பசுவென்றவார்த்தைக்கும் சம்பந்தமில்லாவிடில் சம்பவிக்காதென்றும் ஊஹித்து அதினின்றும் பசு என்ற சப்தத்திற்கும் அதன்பொருளான பசுவுக்கும், உள்ள சம்பந்தத்தை யறிந்துவிடுகிறான். ஆகவே சப்தப்பிரமாணம் அனுமானத்தை முன்னிட்டதாக ஏற்படுகின்றது என்றியவும்.

दोषाशङ्काविनिर्मुक्तैर्युक्तं भवति। एवं वेदमूलस्मृतीतिहासपुराणवाक्यजनितमपि ज्ञानं युक्तं भवति। आदिविदुषश्च कपिलस्य कल्पादौ कल्पान्तराधीतश्रुतिस्मरणसंभवः, सुप्तप्रबुद्धस्येव पूर्वेद्युरवगतानामर्थानामपरेद्युः। तथाचआवट्यजैगीषव्यसंवादे भगवान् जैगीषव्यो दशमहाकल्पवर्तिजन्मस्मरणम् आ मन उवाच "दशसु महाकल्पेषु विपरिवर्तमानेन मया" इत्यादिना ग्रन्थसंदर्भेण॥

आप्तग्रहणेनायुक्ताश्शाक्यभिक्षुनिर्ग्रन्थकसंसारमोचकादीनामागमाभासाः परिहृता भवन्ति। अयुक्तत्वं चैतेषां विगानात्, विच्छिन्नमूलत्वात्,

---

விப்பதற்கு இடமில்லை. இவ்விதமே வேதமூலமான ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம் இவைகளிலுள்ள வாக்கியங்களாலுண்டு பண்ணப்பட்ட க்ஞானமும் யுக்தமாக(பாதிக்கப்படாத பொருளை விஷயமாயுடையதாக) ஆகின்றது. தூங்கி எழுந்தவனுக்கு பூர்வதினத்தில் அநுபவித்த பொருள் மற்றுதினம் நினைவுக்கு வருவதுபோலவே ஆதியிலுள்ளவரும் சர்வக்ஞருமான கபிலருக்கு வேறு கல்பத்தில் அத்யயனஞ் செய்யப்பட்ட ச்ருதிகளின் நினைவு இக்கல்பத்தின் தொடக்கத்தில் சம்பவிக்கலாம். இவ்விதமே ஆவட்யரும் ஜைகீஷவ்யரும்தத்தில விசாரஞ் செய்யுங்காலத்து ஆவட்யரை நோக்கி ஜைகீஷவ்யர் "பத்து மஹாகல்பங்களில் சுழலுகின்ற எந்தனை" என்று சொன்னதிலிருந்து 10 மஹாகல்பங்களிலுள்ள பிறவியின் நினைவு தமக்கிருப்பதாக வெளியிட்டிருக்கிறார். (அவ்விதமாயின் சர்வக்ஞரான கபிலர் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ.)

இந்தச்சுலோகத்தில் ஆப்த என்றபதம் பிரயோகிக்கப்பட்டதிலிருந்து சாக்யன், பிக்ஷு, நிர்க்கிரந்தகன், சம்சாரமோசகன் இவர்களாலுபதேசிக்கப்பட்ட ஆகமங்கள் அயுக்தங்களாக (பாதிக்கப்பட்ட பொருளை விஷயமாயுடையனவாக) இருக்கின்றமை பற்றி பிரமாணகோடியினின்றும் விலக்கப்பட்டதாயாகின்றன. அவைகள் ஒன்றுக்கொன்று முறண்பட்டிருத்தலும், மூலமில்லாதிருத்தலும், பிரமாண விருத்தமான பொருளைச் சொல்லுதலும், பசுவிற்கொப்பானவர்களும், புருஷாபசதர்களு

प्रमाणविरुद्धार्थाभिधानाच्च कैश्चिदेव म्लेच्छादिभिः पुरुषापशदैः परिग्रहाद्धो-द्धव्यम्। तुशब्देनाऽनुमानाद्यवच्छिनत्ति। वाक्यार्थो हि प्रमेयो न तु तद्धर्मो वाक्यम्, येन तत्र लिङ्गं भवेत्। न च वाक्यं वाक्यार्थबोधयत् संबंधग्रहणमपेक्षते, अभिनवकविरचितस्य वाक्यस्यादृष्टपूर्वस्याननुभूतचरवाक्यार्थबोधकत्वादिति ॥

एवं प्रमाणसामान्यलक्षणेषु तद्विशेषलक्षणेषु च सत्सुयानि प्रमाणान्तराण्युपमानादीनि प्रतिवादिभिरभ्युपेयन्ते तान्युक्तलक्षणेष्वेव प्रमाणेषु अन्त-

---

மான மிலேச்சன் முதலியோராலேயே ஒப்பப்பட்டிருத்தலுமே அதற்குக்காரணம். तु என்ற சப்தத்தால் சப்தப்பிரமாணம் அநுமானத்தினின்றும் வேறுபட்டதென்று உபதேசிக்கப்படுகின்றது. சப்தப்பிரமாணத்தில் வாக்கியத்தின் பொருள் பிரமேயமாகின்றதுபற்றி வாக்யம் அதன் தர்மமாகின்றதில்லை. அவ்விதமானலல்லவா வாக்யமானது வாக்யார்த்தத்தில் ஹேது வாக ஆகும். ஒரு வாக்யமானது வாக்யார்த்த போதத்தை யுண்டுபண்ணும்பொழுது சம்பந்தக்ஞானத்தை எதிர் பார்ப்பதில்லை. புதிதாகக் கவியால் செய்யப்பட்டதும், முன் அனுபவிக்கப்படாததுவுமான வாக்கியமானது முன்னர் அனுபவிக்கப்படாத வாக்யார்த்தபோதத்தை உண்டுபண்ணுகின்றதாயிருப்பது பற்றியும் சுருதிஸ்மிதிவிருத்தமாயில்லாமைபற்றியும் சிஷ்டர்களாலொப்பக்கூடியதாயிருப்பதுபற்றியும் பிரமாணமாயாகலாம். இவ்விதம் பிரமாணங்களின் பொது லக்ஷணங்களும் விசேஷ லக்ஷணங்களு மிருக்குங்கால் உபமானம் முதலிய வேறுப்பிரமாணங்களை யொப்பவேண்டியதில்லை. அவைகளும் முற்கூறிய மூன்றுப்பிரமாணங்களிலேயே சேர்த்துவிடக்கூடியனவாயிருக்கின்றன. அதை இனி நிரூபிப்பாம்.

முதலில் உபமானத்தை எடுத்துக்கொள்வோம் "பசு எவ்விதமோ அவ்விதந்தான் கவயமும்" என்ற வாக்கியமே உபமானம். இங்கு "பசு" எவ்விதமோகவயமும் அவ்விதமே என்ற

भवन्ति । तथाहि—उपमानं तावत् "यथा गौस्तथा गवयः" इति वाक्यम्। तज्जनिता धीः आगम एव । योप्ययं गवयशब्दो गोसदृशस्य वाचक इति प्रत्ययः सोऽप्यनुमानमेव । यो हि शब्दो यत्र वृद्धैः प्रयुज्यते सः असति वृत्त्यन्तरे तस्य वाचकः, यथा गोशब्दो गोत्वस्य । प्रयुज्यते चैवं गवयशब्दो गोसदृशे, इति तस्यैव वाचकः, इति तदज्ञानमनुमानमेव । यत्तु गवयस्य चक्षुःसन्निकृष्टस्य गोसादृश्यज्ञानं तत्प्रत्यक्षमेव। अत एव स्मर्यमाणायां गवि गवयसादृश्यज्ञानं प्रत्यक्षम्। न ह्यन्यद्गवि सादृश्यम्, अन्यच्च गवये भूयोऽवयवसामा-

---

வாக்கியத்தாலுண்டாகும் க்ஞானமானது சாப்தபோதமாகவே அதாவது சப்தத்தாலுண்டாகும் அறிவாகவேயாகும். "இந்த வாக்யத்தில் சொல்லப்பட்ட **गवयः** என்ற சப்தமானது கோவிற் கொப்பான வஸ்துவைச் சொல்லுகின்றது" என்ற யாதொருக் ஞானமுண்டோ அது அநுமானமாகவே கொள்ளப்படலாம். விருத்தர்களால் எந்தவிடத்தில் எந்தசப்தமானது பிரயோகிக்கப்படுகின்றதோ அதற்கு வேறு சக்தியில்லாவிடில் அந்தச் சப்தமானது அவ்விஷயத்திற்கே வாசகமாக ஆகும். "பசு" என்ற சப்தமானது கொத்வத்திற்கே வாசகமாகின்றது. அது போலவே இங்கும் கோவிற்கு சதிருசமான (ஒப்பான) விஷயத்தில் பிரயோகிக்கப்படும் **गवय** என்ற சப்தமானது கோவிற் கொப்பான ஒரு வஸ்துவிற்கு வாசகமாகவேயாகும் என்று ஏற்படுகிறது. என்ற காரணம்பற்றி "**गवय** சப்தமானது கோவிற் கொப்பானதற்கு வாசகம்" என்ற தாலுண்டாகும் க்ஞானமானது அனுமானப் பிரமாணமாயாகலாம். கண்ணிற் கெதிரிலுள்ள **गवय** விஷயமாக கோவிற்குச்சமானம் கவயம் என்ற யாதொரு கோசாதிருச்யக்ஞானமுண்டோ அது பிரத்யக்ஷமாகவே யாகின்றது. ஆகையால்தான் நிணவிற்கேறன்றும் (விஷயமாகும்) பசுவில் உண்டாகும் கோசாதிருச்யக்ஞானம் வேறு, **गवय** த்திலுண்டாகும் சாதிருச்யக்ஞானம் வேறு என்று சொல்வதற்கில்லை. பெருப்பாலும் அவயவங்களுடைய அசாதாரண தர்மங்களின் சேர்க்கையானது முக்கிய அவயவியின்

न्ययोगो हि जात्यन्तरवर्ती जात्यन्तरे सादृश्यमुच्यते । सामान्ययोगश्च एकः सचेद्वयेप्रत्यक्षो गव्यपि तथेतिन उपमानस्य प्रमेयान्तरमस्ति, यत्र प्रमाणान्तरमुपमानं भवेत्, इति न प्रमाणान्तरमुपमानम् ॥

एवमर्थापत्तिरपि न प्रमाणान्तरम् । तथाहि—जीवतश्चैत्रस्य गृहाभावदर्शनेन बहिर्भावस्यादृष्टस्य कल्पनमर्थापत्तिरभिमता वृद्धानाम् । साप्यनुमानमेव । यदा खल्वव्यापक एकलास्ति तदान्यत्र नास्तीति सुकरः स्वशरीरे

ரூபமுள்ள வேறு வஸ்துவிலிருந்தால் அது வேறு ஜாதியிலுள்ள சாதிருச்யம் என்று சொல்லப்படும். அசாதாரண தர்மத்தின் சேர்க்கையானது ஒன்றுகவே இருக்கின்றது. அந்த அசாதாரண தர்மத்தின் சேர்க்கையானது கவயத்தினிடம் பிரத்தியக்ஷமாஞல் கோவிலும் அவ்விதமே பிரத்யக்ஷமாகலாம். ஆதலால் உபமானத்திற்குப் பிரமேயம் (விஷயம்) இல்லாமலாகிவிட்டது. அதற்கென்று தனியாய் ஒரு பிரமேயமிருந்தால் அல்லவா உபமானத்தையும் பிரமாணமாகக் கொள்ளக்கூடும். ஆகவே உபமானம் தனிப்பிரமாணமாக வாகாதென்று எற்பட்டது.

இவ்விதமே 'அர்த்தாபத்தி' என்பதும் வேறுபிரமாணமல்ல. எவ்விதமெனின்:—ஜீவனுடன்கூடிய சைத்திரன் என்றுபெயர் பூண்டஒருமனிதனை 'வீட்டிலில்லை' என்று நேரில் காண்பதால் நேரில்காணப்படாத வேளிதேச சம்பந்தத்தை அவனிடமறிவது 'அர்த்தாபத்தி' என்று பெரியோர்களின் சம்மதி. அவ்விதமறிவது மனுமானமே. எங்குமிருக்கக்கூடிய நிலையிலில்லாத வஸ்துவானது எப்பொழுது ஓரிடத்திலில்லையோ அப்பொழுது வேறு இடத்திலிருக்கவேண்டும்; எங்கும் வியாபரித்திருக்கக் கூடியநிலையிலில்லாதவஸ்துவானது எப்பொழுது ஓரிடத்திலிருக்கின்றதோ அப்பொழுது வேறு இடத்திலிருக்காதென்று தனது சரீரத்திலேயே வியாப்திக்ஞானம் சுலபமாயுண்டாகலாம். ஆகவே ஜீவித்திருக்கிற புருஷனிடம் வீட்டிலில்லாமையை யறிவது என்ற ஹேதுவால் அவனிடம் வேளிதேசத்

व्याप्तिग्रहः । तथाच सतो गृहाभावदर्शनेन लिङ्गेन बहिर्भावदर्शनमनुमानमेव । नच चैत्रस्य क्वचित्सत्वेन गृहाभावश्शक्योऽपन्होतुम्, येनाऽसिद्धो गृहाभावो बहिर्भावे न हेतुस्स्यात् । नच गृहाभावेन वा सत्वमपन्हूयते, येन सत्वमेवानुपपद्यमानमात्मानं न बहिरवस्थापयेत् । तथाहि—चैत्रस्य गृहासत्वेन सत्वमात्रं विरुध्यते ? गृहसत्वं वा, न तावद्यत्र क्वचन सत्वस्यास्ति विरोधो गृहाऽसत्वेन, भिन्नविषयत्वात् । "देशसामान्येन गृहविशेषाक्षेपोपि पाक्षिक इति समानविष-

---

தின் சம்பந்தத்தை அறிவது அனுமானமே. சைத்திரன் என்ற வனிடம் யாதானுமோர் தேச சம்பந்தமிருப்பதுபற்றியே வீட்டி வில்லாமையை மறைக்கமுடியுமா? அவ்விதமாயின் வீட்டிலில் லாமை என்பது சித்தமாகாமல் வெளிதேச சம்பந்தத்தை யறிவ தில் ஹேதுவாயாகாமலிருக்கும். வீட்டிலில்லாமையால் இருக்கு கையே பாதிக்கப்படுமா? அவ்விதமாயின் இருக்குகை என்ற தர் மமே பொருந்தாமைபற்றி வெளிதேச சம்பந்தம் சித்திக்காமல் போய்விடலாம். (மேற்சொல்லிய இரண்டுகக்ஷிகளும் சம்பவிக் கிறதில்லை) எனென்றால்—சைத்திரன் என்ற மனிதனிடமுள்ள வீட்டிலில்லாமையோடு இருக்குகை என்ற தர்மமே விரோதத்தை யடைகின்றதா? வீட்டிலிருக்குகை விரோதத்தையடைகிறதா? (இவற்றுள் முதல்கக்ஷி சரியில்லை.) எனென்றால்:—வீட்டிலில்லை என்றக் ஞானத்திற்கும், பொதுவில் "இருக்கின்றது" என்றக் ஞானத்திற்கும் விஷயம் வேறுபட்டிருப்பதால் யாதானும் ஓர் தேசத்திலிருக்குகைக்கு வீட்டிலில்லாமையோடு விரோதங்கிடை யா. சைத்திரன் பொதுவில் யாதானுமோர் இடத்திலிருக்கவே ண்டு மென்று சித்தித்தவுடன் "சாமான்யமெல்லாம் விசேஷ மின்றி முடிவுபெறுது" என்ற நியாயப்படி வீடுஎன்ற தேசவிசே ஷமும் ஒருசமயம் கிரஹித்துக்கொள்ளப்படலாமாதலால் முற் கூறியக் ஞானங்கட்கு விஷயம் ஒன்றுகின்றமை பற்றி விரோதமி ருப்பதாய்ச் சொல்லுவோமோ மெனில் அவ்விதஞ் சொல்வதற் கில்லை. எனெனில்:—நீ சொல்லுகிறபடி சைத்திரனிடம் சம்ப விக்கின்ற வீட்டின் சம்பந்தம் ஒரு சமயத்தில் எற்படக்கூடியது பற்றி சம்சயக்ஞானத்திற்கு விஷயமாகின்றது. அதனைக்கொண்டு

यतया विरोधः" इति चेत् न । प्रमाणविनिश्चितस्य गृहेऽसत्वस्य पाक्षिक तया सांशयिकेन गृहसत्वेन प्रतिक्षेपायोगात् । नापि प्रमाणनिश्चितो गृहाभावः पाक्षिकमस्य गृहसत्वं प्रतिक्षिपन् सत्वमपिप्रतिक्षेप्तुं सांशयिकत्वं च व्यपनेतु-मर्हतीति युक्तम् । गृहावच्छिन्नेन चैत्राभावेन गृहसत्वं विरुद्धत्वात्प्रतिक्षिप्यते। नतुसत्वमात्रम्। तस्य तत्रौदासीन्यात् । तस्माद्गृहाभावेन लिङ्गेन सिद्धेन सतो बहिर्भावोऽनुमीयत इति युक्तम् । एतेन "विरुद्धयोः प्रमाणयोः विषय्यवस्थयाऽविरोधापादनमर्थापत्तेर्विषयः" इति निरस्तम् । अवच्छिन्नानव-च्छिन्नयोर्विरोधाभावात् । उदाहरणान्तराणि चार्थापत्तेरेवमेवानुमानेऽन्तर्भाव-नीयानि । तस्मान्नानुमानात्प्रमाणान्तरमर्थापत्तिरिति सिद्धम् ॥

பிரத்யக்ஷப் பிரமாணத்தால் நிச்சயிகப்பட்ட வீட்டிலில்லாமையை நிஷேதித்தல் தகாது. பிரத்யக்ஷப் பிரமாணத்தால் நிச்சயிக்கப்பட்ட வீட்டிலில்லாமையானது ஒருசமயம் சம்பவிக்கக்கூடிய வீட்டிலிருக்குகையை நிஷேதிப்பது பற்றி 'இருக்குகை' என்றபொது தர்மத்தையே நிஷேதித்துவிடச் சமர்த்தமாகுமா? சைத்திரனிட முள்ள வீட்டிலில்லாமையால் வீட்டிலிருக்குகை மாத்திரம் விருத்தமானதுபற்றி பாதிக்கப்படுகிறது. இருக்குகை என்ற பொது தர்மமும் பாதிக்கப்படுவதில்லை. ஏனெனில் அக்காரியத்தைச் செய்வதில் அதற்குச் சாமர்தியங்கிடையா. ஆதலால் வீட்டிலில்லாமை என்ற நிச்சயிக்கப்பட்ட ஹேதுவால் இருக்குகை என்ற பொதுதர்மமுள்ள மனிதனுக்கு வெளிதேச சம்பந்த மனுமிக்கப் படுகிறது என்பதே பொருந்துகின்றது. ஆகவே மேற்சொல்லிய யுக்திகளால் "விருத்தமானப் பிரமாணங்களுக்கு விஷயங்களை தனித்தனியே பிரித்துக் காண்பித்து விரோதபரிஹாரஞ் செய்து ணவப்படுதே அர்த்தாபத்தியின் பிரமேயம்" என்று சொல்லும் வாதமும் தள்ளப்பட்டதாயாகின்றது. எவ்விதமெனின்:—சுத் தத்திற்கும் விசேஷண முள்ளதற்கும் விரோதங்கிடையா. அர்த் தாபத்தியின் மற்ற உதாஹரணங்களையும் இவ்விதமே அனுமான த்திலடக்கிவிடவேண்டும். ஆதலால் அனுமானத்தைவிட அர்த் தாபத்தி வேறுப்பிரமாணமல்ல வென்று சித்தித்தது.

एवमभावोऽपि प्रत्यक्षमेव । न हि भूतलस्य परिणामविशेषात्कैवल्य-लक्षणादन्यो घटाभावो नाम । प्रतिक्षणपरिणामिनो हि सर्व एव भावाः ऋते चितिशक्तेः । स च परिणामभेद ऐन्द्रियक इति नास्ति प्रत्यक्षानवरुद्धो विषयः, यत्राभावाख्यं प्रमाणान्तरमभ्युपेयेतेति ॥ संभवस्तु—यथा स्वार्थो

---

* இவ்விதமே "அபாவம்" என்றப் பிரமாணமும் பிரத்யக்ஷப் பிரமாணமே. அதனிலும் வேறு பட்டதல்ல. குடத்தின் இல்லாமை என்பது கைவல்யம் என்று சொல்லக்கூடிய பூதலத்தின் ஓர்வித பரிணாம (மாறுதல்) த்தைக்காட்டிலும் வெறுக இருக்கின்றதா ? இல்லை. ஆத்மவஸ்துவைத் தவிர்த்து மற்ற வஸ்துக்கள் ஒவ்வொருக்ஷணமும் மாறிக்கொண்டேயல்லவா இருக்கின்றன. அத்தகைய பூதலத்தின் ஓர்விதமான பரிணாமம் இந்திரியத்திற்கு விஷயமாகின்றமையால் பிரத்யக்ஷத்திற்குப் புலப்படக்கூடாத விஷயங்கிடையா. அவ்விதமிருந்தாலல்லவா "அபாவம்" என்ற வேறுப் பிரமாணத்தை அங்கீகரிக்கலாம். ஆதலால் அபாவம் என்று வேறு ப்பிரமாணங்கிடையா.

சம்பவம் என்பது ஓர் தனிப்பிரமாணம்; அதனால் முக்குருணி நெல்லில் பதக்கு, குருணி, படி இவை முதலியவற்றுலளக்கக்கூடிய நெல் இருப்பதாய் அறியப்படுகின்றது என்று சிலர் சொல்லுகின்றனர். அதுவும் அனுமானப் பிரமாணமே. எனென்றால்:—முக்குருணியானது பதக்கைவிட்டுப் பிரிந்திராது என்று அறியப்பட்டால் முக்குருணியில் பதக்கு இருப்பதாக அறியப்படுகின்றது. ஆதலால் இது அனுமானம் என்றும்.

---

*ஒருவஸ்துவின் இல்லாமை என்பது தனிப்பட்டவஸ்து. அதிகரணத்திலும் வேறுபட்டது. அது "அனுபலப்தி, அபாவம்" என்று சொல்லப்படும் பிரமாணத்தால் அறியப்படுகின்றது என்று சில தர்சனக்காரர்கள் சொல்லுகின்றனர். இல்லாமையென்றே அதிகரணத்திலும் தனியாக இல்லாததால் அதை அறிவதற்காக வேறுப்பிரமாணம் வேண்டியதில்லை, என்று கண்டிக்கப்படுகின்றது.

द्रोणाढकप्रस्थाद्यवगमः। स चानुमानमेव। खारीत्वं हि द्रोणाद्यविनाभूतं प्रतीतं खार्यां द्रोणादिसत्वमवगमयति ॥ यच्चानिर्दिष्टप्रवक्तृकं प्रवादपारंपर्यमात्रम्—"इति होचुर्वृद्धाः" इत्यैतिह्यम्, यथा "इह वटे यक्षः प्रतिवसति" इति न तत्प्रमाणान्तरम्, अनिर्दिष्टप्रवक्तृकत्वेन सांशयिकत्वात्। आप्तवक्तृकत्वनिश्चये त्वागम एव। इत्युपपन्नं "त्रिविधं प्रमाणम्" इति ॥ ९ ॥

एवं तावद्व्यक्ताव्यक्तज्ञलक्षणप्रमेयसिद्ध्यर्थं प्रमाणानि लक्षितानि। तत्र व्यक्तं पृथिव्यादि स्वरूपतो पांसुलपादको हालिकोऽपि प्रत्यक्षतः प्रतिपद्यते, पूर्ववताचानुमानेन धूमादिदर्शनाद्वन्ह्यादीनिचेति, तद्व्युत्पादनाय मन्द-

---

ஐதிஹ்யம் என்று ஓர் தனிப்பிரமாணம்; அது இன்னரால் சொல்லப்பட்டது என்று குறிப்பாய்த் தெரியாமல் "இவ்விதம் பெரியோர் சொன்னர்கள்" என்று பரம்பரையாய் வியவஹரிக்கப்பட்டுவரும் வாக்கியம்; உதாஹரணம்:—"இவ்வாலமரத்தில் யக்ஷன் வசிக்கின்றன்" என்பது முதலியன. அவை தனிப்பிரமாணமல்ல. ஆவ்வதந்தி இன்னரால் கிளப்பப்பட்டது என்று தெரியாததால் அவ்வாக்யத்தால் சொல்லப்படுகின்ற பொருளில் சந்தேஹ முண்டாகின்றது. அவ்விதம் சந்தேஹத்தை யுண்டு பண்ணக்கூடிய வாக்யம் பிரமாணமாகவே ஆகமாட்டாது. அல்லது ஆப்தனால் சொல்லப்பட்டதென்று நிச்சயமிருக்குமா யின் அது சப்தப்பிரமாணமாகவே யாகின்றது. ஆதலால் அது தனிப்பிரமாணமல்ல. ஆகவே "மூன்றுதான் பிரமாணம்" என்று பிரதிக்ஞைசெய்தது உசிதமே.

ஆறுவது சுலோகம்.

(அ-கை) இவ்விதம் சென்ற சுலோகத்தால் வியக்தம், அவ்யக்தம், ஞன் என்றப்பிரமேயங்கள் சித்திப்பதற்காகப் பிரமாணங்கள் லக்ஷணங்கள் வாயிலாக நிரூபிக்கப்பட்டன. அவைகளுள் வியக்தம் என்று சொல்லப்படும் பிருதிவீ முதலியவற்றை புழுதி படிந்த கால்களையுடையவனும், கலப்பை எடுத்து உழுது ஜீவிப்

प्रयोजनं शास्त्रमिति दुरधिगममनेन व्युत्पाद्यम् । तत्र यत्प्रमाणं यत्र शक्तं तदुक्तलक्षणेभ्यः प्रमाणेभ्यो निष्कृष्य दर्शयति—

मू० ॥ सामान्यतस्तु दृष्टादतीन्द्रियाणां प्रतीतिरनुमानात् ।
तस्मादपिचासिद्धं परोक्षमाप्तागमात्सिद्धम् ॥ ६ ॥

सामान्यत इति । तु शब्दः प्रत्यक्षपूर्ववद्धचां विशिनष्टि । सामान्यतो दृष्टादनुमानादतीन्द्रियाणां प्रधानपुरुषादीनां प्रतीतिः—चितिच्छायापत्ति

பலனும், பயிர் செய்பவனுமான சமான்யமனிதனும் பிரத்ய கூஷமா யறிகின்றன். பூர்வவத் என்ற அனுமானத்தால் (புகை முதலியதைக் காணுவதால்) நெருப்பு முதலியவற்றை அறிகிறன். ஆதலால் வியக்தங்களைப் போதிப்பதற்காகச் சாஸ்திரமாரம் பிக்கப் பட்டிருப்பதாய் அங்கீகரிப்போமாயின் சாஸ்திரம் பொரிய பயனையுடைய தாயாகாதானது பற்றி சுலுவில் அறிவதற்கு முடியாதவைகளை இந்தச் சாஸ்திரத்தால் போதிக்கப்படுகின்றன என்று அங்கீகரிக்கவேண்டும். முன்கூறிய பிரமாணங்களுள் எந்தப் பிரமாணம் எந்த விஷயத்தைப் போதிப்பதில் சக்தியுள் ளதோ அதை முன் சொல்லிய லக்ஷணமுள்ளப் பிரமாணங்களி னின்றும் பிரித்துக் காண்பிக்கிறர்.

(ப-ரை) **अतीन्द्रियाणाम्**=இந்திரியங்களுக்குப் புலப்படக்கூ டாத வஸ்துக்களுக்கு **सामान्यतो दृष्टात्**, **अनुमानात्**=சாமான்யதோ திருஷ்டம் என்ற அனுமானத்தினல் **प्रतीतिः**=அறிவு (**भवति**=உண் டாகின்றது) **तस्मादपि**=அதனலும் **असिद्धम्**=அறியப்படாததும் **परोक्षम्**=பரோக்ஷமான தவுமான வஸ்துவானது **आप्तागमात्**=யுக்த மான சப்தப்பிரமாணத்தினல் **सिद्धम्**=அறியப்படுகின்றது.

(தாத்பர்யம்) இவ்விடத்தில் **तु** என்ற சப்தம் போடப்பட்டிருப்ப தால் பிரத்யக்ஷம், பூர்வவத் என்ற அனுமானம் இவைகளினின் றும் ஸாமான்ய தோதிருஷ்டம் வேறுபட்ட தன்மையுள்ளது என்று சூசிப்பிக்கப்படுகின்றது. அத்யவசாய ரூபமான சாமான்ய

र्बुद्धेरध्यवसाय इत्यर्थः। उपलक्षणं चैतत्, 'शेषवतः' इत्यपि द्रष्टव्यम्। तत्किं सर्वेष्वतीन्द्रियेषु सामान्यतो दृष्टमेव प्रवर्तते? तथाच यत्र तन्नास्ति महदाद्यारंभक्रमे, स्वर्गापूर्वदेवतादौ च तत्र तेषामभावः प्राप्त इत्यत आह—तस्मादपीति। तस्मादित्येतावतैव सिद्धे चकारेण शेषवदित्यपि समुच्चितम् ॥ ६ ॥

स्यादेतत्, यथा गगनकुसुमकूर्मरोमशशविषाणादिषु प्रत्यक्षमप्रवर्त-

---

தோதிருஷ்டம் என்ற அனுமானத்தால் இந்திரியங்களுக்குப் புலப்படக்கூடிய யோக்கியதையற்ற பிரகிருதி புருஷன் இவைகளைப்பற்றியக் ஞானமுண்டாகின்றது, அதாவது:—பிரகிருதி, புருஷன் இவற்றைப்பற்றிய புத்தி விருத்தியில் சைதன்யத்திற்குப் பிரதிபலன முண்டாகின்றது. அதுவே அத்யவசாயமென்று சொல்லப்படும். सामान्यतोदृष्टम् என்றுசொன்னதை உபலக்ஷணமாகவைத்துக்கொண்டு சேஷவத் என்ற அனுமானத்தையும் கிரஹித்துக் கொள்ளவேண்டும். ஆகவே சாமான்யதோதா திருஷ்டம், சேஷவத் என்ற அனுமானம் இவைகளால் அதீந்திரியமான வஸ்துக்கள் அறியப்படுகின்றன என்று ஏற்படுகின்றது. அதீந்திரியமான வஸ்துக்கள் யாவற்றிலும் சாமான்ய தோதிருஷ்டம் என்ற அனுமானம் தான் பிரமாணமா? அவ்விதமாயின்,—எந்த வஸ்துக்களில் சாமான்ய தோதிருஷ்டம் என்ற அனுமானம் பிரவிருத்திக்கிறதில்லையோ—பிரகிருதியினின்றும் மஹத்தத்துவ முண்டாகின்றது, மஹத்தத்துவத்தினின்றும் அஹங்காரம் என்ற தத்துவ முண்டாகின்றது என்றக்கிரமம்; ஸ்வர்க்கம், அபூர்வம், தேவதை முதலியவற்றில்—அவைகிடையா என்றே அல்லவா தீர்மானிக்க வேண்டிவரும் என்று சங்கதஹித்துப்பதிலளிக்கிறார்:—तस्मादिति। तस्मादसिद्धम् என்று சொன்னலே போதுமாயினும் च என்ற பதம் போடப்பட்டிருப்பதால் சேஷவத் என்ற அனுமானத்தையும் கிரஹித்துக் கொள்ளவேண்டும். ஆகவே சாமான்ய தோதிருஷ்டம் என்ற அனுமானம் சேஷவத் என்ற அனுமானம் இவைகளாலறியப்படாத வஸ்துக்கள் சப்தப்பிரமாணத்தாலறியப்படுகின்றன. (எ-று)

मानं तदभावमवगमयति, एवं प्रधानादिष्वपि। तत्कथं तेषां सामान्यतोदृष्टादिभ्यस्सिद्धिरित्यत आह—

मू०॥ अतिदूरात्सामीप्यादिन्द्रियघातान्मनोऽनवस्थानात्।
सौक्ष्म्याद्व्यवधानादभिभवात्समानाभिहाराच्च ॥ ७ ॥

अतिदूरादिति। अनुपलब्धिरिति वक्ष्यमाणं सिंहावलोकनन्यायेनानुषंजनीयम्। यथा उत्पतन्त्वियति पतत्री अतिदूरतया सन्नपि प्रत्यक्षेण नोप-

---

ஏழாவது சுலோகம்.

(அ - கை) இஃதெல்லா மிருக்கட்டும். ஆகாச புஷ்பம், ஆமையின் உரோமம், முயல் கொம்பு முதலியவைகள் பிரத்யக்ஷத்தால் அறியப்படாததால் அவை இல்லை என்றே எவ்விதம் நிர்மானிக்கிறோமோ அவ்விதமே பிரதானம் முதலியவையும் பிரத்யக்ஷத்தால் அறியப்படாததால் அவை இல்லை என்றே என் நிர்மானிக்கக்கூடாது. ஆகவே பிரதானம் முதலியவைகள் சாமான்யதோ திருஷ்டம் என்ற அனுமானத்தால் சித்திக்கின்றன என்பது எங்ஙனம்? என்று சங்தேஹித்துப் பதிலளிக்கிறார்:—

(ப - மை) **अतिदूरात्**=மிகவும் தூரத்திலிருக்குகையாலும், (**अति**) **सामीप्यात्**=மிகவும் கிட்டத்திலிருக்குகையாலும் **इन्द्रियघातात्**=இந்திரியங்களின் கெடுதியாலும் **मनोऽनवस्थानात्**=மனத்திற்கு கிரஹிக்கின்ற இந்திரியத்துடன் மட்டும் சேர்க்கை இல்லாததாலும் **सौक्ष्म्यात्**=மிகவும் சிறியதாக இருக்குகையாலும் **व्यवधानात्**=மறைவாலும் **अभिभवात्**=பிரபலமான மற்றொன்றால் அடக்கப்படுவதாலும் **समानाभिहाराच्च**=ஒரேமாதிரியாக இருக்குகையாலும் **अनुपलब्धिः**=புலப்படாமை (**भवति**=உண்டாகின்றது.)

(தா-ம்) **सौक्ष्म्यात्तदनुपलब्धिः** என்ற சுலோகத்திலிருக்கின்ற **अनुपलब्धिः** என்ற *பதத்தை "சிங்கத்தின் பார்வை" என்ற நியா

---

अत्रैगुण्याच्चास्य कैवल्यम्। आत्यन्तिको दुःखत्रयाभावः कैवल्यम्। तच्च तस्य स्वाभाविकादेवात्रैगुण्यात् सुखदुःखमोहरहितत्वात्सिद्धम्॥

अत एवात्रैगुण्यान्माध्यस्थ्यम्। सुखी हि सुखेन तृप्यन् दुःखी हि दुःख द्विषन् मध्यस्थो न भवति। तदुभयरहितस्तु मध्यस्थ इत्युदासीन इति चाख्यायते। विवेकित्वादप्रसवधर्मित्वाच्चाकर्तेति सिद्धम्॥ १९॥

स्यादेतत्—प्रमाणेन कर्तव्यमर्थमवगम्य 'चेतनो ऽहं चिकीर्षन् करोमि' इति कृतिचैतन्ययोः सामानाधिकरण्यमनुभवसिद्धम्; तदेतस्मि-

---

கின்றது. ஆனதுபற்றிப் புருஷன் சாக்ஷியாகின்றான். அசேதனத்தினிடமோ விஷயத்தினிடமோ விஷயத்தைக்காண்பிப்பதென்பது சம்பவிக்காது. ஆதலால் சேதனனாயிருப்பதாலும், விஷயமாக ஆகாமலிருப்பதாலும், புருஷன் சாக்ஷியாகின்றான். ஆனதுபற்றியே திரஷ்டாவாக (பார்க்கின்றவனாக) வுமாகின்றான். புருஷனிடம் சத்வம்முதலிய குணங்கள் சுவபாவத்திலில்லாமலிருப்பதால் கைவல்யம் என்றதர்மம் சித்திக்கின்றது. மூற்றிலும் மூன்றுவிதமானதுக்கத்தின் நிவிருத்தி கைவல்யம் எனப்படும். அது சுவபாவ சித்தமான மூன்றுகுணமற்றிருத்தல் என்றதர்மத்தால் சித்திக்கின்ற சுகம், துக்கம், மோஹம் இவைகளற்றிருத்தல் என்றதர்மத்தால் ஏற்படுகின்றது. மூன்றுகுணமற்றிருப்பதாலேயே மத்யஸ்தனாயிருக்குந்தன்மை என்ற தர்மமும் சித்திக்கின்றது. மூன்றுகுணமுள்ளவனே சுகத்தால் திருப்தியடைவதாலும் துக்கத்தால் துவேஷமடைவதாலும் மத்யஸ்த நிலையையடையமாட்டான். சுகதுக்கமற்றவனே வெனின் உதாசீனனென்றும், மத்யஸ்தனென்றும் சொல்லப்படுவான். விவேகியாக இருப்பதாலும், பரிணமமற்றிருப்பதாலும் அகர்த்திருத்வம் (கர்த்தாவாக இல்லாமலிருத்தல்) என்ற தர்மம்சித்திக்கின்றது.

(அ - கை) இஃதெல்லாமிருக்கட்டும். பிரமாணம் வாயிலாகச் செய்யவேண்டிய கார்யத்தையறிந்து சேதனனானான்

न्मते, नावकल्पते, चेतनस्याकर्तृत्वात् कर्तुश्चाचैतन्यात् इत्यत आह—

मू० ॥ तस्मात्तत्संयोगादचेतनं चेतनावदिव लिङ्गम् ।
गुणकर्तृत्वे च तथा कर्तेव भवत्युदासीनः ॥ २० ॥

"तस्मात्" इति । यतश्चैतन्यकर्तृत्वे भिन्नाधिकरणे युक्तितः सिद्धे, तस्मात् भ्रान्तिरियमित्यर्थः । 'लिङ्गम्' महदादिसुक्ष्मपर्यन्तं वक्ष्यति । भ्रान्तिबीजं तत्संयोगः तत्सन्निधानम् । अतिरोहितार्थमन्यत् ॥ २०

இதைச் செய்யவேண்டுமென்று விரும்பிச் செய்கின்றேன் என்று அனுபவமிருப்பதால் சைதன்யமும், பிரயத்னமும் ஒருவனிடமே இருப்பதாய்ச் சித்திக்கின்றது. சாங்கிய சித்தாந்தத்தில் எவன் சேதனனோ அவன் கர்த்தாவாக ஆகிறதில்லையாகையாலும், எவன் கர்த்தாவோ அவன் சேதனனாக ஆவதில்லையாகையாலும் மேற்சொல்லியபடி கர்த்தாவும் சேதனனும் ஒருவனென என்பது சித்திக்காதே என்றால் பதிலளிக்கிறார்.

(ப - ரை) **तस्मात्**=சைதன்யமும், கர்த்திருத்வமும் வெவ் வேறிடத்தில்தான் இருக்கவேண்டுமென்று சித்தித்து விட்டபடியால் **अचेतनम्**=சைதன்யமற்ற **लिङ्गम्**=மஹத், அஹங்காரம், 11 இந்திரியம், ஐந்து பூதங்களின் தன்மாத்திரைகள் இவைகள் **तत्संयोगात्**=சேதனனின் சேர்க்கையால் **चेतनावदिव** = சைதன்யமுள்ளது போலாகின்றது. **गुणकर्तृत्वेऽपि**=மூன்று குணமுள்ள புத்தியினிடம் கர்த்திருத்வம் என்ற தர்மமிருந்தபோதிலும், **उदासीनः**=கர்தாவாகாத புருஷன் (**तत्संयोगात्**=கர்த்தாவுடன் சேர்க்கையால்) **कर्तेव**=கர்த்தாவைப்போல் **भवति**=ஆகின்றான்.

(தா - ம்) லிங்கம் எனப்படும் மஹத், அஹங்காரம், 11இந்திரியங்கள், ஐந்து பூதங்களின் தன்மாத்திரைகள், இவைகள் உண்மையில் சைதன்யமற்ற தாயினும் சைதன்யமுள்ள புருஷனின் சேர்க்கையால் சைதன்யமுள்ளவைகள் போல் பாஸிக்கின்றன. இதுப்பிரமமே. இவ்விதமே கர்த்தாவாக இல்லாத புரு

'तत्संयोगात्' इत्युक्तम्, न च भिन्नयोः संयोगोऽपेक्षां विना, न चेयमुपकार्योपकारकभावं विनेत्यपेक्षाहेतुमुपकारमाह—

मू०। पुरुषस्य दर्शनार्थं कैवल्यार्थं तथा प्रधानस्य ।
पङ्ग्वन्धवदुभयोरपि संयोगस्तत्कृतः सर्गः ॥ २१ ॥

ஷனும் உண்மையில் கர்த்தாவாக இருக்கின்ற புத்தியின் சேர்க்கையால் கர்த்தாவைப் போலாகின்றான். (எ - று)

இருபத் தொன்றுவது சுலோகம்.

(அ - கை) மூன்றிய சுலோகத்தில் கர்த்தாவான அந்தக்கரணம் புருஷன் இருவருக்கும் சேர்க்கை சொல்லப்பட்டது. தனிப்பட்ட இரண்டு வஸ்துக்களுக்குச் சேர்க்கையானது ஒன்றிற்கொன்று அபேக்ஷையின்றிச் சம்பவிக்காது. அவ்வபேக்ஷை என்பது பரஸ்பரம் உபகார்யோபகாரகபாவம் (ஒன்றிற்கொன்று உபகார மேற்படுதல்) இல்லாவிடில் நேராது. என்பது பற்றி அபேக்ஷை யுண்டாவதற்குக் காரணமான உபகாரத்தைச் சொல்லுகிறார்—

(ப - பை) **प्रधानस्य**=பிரகிருதிக்கு (**पुरुषेण**=புருஷனால்) **दर्शनार्थम्**=பார்வை எற்படுவதற்காகவும் **तथा**=அவ்விதமே **पुरुषस्य**=புருஷனுக்கு **कैवल्यार्थम्**=மூன்றுவித துக்கமற்ற நிலை சம்பவிப்பதற்காகவும் ***पङ्ग्वन्धवत्***=நொண்டிகுருடன் இவர்களுக்குப்போல

---

* ஓர் நொண்டி நடக்காட்டில், தன்னையாராவது நகரத்திற்கு எடுத்துச் சென்றால் தவலையே ஒருவரையும் காணேமே என்று மிகவும் கவ்டப்பட்டு நான்கு திக்குகளையும் பார்த்துக் கொண்டிருந்தான். அக்காட்டிலேயே ஓர் குருடனும் கண்தெரியும் மனிதர்களுள் யாராவது தன்னை அழைத்துச் செல்வாரா ஒன்றும் தெரியவில்லையே என்று மிக்கவருத்தப்பட்டு கொண்டிருந்தான். இருவரும் தற்செயலாய்ச் சேர்ந்து குருடனின் கழுத்தில் நொண்டி ஏறி உட்கார்ந்து வழியைக்காட்டவே குருடன் நொண்

"पुरुषस्य" इति। प्रधानस्येति कर्मणि षष्ठी। प्रधानस्य सर्वकारणस्य यद्दर्शनं पुंरुषेण तदर्थम्। तदनेन भोग्यता प्रधानस्य दर्शिता। तत श्च भोग्यं प्रधानं भोक्तारमन्तरेण न सम्भवतीति युक्ताऽस्य भोक्त्रपेक्षा ॥

पुरुषस्य अपेक्षां दर्शयति—"पुरुषस्य कैवल्यार्थम्" इति। तथा हि भोग्येन प्रधानेन संभिन्नः पुरुषः तद्धृतं दुःखत्रयं स्वात्मन्यभिमन्यमानः कैवल्यं प्रार्थयते। तच्च सत्वपुरुषान्यताख्यातिनिबंन्धनम्। न च सत्वपुरुषान्यताख्यातिः प्रधानमन्तरेणेति कैवल्यार्थं पुरुषः प्रधानमपेक्षते। अनादित्वाच्च संयोगपरम्पराया भोगाय संयुक्तो ऽपि कैवल्याय पुनः संयुज्यत इति युक्तम् ॥

संयोगः=சேர்க்கை (**भवति**=உண்டாகின்றது) **सर्गः**=மஹத், அஹங்காரம் என்றக் கிரமமாக பிரபஞ்ச சிருஷ்டி **तत्कृतः**=பிரகிருதி புருஷன் இவர்களின் சேர்க்கையால் ஏற்படுகின்றது.

(தாத்பர்யம்) 'பிரகிருதி, புருஷனின் பார்வையைப்பெறுவதற்காகப்புருஷனை அபேக்ஷிக்கின்றது' என்று சொன்னதிலிருந்து பிரகிருதி போக்யம் என்று நிரூபித்ததாயாகின்றது. ஆகவே போக்யமான்னது (அனுபவிக்கப்படும் பொருள்) போக்தா (அனுபவிக்கிறவன்) இன்றி சம்பவிக்கார்தாகையால் பிரகிருதிக்கு போக்தாவான்னபுருஷனைப்பற்றிய அபேக்ஷை (எதிர்பார்த்தல்) பொருத்தமுள்ளதாயாகின்றது. புருஷனுக்குப் பிரகிருதி விஷயமாயுண்டாகும் அபேக்ஷையைக் காண்பிக்கிறார். **पुरुषस्य कैवल्यार्थम्**=போக்யமான பிரதானத்துடன் தாதாத்மியாத்யாசத்தை (பிரகிருதி என்பது நானேனென்ற அபிமானத்தையடைந்தால்தான் புருஷன் அந்தப் பிரகிருதியினிடமுள்ள மூன்று விதமான துக்கங்களைத் தன்னிடமுள்ளதாய்ப் பாவித்து அதனால் வருந்தி அந்த மூன்று வித துக்கமற்ற நிலையான கைவல்யத்தை விரும்பக்கூடும்.

டியைச்சுமந்து சுகமடைந்து இருவரும் லாபமடைந்தனர். இதுவே "பங்க்வந்த நியாயம்" எனப்படும்.

ननु भवत्वनयोः संयोगो, महदादिसर्गस्तु कुत इत्यत आह— "तत्कृत स्सर्ग" इति। संयोगो हि न महदादिसर्गमन्तरेण भोगाय कैवल्याय च पर्याप्त इति संयोग एव भोगापवर्गार्थं सर्गं करोतीत्यर्थः ॥ २१ ॥

सर्गक्रममाह—

அந்தக் கைவல்யமோ பிரகிருதி புருஷன் இவைகளைப்பற்றிய பேதக்ஞானத்தைக் காரணமாயுடையது. மேற் சொல்லிய பேதக்ஞானம் பிரகிருதி இல்லாவிடில் சம்பவிக்காது. ஆனது பற்றிப் பிரகிருதியைப் புருஷனும் அபேக்ஷிக்கின்றான். சங்கை— போகத்தைக் கொடுக்கின்ற அனுதியான சேர்க்கையின் வரிசையானது இருக்கும் பொழுது எவ்விதம் கைவல்யம் ஏற்படுவதற்காகப் போகத்திற்கு விரோதியான ஸம்யோகம் ஏற்படும் எனின்? உத்தரம்—பல விதமான புண்யகர்மங்கள் காரணமாய் பிரகிருதி புருஷன் இவர்களைப்பற்றிச் சிரவணஞ்செய்து அதனல் எவனுக்கு மித்யாக்ஞானம் (பிரகிருதியே நான் என்ற அபிமானம்) தொலைகின்றதோ அவனுக்குக் கைவல்யத்திற்குக் காரணமான பிரகிருதி புருஷ ஸம்யோகம் ஏற்படலாம். ஆகவே போகத்தைக் கொடுக்கின்ற பிரகிருதி புருஷஸம்யோகம் வேறுபட்டதாயும், மோக்ஷத்திற்குக் காரணமான பிரகிருதி புருஷ ஸம்யோகம் வேறுபட்டதாயு மிருப்பதால் இரண்டிற்கும் ஒரே சமயத்தில் சம்பவம் கிடையாதானது பற்றி மேற்ச் சொல்லிய சந்தேஹத்திற் கிடமில்லாமலாகிவிட்டது. சங்கை—பிரகிருதி புருஷன் இருவருக்கும் மேற் சொல்லிய காரணங்களால் சேர்க்கையுண்டாகட்டும். மஹத்முதலிய கார்யங்கள் எதற்காக உண்டாகின்றன என்றால்? உத்தரம் **तत्कृतस्सर्गः** பிரகிருதி புருஷன் இவர்களின் சேர்க்கை மஹத்முதலிய கார்யசிருஷ்டி ஏற்படாவிடில் போகத்தையோ கைவல்யத்தையோ தருதானதுபற்றி பிரகிருதி புருஷன் இவர்களின் சேர்க்கையே போகம் மோக்ஷம் இவைகள் ஏற்படுவதற்காகச் சிருஷ்டியைச் செய்கின்றது.

मू०। प्रकृतेर्महांस्ततो ऽहङ्कारस्तस्माद्गणश्च षोडशकः ।
तस्मादपि षोडशकात्पंचभ्यः पंच भूतानि ॥ २२ ॥

"प्रकृतेः" इति । प्रकृतिरव्यक्तम् । महदहङ्कारौ वक्ष्यमाणलक्षणौ । एकादशेन्द्रियाणि वक्ष्यमाणानि, तन्मात्राणि च पंच, सो यं षोडशसंख्यापरिमितो गणः षोडशकः । तस्मादपि षोडशकादपकृष्टेभ्यः पंचभ्यः तन्मात्रेभ्यः पंच भूतान्याकाशादीनि ॥

இருபத்திரண்டாவது சுலோகம்

(அ - கை) பிரபஞ்ச சிருஷ்டிக் கிரமத்தை உபதேசிக்கிறார்—

(ப - ரை) **प्रकृतेः**=மூலப்பிரகிருதியினிடமிருந்து **महान्**=மஹத்தத்துவமும், **ततः**=அந்த மஹத்தத்துவத்தினிடமிருந்து **अहङ्कारः**=அஹங்காரம் என்ற தத்துவமும் **तस्मात्**=அதனிடமிருந்து **षोडशकोगणश्च**=11 இந்திரியங்கள், 5 தன்மாத்திரைகள் என்ற 16 வஸ்துக்களடங்கிய கூட்டமும் **तस्मादपि षोडशकात्**=மேற்கூறின 16 வஸ்துக்களடங்கிய கூட்டத்தைக் காட்டிலும் (**अपकृष्टेभ्यः**=குறைந்த எண்ணுள்ள) **पञ्चभ्यः**=ஐந்து தன்மாத்திரைகளினின்றும் **पञ्चभूतानि**=பிருதிவீ, ஜலம், நெருப்பு, காற்று, ஆகாசம் என்ற ஐந்து பூதங்களும் (**भवन्ति**=உண்டாகின்றன.)

(தா - ம்) ஸ்தூலமான பூதங்களுக்குக் காரணமான சூக்ஷ்மமான ஓர் வித வஸ்து "தன்மாத்திரை" எனப்படும். அது ஒவ்வொரு பூதத்திற்கும் ஒவ்வொன்று வீதம் ஐந்து விதமாக இருக்கின்றது. ஆகாசம் என்ற பூதத்திற்குக் காரணமான தன்மாத்திரை சப்ததன்மாத்திரை என்றும், காற்றிற்குக் காரணமான தன்மாத்திரை ஸ்பர்ச தன்மாத்திரை என்றும், அக்னிக்குக் காரணமான தன்மாத்திரை ரூப தன்மாத்திரை என்றும், ஜலத்திற்குக் காரணமான தன்மாத்திரை ரஸ தன்மாத்திரை என்றும், பிருதிவிக்குக் காரணமான தன்மாத்திரை கந்த தன்மாத்திரை என்

तत्र शब्दतन्मात्रादाकाशं शब्दगुणं, शब्दतन्मात्र सहितात् स्पर्शतन्मात्राद्वायुः शब्दस्पर्शगुणः, शब्दस्पर्शतन्मात्रसहिताद्रूपतन्मात्रात्तेजः शब्दस्पर्शरूपगुणं, शब्दस्पर्शरूपतन्मात्रसहिताद्रसतन्मात्रादापः शब्दस्पर्शरूपरसगुणाः शब्दस्पर्शरूपरसतन्मात्रसहिताद्गन्धतन्मात्राच्छब्दस्पर्शरूपरसगन्धगुणा पृथिवी जायत इत्यर्थः ॥ २२ ॥

अव्यक्तं सामान्यन्तो लक्षितम् "तद्विपरीतमव्यक्तम्" (कारिका १०) इत्यनेन, विशेषतश्च "सत्वं लघु प्रकाशकम्" (कारिका १३) इत्यनेन, व्यक्तमपि सामान्यतो लक्षितम् "हेतुमत्" (कारिका १०) इत्यादिना । सम्प्रति विवेकज्ञानोपयोगितया व्यक्तविशेषं बुद्धिं लक्षयति—

றும், சொல்லப்படும். அவற்றுள் சப்த தன்மாத்திரை யினின்றும் சப்தம் என்ற குணமுள்ள ஆகாசமும், சப்ததன்மாத்திரை புடன் கூடினஸ்பர்சதன்மாத்திரை யினின்றும் சப்தம் ஸ்பர்சம் இவ்விரண்டு குணமுள்ள வாயுவும், சப்ததன்மாத்திரை ஸ்பர்ச தன்மாத்திரை இவ்விரண்டுடன் கூடின ரூப தன்மாத்திரை யினின்றும் சப்தம், ஸ்பர்சம், ரூபம் என்ற குணமுள்ள தேஜஸ் ஸும், சப்த தன்மாத்திரை, ஸ்பர்ச தன்மாத்திரை, ரூப தன்மாத்திரை இவைகளுடன் கூடின ரஸ தன்மாத்திரை யினின்றும் சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம் இன்னுன்கு குணங்களுள்ள ஜலமும், சப்த தன்மாத்திரை, ஸ்பர்சதன்மாத்திரை, ரூப தன்மாத்திரை, ரஸ தன்மாத்திரை, இவைகளுடன் கூடின கந்த தன்மாத்திரை யினின்றும் சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் இவ்வைந்து குணங்களுள்ள பிருதிவியும் உண்டாகின்றது. ஆனது பற்றியே பிருதிவீ முதலியவற்றில் மேற்கூறியப் பிரகாரம் குணங்களனுபவிக்கப்படுகின்றன.

இருபத்து மூன்றுவது சுலோகம்.

(அ - கை) **तद्विपरीतमव्यक्तम्** என்ற 10வது காரிகையால் அவ்யக்தம் பொதுவிலும் **सत्वंलघुप्रकाशकम्** என்ற 13வது

मू०। अध्यवसायो बुद्धिर्धर्मो ज्ञानं विराग ऐश्वर्यम्।
सात्त्विकमेतद्रूपं तामसमस्माद्विपर्यस्तम् ॥ २३ ॥

" अध्यवसाय " इति। ' अध्यवसायो बुद्धिः ' क्रियाक्रियावतो-रभेदविवक्षया । सर्वो व्यवहर्ताऽऽलोच्य मत्वा ऽहमत्राधिकृत इत्यभिमत्य कर्तव्यमेतन्मयेत्यध्यवस्यति, ततश्च प्रवर्तत इति लोकसिद्धम् । तत्र यो यं कर्तव्यमिति विनिश्चयःचितिसन्निधानादापन्नचैतन्याया बुद्धेः सोध्यव-

---

சுலோகத்தால் விசேஷமாகவும் லக்ஷணங்கள் வாயிலாக நிரூபிக்கப்பட்டன. வியக்தமும் **हेतुमदनित्यम्** என்ற 10வது சுலோகத்தால் பொதுவில் நிரூபிக்கப்பட்டது. இப்பொழுது விவேகக் ஞானம் ஏற்படுவதற்காக வியக்த விசேஷமான புத்தியை நிரூபணஞ் செய்கிறார்.

(ப - ரை) **बुद्धिः**=புத்தி **अध्यवसायः**=நாம் இதைச் செய்ய வேண்டும் என்ற நிச்சயரூபமான விருத்தியை அஸாதாரண தர்மமாக உடையது. **धर्मः**=தர்மமும், **ज्ञानम्**=அறிவும் **विरागः**=வைராக்யமும், **ऐश्वर्यम्**=அணிமாதியான சித்திகளுக்குக் காரணமான ஓர்வித தர்மமும் **एतत्**=இவையாவும் **सात्विकंरूपम्**=சத்வகுணத்தினால் புத்தியில் ஏற்படக்கூடிய குணங்கள். **अस्मात्**=மேற்சொல்லிய தர்மஞானவைராக்யங்களைக் காட்டிலும் **विपर्यस्तम्**=மாறுபட்ட-அதர்மம், அக்ஞானம், அவைராக்யம், அனைச்வர்யம் இவைகள் **तामसंरूपम्**=புத்திக்கு தமோகுணத்தினால் ஏற்படக் கூடிய தர்மங்கள்.

(தா - ம்) கிரியை (கார்யம்) கிரியாவத் (காரணம்) இவ்விரண்டும் ஒன்றெனக்கருதி **अध्यवसायो बुद्धिः** என்று சொல்லப்பட்டது. அதாவது— அந்தந்தக் கார்யங்களை யனுஷ்டிக்கின்ற ஒவ்வொரு மனிதனும் இந்திரியங்களால் முதலில் வஸ்துக்களை யறிந்து பிறகு அந்த வஸ்துக்கள் இஷ்டசாதனமா, அல்லது அனிஷ்ட சாதனமா, வெளியிடலாமா, வெளியிடக் கூடாதா என்று பகுத்தறிந்து பிறகு நமக்கு இதைச் செய்வதற்குச் சக்தி

सायः, बुद्धेरसाधारणो व्यापारः, तद्भेदा बुद्धिः । स च बुद्धेर्लक्षणं समानासमानजातीयव्यवच्छेदकत्वात् ॥

तदेवं बुद्धिं लक्षयित्वा विवेकज्ञानोपयोगिनस्तस्या धर्मान्सात्त्विक तामसानाह—"धर्मो ज्ञानं विराग ऐश्वर्यम् । सात्त्विकमेतद्रूपम्, तामसमस्माद्विपर्यस्तम्" इति । धर्मो ऽभ्युदयनिश्रेयसहेतुः, तत्र यागदानाद्यनुष्ठानजनितो धर्मो ऽभ्युदयहेतुः अष्टाङ्गयोगानुष्ठानजनितश्च निश्रेयसहेतुः । गुणपुरुषान्यताख्यातिर्ज्ञानम् । विरागो वैराग्यम् रागाभावः ॥

तस्य——यतमानसंज्ञा व्यतिरेकसंज्ञा एकेन्द्रियसंज्ञा वशीकारसंज्ञा ——इति चतस्रः संज्ञाः । रागादयः कषायाश्चित्तवर्तिनः, तैरिन्द्रियाणि यथास्वं विषयेषु प्रवर्त्यन्ते । तन्मा ऽत्र प्रवर्तिषत विषयेष्विन्द्रियाणीति

இருக்கின்றது, நாம் இதில் அதிகாரியே என்று தெரிந்து கொண்டு பிறகு "இது நம்மால் செய்யத்தகுந்தது, அனுஷ்டிக்க வேண்டும்" என்று நிச்சயித்துக் கொள்ளுகிறான். பிறகே செய்வதற்கு ஆரம்பிக்கிறான் என்பது லோகானுபவத்தால் சித்திக்கின்றது. புருஷனின் சான்னித்ய வசத்தால் சைதன்யத்தை யடைந்த புத்தியினிடம் உண்டாகின்ற "இதைச் செய்யவேண்டும்" என்ற நிச்சய ரூபமான யாதொரு விருத்தியுண்டோ, அதுவே அத்யவசாய மெனப்படும். அவ்வத்யவசாயம் புத்தியின் அஸாதாரணமான வியாபாரம். அந்த வியாபாரத்தினின்றும் அதிக பேதமற்ற தாய்ப்புத்தி இருக்கின்றது. புத்திக்குச் ஸமான ஜாதீயங்களான மஹத்முதலிய வற்றினின்றும், அஸமான ஜாதீயமான புருஷனிடமிருந்தும் பேதத்தை அறிந்து கொள்வதற்குச்சாதன மாயிருப்பதுபற்றி அத்யவஸாயம் என்பது புத்தியின் லக்ஷணமாக ஆகின்றது.

இவ்விதம் புத்திக்கு லக்ஷணங்கூறி விவேகக்ஞான முண்டாவதற்குச் ஸாதனமான புத்தியின் ஸாத்விக, தாமஸ தர்மங்களை யுபதேசிக்கிறார்—அப்யுதயத்திற்கும் (சுவர்க்கம், பசு, புத்தி

तत्परिपाचनायारम्भः प्रयत्नो यतमानसंज्ञा । परिपाचने चानुष्ठीयमाने केचित्कषायाः पक्काः, पक्ष्यन्ते च केचित्, तत्रैवं पूर्वापरीभावे सति पक्ष्यमाणेभ्यः कषायेभ्यः पक्कानां व्यतिरेकेणावधारणं व्यतिरेकसंज्ञा । इन्द्रियप्र-

---

ரண்முதலிய பலன்களுக்கும்) மோக்ஷத்திற்கும் காரணமாக இருப்பது "தர்மம்" எனப்படும். அவற்றுள் யாகம், தானம் முதலியவற்றை அனுஷ்டிப்பதால் எற்படுகின்ற *அந்தக் காரணஸம்ஸ்காரரூபமான தர்மம் அப்யுதயத்திற்குக்காரணமாகின்றது. அஷ்டாங்கயோகானுஷ்டான த்தாலுண்டாகின்ற தர்மம் மோக்ஷத்திற்குக் காரணமாக ஆகின்றது. பிரகிருதி புருஷன் இவற்றை வேறுபட்டதாயறிதல் "ஞானம்" எனப்படும். வைராக்கியம் ஆசையில்லாமை. இவையாவும் புத்தியின் தர்மங்களாக ஆகின்றன.

அந்த வைராக்யம்யதமான ஸம்க்ஞை, வியதிரேக ஸம்க்ஞை, ஏகேந்திரியஸம்க்ஞை, வஸீகாரஸம்க்ஞை என்று நான்கு வகைப்படும். காமம், குரோதம் முதலிய தோஷங்கள் சித்தத்திலிருக்கின்றன. அவற்றில் இந்திரியங்கள் தூண்டப்பட்டு அவ்வவற்றின் விஷயங்களில் பிரவிருத்திக்கின்றன. ஆகவே "இந்திரியங்கள் பார்வ்யமான விஷயங்களில் பிரவிருத்திக்கவேண்டாம்" என்று

---

* வைதிக கர்மங்களுள் சிலவற்றிற்கு உபதேசிக்கப்பட்ட பலன்கள் அனுஷ்டிக்கப்படும் கர்மம் முடிவுபெற்ற அடுத்தகூணத்தில் உண்டாகக்கூடாத நிலையிலிருக்கின்றன. சுவர்க்கம், புத்திரன் முதலிய பலன்களை எடுத்துக்கொள்வோம். இவை ஒருக்காலும் யாகம் முதலியவற்றை அனுஷ்டித்து முடித்த அடுத்தகூணத்தில் உண்டாகக்கூடியவையல்ல. மேலும் பலன்களைக்குறித்தோ யாகாதிகர்மங்கள் சாதனமாயாகின்றனவென்று வேதங்கள்கூறுகின்றன. இது பொருந்துவதற்காக யாகாதி கர்மங்கள் அனுஷ்டித்து முடிந்தவுடன் அதனால் புருஷனுடைய அந்தக் காணத்தில் காலாந்தரத்திலுண்டாகக்கூடிய பலத்திற்குச் சாதனமாய் ஓர் வித அதிசயமுண்டாகின்றது. அதுவே "தர்மம்" என்று சொல்லப்படும் என்று அறியவேண்டும்.

वृत्यसमर्थतया पक्वानामौत्सुक्यमात्रेण मनसि व्यवस्थापनमेकेन्द्रियसंज्ञा । औत्सुक्यमात्रस्यापि निवृत्तिरुपस्थितेष्वपि दृष्टानुश्रविकविषयेषु, या संज्ञा-नयात् पराचीना सा वशीकारसंज्ञा । यामत्रभगवान् पतंजलिर्वर्णयांचकार —"दृष्टानुश्रविकविषयवितृष्णस्य वशीकारसंज्ञा वैराग्यम्" इति (योग-सूत्र--१।१५) सोऽयं बुद्धिधर्मो विराग इति ॥

விஷயங்களில் தோஷ தர்சனத்தால் காமம் முதலிய தோஷங்களை இந்திரியங்களைத் தூண்டுவதற்குச் சக்தியற்றனவாகச் செய்து கொள்வதற்காக முயற்சிப்பது "யதமான சம்க்ஞை" எனப்படும் சித்ததோஷங்களின் சக்தியைக்குறைத்துக் கொள்வதற்காக முயற்சி செய்துகொண்டு வருங்காலையில் சில தோஷங்களின் சக்தி விலகிவிடும், சில தோஷங்களின் சக்தி விலகவேண்டிய நிலையிலிருக்கும். இவ்விதம் தோஷங்களின் முன்பின் நிலை இருக்கும்பொழுது இன்னதோஷம் இந்திரியங்களைத்தூண்டுவதற்குரிய சக்தியுள்ளதாயிருக்கின்றதென்று பகுத்தறிவது "வியதிரேக ஸம்க்ஞை" எனப்படும். இந்திரியங்களைத் தூண்டுவதற்குச் சக்தியற்றனவாகச்செய்யப்பட்ட காமனையை மனத்திற்குள் மட்டும் நிருத்துவது "ஏகேந்திரியசம்க்ஞை" எனப்படும். ஐஹிகா முஷ்மிக விஷயங்கள் தனது சமீபத்திலிருந்தபோதிலும், அவற்றைப்பற்றி மனத்தில் இந்திரியங்களைத்தூண்டுவதற்குச் சக்தியற்ற காமனைகூட உண்டாகாமலிருத்தல் "வசீகார ஸம்க்ஞை" எனப்படும். இந்தநான்காவதான வைராக்கியத்தையே பதஞ்சலிமஹரிஷி **दृष्टानुश्रविकविषयवितृष्णस्य वशीकारसंज्ञा वैराग्यम्** என்றதால் நிரூபணஞ் செய்திருக்கிறார். இதன் பொருள்—ஸ்திரீகள், அன்னம், பானம் முதலியனதிருஷ்டம் எனப்படும். சுவர்க்கம், தேஹமற்றிருத்தல் முதலியன வேதம் வாயிலாக அறியப்படுவதுபற்றி ஆனுச்ரவிகம் எனப்படும். இவ்விரண்டு விஷயங்களையும்பற்றி இந்திரியங்களைத்தூண்டுவதற்குச் சக்தியற்ற காமனைகூட உண்டாகாமலிருப்பது "வசீகார ஸம்ஞா வைராக்கியம்" எனப்படும் என்பது. மேற் சொல்லிய நான்குவிதமான வைராக்யமும் புத்திதர்மமென்று எற்பட்டது.

ऐश्वर्यमपि बुद्धिधर्मो, यतो ऽणिमादिप्रादुर्भावः । (१) अत्राणि मा अणुभावः, यतः शिलामपि प्रविशति । (२) लघिमा लघुभावः, यतः सूर्यमरीचीनालंब्य सूर्यलोकं याति । (६) गरिमा गुरुभावः, यतो गुरु र्भवति । (४) महिमा महतो भावः, यतो महान् भवति । (५) प्राप्तिः, यतोऽङ्गुल्यग्रेण स्पृशति चन्द्रमसम् । (६) प्राकाम्यम्, इच्छानभिघातः यतो भूमावुन्मज्जति निमज्जति च, यथोदके । (७) वशित्वम्, यतो भूतभौतिकं वशीभवत्यवश्यम् । ईशितृत्वम्, यतो भूतभौतिकानां प्रभवस्थितिलयानामीष्टे । (८) यच्च कामावसायित्वम् सा सत्यसङ्कल्पता, येन यथाऽस्य

அணிமாமுதலிய சித்திகள் உண்டாவதற்குச் சாதனமாக இருக்கின்ற ஐச்வர்யமும் புத்தியினுடைய தர்மமே. **१ अणिमा**=மிகவும் சிறியவஸ்துவாக இருத்தல். இதனால் கற்பாறையிலும் பிரவேசிப்பதற்குச் சக்தியுண்டாகின்றது. **२ लघिमा**=மிகவும் இலேசாக இருத்தல் இதனால். சூரியனின் கிரணங்களைப் பிடித்துக் கொண்டு சூரியலோகஞ் செல்லுவதற்குச் சக்தி ஏற்படுகின்றது. **३ गरिमा**=மிகவும் கனமாக இருத்தல். அதனால் மலையைப்போல் மிகவும் பளுப்பெற்றிருப்பான். **४ महिमा**=மிகவும் பெரிதாக இருத்தல். இதனால் மலையைப்போல் பெரிதாகக் காணப்படுவான். **५ प्राप्तिः**=இருந்தவிடமிருந்துகொண்டே எல்லா வஸ்துவையுமடைதல். இதனால் சந்திரமண்டலத்தையும் கையினால் தொடக்கூடிய சக்தியுண்டாகின்றது. **६ प्राकाम्यम्**=சங்கல்பத்திற்குத் தடை ஏற்படாமை. இதனால் ஜலத்தில் மூழ்கிக் கிளம்புவதுபோல் பூமியிலும் மூழ்கிக்கிளம்ப வல்லமை ஏற்படுகின்றது. **७ वशित्वम्**=எல்லாவற்றையும் தனக்கு அதீனமாக்கிக்கொள்ளுதல். இதனால் பிருதிவீ, ஜலம் முதலிய பஞ்சபூதங்களும், அதன் காரியமான மரம் மட்டை முதலியவைகளும் வசமாகி விடுகின்றன. **ईशितृत्वम्**=பிருதிவீ முதலிய ஐந்து பூதங்கள் அதன் காரியங்கள் இவற்றின் உத்பத்தி, ஸ்திதி, நாசம் இவற்றிற்குச் சமர்த்தனாக இருத்தல். **८ कामावसायित्वम्**=சங்கல்பப்படி ஏற்படுதல். இதனால் பூதங்கள் எந்தெந்தவிதமாக ஆகவேண்டுமென்று சங்கல்பிக்கிறபடியே அவ்

सङ्कल्पो भवति भूतेषु, तथैव भूतानि भवन्ति। अन्येषां मनुष्याणां निश्चयाः निश्चेतव्यमनुविधीयन्ते, योगिनस्तु निश्चेतव्याःपदार्थाः निश्चयम्। इति चत्वारः सात्त्विका बुद्धिधर्माः॥ तामसास्तु तद्विपरीता बुद्धिधर्माः। अधर्माज्ञानावैराग्यानैश्वर्याभिधानाश्चत्वार इत्यर्थः॥ २३॥

अहङ्कारस्य लक्षणमाह—

मू०। अभिमानोऽहङ्कारः, तस्माद्द्विविधः प्रवर्तते सर्गः।
एकादशकश्च गणस्तन्मात्रापञ्चकश्चैव॥ २४॥

விதமே ஆகிவிடுகின்றன. அதாவது விஷமும் அமுதமாக வேண்டும் என்று சங்கல்பித்தால் அது அவ்விதமே அமுதமாகிவிடுகின்றது. யோகியைத்தவிர்த்து மற்றவர்கள் பதார்த்தங்களின் நிலையை யனுசரித்து ஒன்றைச் சங்கல்பிக்கவேண்டியவர்களாகவோ, நிச்சயிக்க வேண்டியவர்களாகவோ இருக்கின்றனர் யோகிகளுக் கோவெனில் அவர்களின் சங்கல்பத்தையும், நிச்சயத்தையும் வஸ்துக்கள் அனுஸரிக்கின்றன. மேற்சொல்லிய நான்கு தர்மங்களும் ஸாத்விகமான புத்திதர்மங்கள். தாமஸமான புத்திதர்மங்களோ வெனில் மேற்சொல்லியதற்கு மாறுனைவைகள் அனைவையாவன— அதர்மம், அக்ஞானம், அனைவராக்யம், அநீசுவர்யம் என்பனவாம்.

இருபத்துநான்காவது சுலோகம்

(அ - கை) அஹங்காரத்தின் லக்ஷணத்தை உபதேசிக்கிறார்—

(ப- ரை) **अहङ्कारः**=அஹங்காரம் என்றதத்துவம் **अभिमानः**='நான்' என்ற சித்தவிருத்தியை அஸாதாரண வியாபார்மமாயுடையது. **तस्मात्**=அதனிடமிருந்து **एकादशकः**=11 எண்ணுள்ள வஸ்துக்களடங்கிய **गणः**=கூட்டம் **पञ्चकः**=ஐந்து எண்ணுள்ள **तन्मात्रश्च**=தன்மாத்திரை (**इति** = என்ற) **द्विविधः**=இரண்டு விதமான **सर्गः**=சிருஷ்டி **प्रवर्तते**=உண்டாகின்றது.

"अभिमान" इति । 'अभिमानो ऽहङ्कारः' । यत् खल्वालोचितं-मतं च तत्र 'अहमधिकृतः,' 'शक्तः खल्वहमत्र,' 'मदर्था एवामी विषयाः', 'मत्तो नान्यो ऽत्राधिकृतः कश्चिदस्ति,' 'अतो ऽहमस्मि' इति यो ऽभिमानः सो ऽसाधारणव्यापारत्वादहङ्कारः । तमुपजीव्य हि बुद्धिरध्यवस्यति—'कर्तव्यमेतन्मया' इति निश्चयं करोति ॥

तस्य कार्यभेदमाह—"तस्माद्द्विविधः प्रवर्तते सर्गः" इति। प्रकारद्वयमाह—"एकादशकश्च गणः" इन्द्रियाह्वः, तन्मात्रापञ्चकश्चैव । द्विविध एव सर्गो ऽहङ्कारात् न त्वन्य इति 'एव' कारेणावधारयति ॥ २४ ॥

स्यादेतत्—अहङ्कारादेकरूपात्कथं जडप्रकाशकौ गणौ विलक्षणौ भवत इत्यत आह—

(தா - ம்) எந்தவஸ்துவானது இந்திரியங்கள் வாயிலாக அறியப்பட்டு 'இவ்விதந் தானிருக்கின்றது' என்று நிர்ணயிக்கப்பட்டு விட்டதோ அந்த வஸ்துவில் "நான் இதில் அதிகாரம் பெற்றவன், நான் இதைச் செய்வதற்குச் சக்திவாய்ந்தவனல்லவா? எனக்காகவே இவ்விஷயங்கள் ஏற்பட்டிருக்கின்றன, என்னைத்தவிர்த்து மற்றவர்க்கிதைச் செய்யவதிகாரங்கிடையா, நான் தான் இதைச் செய்வதற்குச் சக்தியுள்ளவன்" என்பது முதலிய யாதொரு 'அபிமானம்' எனப்படும் சித்தவிருத்தியுண்டோ அதை அஸாதாரண வியாபாரமாபுடையதாக அஹங்காரமிருக்கின்றது. அந்த அஹங்காரத்திலேயே "நாம் இதைச்செய்யவேண்டும்" என்று உறுதி செய்து கொள்ளுகிறான். "இந்திரியங்களும், ஐந்துதன்மாத்திரைகளும் அஹங்காரத்தினிடமிருந்து உண்டாகின்றன. மேற்சொல்லிய இரண்டினின்றும் வேறுபட்டதாய் மூன்றுவதுபிரிவுள்ள சிருஷ்டி அஹங்காரத்தினின்றும் உண்டாவதில்லை என்பது **एव** காரத்தால் தெரிவிக்கப்படுகிறது. (எ - று)

मू० । सात्त्विक एकादशकः प्रवर्तते वैकृतादहङ्कारात् ।
भूतादेस्तन्मात्रः स तामसः, तैजसादुभयम् ॥ २५ ॥

"सात्त्विक" इति । प्रकाशलाघवाभ्यामेकादशक इन्द्रियगणः सात्त्विको वैकृतादहङ्कारात्प्रवर्तते । भूतादेस्त्वहङ्कारात्तामसात्तन्मात्रो गणः प्रवर्तते । कस्मात् ? यतः 'स तामसः' एतदुक्तम्भवति 'यद्यप्येको ऽहङ्कारस्तथा ऽपि गुणभेदोद्भवाभिभवाभ्यां भिन्नं कार्यं करोति' इति ॥

இருபத்தைந்தாவது சுலோகம்

(அ - கை) இஃதெல்லாமிருக்கட்டும். ஓரேவிதமாயுள்ள அஹங்காரத்தினின்றும் ஜடமாயுள்ளதும், பிரகாசகுணமுள்ளதுமான, மூற்றிலும் வேறுபட்ட இந்திரியம், தன்மாத்திரை என்ற வஸ்துக்கள் எவ்விதமுண்டாகக் கூடும் எனச் சந்தேகித்துப் பதிலளிக்கிறார்—

(ப - ரை) **वैकृतात्**=ஸாத்விகமான **अहङ्कारात्**=அஹங்காரத்தினின்றும் **सात्विकः**=சத்வகுணதிக்யம் வாய்ந்த **एकादशकः** = 11 இந்திரியம் **प्रवर्तते**=உண்டாகின்றது **भूतादेः**=பஞ்சபூதங்களுக்குக் காரணமான தாமஸாஹங்காரத்தினின்றும் **तन्मात्रः**=ஐந்து பூதங்களின் காரணமான தன்மாத்திரை என்றதத்துவம் **प्रवर्तते**=உண்டாகின்றது. **सः**=அந்தத் தன்மாத்திரைகளின் கூட்டம் **तामसः**=தமோகுணதிக்யம் வாய்ந்ததாக இருக்கின்றது. **तैजसात्**=ராஜஸாஹங்காரத்தினின்றும் **उभयम्**=11 இந்திரியம் 5 தன்மாத்திரை இவ்விரண்டும் (**भवति**=உண்டாகிறது.)

(தா - ம்) **सत्वं लघु प्रकाशकम्** என்ற சுலோகத்தில் "பிரகாசமும், லாகவமும் சத்வகுணத்தின் கார்யம்" என்று நிரூபித்திருக்கிறோம். தன்னிடமேவருன வஸ்துவையும் புலப்படும்படிச் செய்தலே பிரகாசம் எனப்படும். மேற்சொல்லிய இரண்டு குணங்களும் இந்திரியங்களிட மிருப்பதால் அவைகள் ராஜஸ்தமோகுணங்கள் குறைவுபட்டு ஸத்வகுணதிக்யம் வாய்ந்த

ननु यदि सत्त्वतमोभ्यामेव सर्वं कार्यं जन्यते तदा कृतमकिञ्चित्करेण रजसेत्यत आह—"तैजसादुभयम्" इति। तैजसात् राजसादुभयं गणद्वयं भवति। यद्यपि रजसो न कार्यान्तरमस्ति, तथा ऽपि सत्त्वतमसी स्वयमक्रिये समर्थे अपि न स्वस्वकार्यं कुरुतः; रजस्तु चलतया ते यदा चालयति तदा स्वकार्यं कुरुत इति। तदुभयस्मिन्नपि कार्ये सत्त्वतमसोः क्रियोत्पादनद्वारेणास्ति रजसः कारणत्वमिति न व्यर्थं रज इति ॥ २५ ॥

அஹங்காரத்தினிட மிருந்து உண்டாகின்றன. அதாவது பிரா கிருதமானசகல காரியங்களும் ஸத்வம், ராஜஸ், தமஸ் என்ற மூன்று குணமுள்ளனவாக இருக்கின்றன வென்றும், ஒவ்வொரு குணங்களும் தனித்தனியே தலைக்கிளப்பும் பொழுது மற்றவை அடங்கிவிடுகின்றன வென்றும் முன்னர் சொல்லி யிருக்கிறோம். ஆகவே ராஜஸ், தாமாகுணங்கள் குறைவுபெற்று ஸத்வகுணம் மேலிட்டிருக்கும் அஹங்காரத்தினின்றும் இந்திரியங்களுண்டாகின்றன. ராஜஸ் ஸத்வகுணங்கள் குறைவு பெற்று தாமாகுணம் மேலிட்டிருக்கும் அஹங்காரத்தினின்றும் ஐந்து தன்மாத்திரைகள் உண்டாகின்றன. ஆகவே அஹங்காரம் என்பது ஒன்றாக இருந்த போதிலும் அந்தந்த குணங்கள் தலைக்கிளப்புவதாலும், அடங்கிவிடுவதாலும் வெவ்வேறான காரியத்தைச் செய்கின்ற தென்று சொன்னதாக ஏற்பட்டது. ராஜாகுணமானது இந்திரியசிருஷ்டியிலும், தன்மாத்திரைகளின் சிருஷ்டியிலும் எவ்விதம் கலக்கின்றது என்றால்—ஸத்வம் தமஸ் இவ்விரண்டும் சுவபாவத்தில் கிரியையற்ற தாகையால் ராஜாகுணத்தின் ஸம்பந்தம் ஏற்படாவிடில் தத்தமது காரியத்தைச் செய்வதற்குச் சக்தியற்றதாயாகின்றது. சலிப்பதையே சுவபாவமாயுடைய ராஜாகுணத்தின் ஸம்பந்தம் ஏற்பட்டால் ஸத்வம், தமஸ் இவ்விரண்டு குணங்களும் தத்தமது காரியத்தையுண்டு பண்ணுகின்றன. ஆகவே ராஜாகுணமானது ஸத்வம், தமஸ் இவ்விரண்டு குணங்களுக்கும் கிரியையையுண்டு பண்ணி இந்திரியங்களையும், தன்மாத்திரைகளையும் உண்டுபண்ணுவதால் இரண்டும் ராஜாகுணத்தாலுண்டாவதாய்ச் சொல்லப்பட்டது. (எ - று)

सात्त्विकमेकादशकमाख्यातुं बाह्येन्द्रियदशकं तावदाह—

मू०। बुद्धीन्द्रियाणि चक्षुःश्रोत्रघ्राणरसनत्वगाख्यानि।
वाक्पाणिपादपायूपस्थाः कर्मेन्द्रियाण्याहुः ॥ २६ ॥

"बुद्धीन्द्रियाणि" इति। सात्त्विकाहङ्कारोपादानत्वमिन्द्रियत्वम्। तच्च द्विविधम्, बुद्धीन्द्रियं कर्मेन्द्रियं च। उभयमप्येतदिन्द्रस्यात्मनश्चिन्हत्वादिन्द्रियमुच्यते। तानि च स्वसंज्ञाभिश्चक्षुरादिभिरुक्तानि। तत्र रूपग्रहणलिङ्गं चक्षुः, शब्दग्रहणलिङ्गं श्रोत्रम्, गन्धग्रहणलिङ्गं घ्राणम्, रसग्रहण-

---

இருபத்தாறுவது சுலோகம்

(அ - கை) ஸாத்விகமான வஸ்துக்களடங்கிய கூட்டம் இன்னது என்பதை உபதேசிப்பதற்காக வெளியிலிருக்கின்ற 10 இந்திரியங்களை முதலில் உபதேசிக்கிறார்—

(ட-ரை) **चक्षुःश्रोत्रघ्राणरसनत्वगाख्यानि**—கண், காது, மூக்கு, நாக்கு, த்வக் எனப் பெயருள்ள இவ்விந்திரியங்களை **बुद्धीद्रियाणि**=புத்தீந்திரியங்களாகவும், **वाक्पाणिपादपायूपस्थाः**=வாய், கை, கால், மலத்வாரம், ஆண் பெண் குறிகள் இவைகளை **कर्मेन्द्रियाणि**=கர்மேந்திரியங்களாகவும் **आहुः**=சொல்லுகின்றனர்

(ண - ம்) ஸாத்விகமான அஹங்காரத்தை உபாதானகாரணமாயுடைத்தாயிருப்பது "இந்திரியம்" எனப்படும். அவ்விந்திரியம்" புத்தீந்திரியம், "என்றும் கர்மேந்திரியம்" என்றும் இருவகைப்படும். இவ்விரண்டும் இந்திரன் எனப்படும் ஆத்மவஸ்துவை அனுமிப்பதற்குச் சாதனமாயிருப்பது பற்றி "இந்திரியம்" என்ற பதத்தால் வியவஹரிக்கப்படுகின்றது. அவ்விந்திரியங்கள் அவ்வவற்றின் பெயர்களால் சுலோகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கண்ணானது வெளுப்பு, கருப்பு முதலிய நிறங்களின் அறிவை லிங்கமாயுடையதாயிருக்கின்றது. அதாவது வெளுப்பு கருப்பு முதலியவற்றைப் பற்றிய அறிவைக்கொண்டு அதையுண்டுபண்ணக்கூடிய அஸாதாரணமான (இன்றியமை

लिङ्गं रसनम्, स्पर्शग्रहणलिङ्गं त्वक्, इति ज्ञानेन्द्रियाणां संज्ञा । एवं वागादीनां कार्यं वक्ष्यति (कारिका २८) ॥ २६ ॥

एकादशमिन्द्रियमाह–

யாத) கருவி ஒன்றிருக்கவேண்டும் என்று ஊஹிக்கிறோம். அது கறுவிழியின் நுணியில் இருக்கின்றது அதையே "சக்ஷுரிந்திரியம்" என்றழைக்கிறோம். சப்தவிஷயமான அறிவைக்கொண்டு அதையுண்டுபண்ணக்கூடிய அஸாதாரணமான கருவியொன்றிருக்கவேண்டும் என்று ஊஹிக்கிறோம். அதற்குச் "சுரோத்திரம்" என்று பெயர். நல்லவார்ஸனை, கெட்டவாஸனை முதலியவற்றைப் பற்றிய அறிவைக்கொண்டு அதையுண்டு பண்ணக்கூடிய அஸாதாரணமான கருவியொன்றிருக்கவேண்டும் என்று ஊஹிக்கிறோம். அது மூக்கின் நுணியிலிருக்கின்றது. அதுவே **घ्राणेन्द्रियम्** எனப்படும். திதிப்பு, புளிப்பு முதலியருசியைப்பற்றிய அறிவைக்கொண்டு அதையுண்டுபண்ணக்கூடிய அஸாதாரணமானகருவி யொன்றிருக்கவேண்டும் என்று ஊஹிக்கிறோம். அது நாக்கின் நுணியிலிருக்கின்றது. அதுவே ரஸனேந்திரியம் எனப்படும். சுடுகை, குளுமை முதலிய வற்றைப்பற்றிய அறிவைக்கொண்டு அவ்வற்றை யுண்டுபண்ணக் கூடிய அஸாதாரணமான கருவி ஒன்றிருக்கவேண்டும் என்று ஊஹிக்கிறோம். அது சரீரத்தின் எல்லாப்பாகங்களிலும் தோலின் மேலிருக்கின்றது. அதுவே "த்வகிந்திரியம்" எனப்படும். **वाक्, पाणि, पाद, पायु, उपस्थम्** என்ற கர்மேந்திரியங்களின் அஸாதாரணமான கர்யங் களை 28 வது சுலோகத்திற் சொல்லப்போகிறார். ஆகவே இது வரைஞானேந்திரியம் ஐந்தும் நிரூபிக்கப்பட்டன. (எ - று)

இருபத்தேழாவது சுலோகம்

(அ - கை) பதினொன்றுவது இந்திரியம் இன்னது என்று சொல்லுகிறார்—

मू०। उभयात्मकमत्र मनः, सङ्कल्पकमिन्द्रियं च साधर्म्यात्।
गुणपरिणामविशेषान्नानात्वं बाह्यभेदाश्च ॥ २७ ॥

"उभयात्मकम्" इति। एकादशास्विन्द्रियेषु मध्ये मन उभयात्मकम्, बुद्धीन्द्रियं कर्मेन्द्रियं च, चक्षुरादीनां वागादीनां च मनो ऽधिष्ठितानामेव स्वस्वविषयेषु प्रवृत्तेः ॥

तदसाधारणेन रूपेण लक्षयति "सङ्कल्पकमत्र मनः" इति। सङ्कल्पेन रूपेण मनो लक्ष्यते। आलोचितमिन्द्रियेण 'वस्त्विदम्' इति

(ப - ரை) **अत्र**=இந்திரியங்களுள் **एकादशम्**=பதினொன்றுவதான **मनः**=மனஸ் என்ற இந்திரியம் **उभयात्मकम्**=ஞானேந்திரியமாகவும், கர்மேந்திரியமாகவும், ஆகின்றது **संकल्पकम्**=இந்திரியங்கள் வாயிலாக அறியப்படும் வஸ்துவை "இன்னதுதான் என்று" நிச்சயித்தலே அஸாதாரண வியாபாரமாயுடையது. **साधर्म्यात्**=மற்ற இந்திரியங்களிடத்துள்ள ஸாத்விகமான அஹங்காரத்தை உபாதான காரணமாயுடைதல் என்ற பொதுதர்மமுள்ளதாயிருப்பதால் **इन्द्रियंच**=இந்திரியம் என்ற வகுப்பைச் சேர்ந்ததாகவும் ஆகின்றது. **बाह्यभेदाश्च**=வெளியிலுள்ள வஸ்துக்களின் பேதம் போல் **गुणपरिणामविशेषात्**=சப்தம் ரூபம், கந்தம் முதலியவற்றைப் பற்றிய அனுபவத்தைக் கொடுக்கின்ற பிராணிகளின் அதிருஷ்டங்களாகிற ஸஹகாரிகாரணங்களின் பேதத்தால் **नानात्वम्**=இந்திரியங்களிடத்தில் அனேகமாயிருக்கும் தன்மை (**भवति**=ஏற்படுகின்றது.)

(தா - ம்) கண், காது முதலிய ஞானேந்திரியங்களோ, கை, கால் முதலிய கர்மேந்திரியங்களோ, மனஸ் என்ற இந்திரியம் எவ்விதம் தூண்டுகிறதோ அவ்விதமே அவ்வவற்றின் விஷயங்களில் பிரவிருத்தியையடைவதால் அந்தமனஸ் என்ற இந்திரியம் கர்மேந்திரியமாகவும், ஞானேந்திரியமாகவும் ஆகின்றது. அவ்விந்திரியத்திற்கு மற்றவை கட்கில்லாத தர்மத்தையுபதேசம் செய்யும் வாயிலாக லக்ஷணங்கூறுகிறார்—**संकल्पकमिति**। சங்கல்

संमुग्धम् 'इदमेवम्, नैवम्' इति सम्यक्कल्पयतिविशेषणविशेष्यभावेन विवेचयतीति यावत्। यदाहुः—

'संमुग्धं वस्तुमात्रं तु प्राग्गृह्णन्त्यविकल्पितम्।
तत् सामान्यविशेषाभ्यां कल्पयन्ति मनीषिणः' ॥ इति॥ तथा हि,
अस्ति ह्यालोचितज्ञानं प्रथमन्निर्विकल्पकम्।
बालमूकादिविज्ञानसदृशं मुग्धवस्तुजमिति।
ततः परं पुनर्वस्तुधर्मैर्जात्यादिभिर्यया।
बुध्द्या ऽवसीयते सा ऽपि प्रत्यक्षत्वेन संमता।

பம் என்ற தர்மத்தால் மனத்தை மற்றவையினின்றும் பிரித்தறிகிறோம். இந்தியாங்களால் ஒருவஸ்து வானது "ஏதோ இஃதோருவஸ்து" என்று பொதுவிலேயே, இன்னதென்று நிர்ணயிக்கப்படாமல் அறியப்படுகின்றது. பிறகு அவ்வஸ்துவை "இவ்விதம் தானிருக்கின்றது" என்று மனஸ் என்ற இந்திரியம் நிர்ணயிக்கின்றது. ஆனது பற்றி மனஸ்ஸினுடைய அஸாதாரண வியாபாரம் "சங்கல்பம்" என்று சொல்லப்பட்டது. ஓர் வஸ்துவானது முதலில் இன்னதென்று நிர்ணயிக்கப்படாமலேதான் அறியப்படுகின்றது; பிறகே அந்தவஸ்து இத்தகையதென நிர்ணயிக்கப்படுகின்ற தென்பதை மேதாவிகளும் அங்கீகரித்திருக்கின்றனர். அதுபின்வருமாறு—பிராணிகள் எல்லா வஸ்துவையும் முதலில் இன்னதென்று நிர்ணயிக்கப்படாத நிலையிலேயே அறிகின்றனர். அதைத்பிறகே, பொதுவான தர்மம், விசேஷமான தர்மம் இவற்றைக்கண்டறிந்து இத்தகையதென நிச்சயிக்கின்றனர். பாலர், ஊமை முதலிய வர்கட்குண்டாகின்ற அறிவுபோலவே முதலில் ஓர்வஸ்துவைப்பற்றி அறிவு உண்டாகின்றது. அது "நிர்விகல்பகம்" எனப்படும்; அதற்குப் பிறகு அந்த வஸ்துவானது ஜாதிமுதலிய தர்மங்களை விஷயீகரிக்கின்ற எந்த அறிவினால் அறியப்படுகின்றதோ அதுவும் பிரத்யக்ஷமென்றே அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. என்பதாம்.

सो ऽयं सङ्कल्पलक्षणो व्यापारो मनसः, समानासमानजातीयाभ्यां व्यवच्छिन्दन् मनो लक्षयति ॥

स्यादेतत्—असाधारणव्यापारयोगिनौ यथा महदहङ्कारौ नेन्द्रियम्, एवंमनो ऽप्यसाधारणव्यापारयोगि नेन्द्रियं भवितुमर्हतीत्यत आह—"इन्द्रियं च" इति। कुतः?—"साधर्म्यात्"। इन्द्रियान्तरैः सात्विकाहङ्कारोपादानत्वं च साधर्म्यम्, नत्विन्द्रलिङ्गत्वम्, महदहङ्कारयोरप्यात्मलिङ्गत्वेनान्द्रियत्वप्रसङ्गात्, तस्मात्व्युत्पत्तिमात्रमिन्द्रलिङ्गत्वम्, न तु प्रवृत्तिनिमित्तम् ॥

மேற்சொல்லிய சங்கல்பம் என்ற வியாபாரம் மனத்திற்கு ஸமான ஜாதீயங்களான மற்ற கண், காது முதலிய இந்திரியங்களிடத்தினின்றும், அஸமான ஜாதீயங்களான குடம், வஸ்திரம் முதலியவற்றினின்றும் பேதத்தைப் போதிப்பதால் அது மனத்திற்கு லக்ஷணமாகின்றது. சங்கை—மனத், அஹங்காரம் இவைகள் அஸாதாரண வியாபாரமுள்ளதாயிருப்பதால் எவ்விதம் இந்திரியமாவதில்லையோ, அவ்விதமே மனஸ்ஸும் அஸாதாரண வியாபாரமுள்ளதாயிருப்பதால் இந்திரியமாக ஆகமாட்டாது எனின்பதிலளிக்கிறார்—**इन्द्रियंच साधर्म्यात्** ஸாத்விகமான அஹங்காரத்தை உபாதானகாரணமாயுடைதல் என்பது இந்திரியங்களின் பொதுதர்மம். இந்திரணை ஆத்மாவை அறிவதற்குச் சாதனமாயிருத்தல் என்பது இந்திரியங்களின் பொதுதர்மமல்ல. எனென்றால் அத்தர்மம் மனத் அஹங்காரம் முதலியவற்றிலும் இருக்கின்றது. ஆகவே **इन्द्रलिङ्गत्वम्**=ஆத்மாவை அனுமிப்பதற்குச் சாதனமாயிருத்தல் என்பது **इन्द्रियम्** என்ற சப்தத்தின் அவயவார்தமே யல்லாது அதுவே இந்திரியங்களின் அஸாதாரண தர்மமல்ல. ஆகவே ஸாத்விகமான அஹங்காரத்தை உபாதான காரணமாயுடைதல் என்ற இந்திரியங்களின் பொதுதர்மம் மனஸ் என்ற வஸ்துவினிடமிருப்பதால் அதுவும் இந்திரியமாக ஆகின்றது. ஆகவே அஸாதாரண வியாபாரமுள்ளதாயிருப்பது பற்றி மனஸ் இந்திரியமாக ஆகின்றது என்று ஸ்தாபிக்காததால் நீர்செய்த ஆசங்கைக்கு இடமில்லாமலாகிவிட்டது.

अथ कथं सात्त्विकाहङ्कारादेकस्मादेकादशेन्द्रियाणीत्यत आह—"गुण-परिणामविशेषात् नानात्वं बाह्यभेदाश्च" इति। शब्दाद्युपभोगसंप्रवर्तकाद्-ष्टसहकारिभेदात्कार्यभेदः। अदृष्टभेदो ऽपि गुणपरिणाम एव। 'बाह्यभेदाश्च' इति दृष्टान्तार्थम्—यथा बाह्यभेदास्तथैतदपीत्यर्थः ॥ २७ ॥

तदेवमेकादशेन्द्रियाणि स्वरूपत उक्त्वा दशानामप्यसाधारणीर्वृत्ती राह—

मू० ॥ शब्दादिषु पञ्चनामालोचनमात्रमिष्यते वृत्तिः।
वचनादानविहरणोत्सर्गानन्दाश्च पञ्चानाम् ॥ २८ ॥

ஸாத்விகாஹங்காரம் ஒன்றினிடமிருந்து எவ்விதம் பதினொன்று இந்திரியங்கள் உண்டாகின்றன என்றால் பதிலளிக்கிறார்— **गुणपरिणामविशेषान्नानात्वं बाह्यभेदाश्च** சப்தம், ஸ்பர்சம் முதலிய விஷயானுபவத்தை யுண்டுபண்ணுகின்ற அதிருஷ்டம் என்ற யாதொரு ஸஹகாரிகாரணமுண்டோ அதன் வேற்றுமையால் 11 விதமான இந்திரியங்கள் ஒரேவிதமான ஸாத்விகாஹங்காரத்தினின்று முண்டாகின்றன. அதிருஷ்டத்தின் பேதமும் சத்வம் முதலிய குணங்களின் பரிணாமமாகவே இருப்பதால் **गुणपरिणाम** என்ற பதத்தால் இங்கு குறிக்கப்படுகின்றது. **बाह्यभेदाश्च** என்று சொன்னதைத் திருஷ்டாந்தமாகக் கொண்டு மரம், மட்டை முதலிய ஸ்தூக்கள் எவ்விதம் ஒரேவிதமான பிரகிருதியினிடமிருந்துப் பிராணிகளின் அதிருஷ்டத்தை நிமித்தமாகக் கொண்டு பலவாறுக உண்டாகின்றனவோ அவ்விதமே இந்திரியங்களனைத்தும் பிராணிகளின் அதிருஷ்டத்தினால் 11விதமாயுண்டாகின்றனவென்று கொள்ளல்வேண்டும். (எ - று)

இருபத்தெட்டாவது சுலோகம்

(அ - கை) இவ்விதம் 11 இந்திரியங்களின் சுவரூபத்தை யுபதேசித்து முதல் 10 இந்திரியங்களின் அஸாதாரணமான வியாபாரங்களை (கார்யங்களை) உபதேசிக்கிறார்—

बुद्धीन्द्रियाणां सम्मुग्धवस्तुदर्शनमालोचनमुक्तम्। "वचनादानविहरणोत्सर्गानन्दाश्च" पञ्चानाम् कर्मेन्द्रियाणाम्। कण्ठताल्वादिस्थानमिन्द्रियं वाक्, तस्या वृत्तिर्वचनम्, ज्ञानेन्द्रियाणां वृत्तयः स्पष्टाः ॥ २८ ॥

(ப - ரை) **पञ्चानाम्**=ஞானேந்திரியம் ஐந்துகளுக்கும் **शब्दादिषु**=சப்தம், ரூபம் முதலியவிஷயங்களில் **आलोचनमात्रम्**="இந்த வஸ்து இத்தகையதுதான்" என்று நிர்ணயிக்கப்படாத நிலையிலுண்டாகின்ற ஞானம் **वृत्तिः**=அஸாதாரண வியாபாரமாக **इष्यते**=அங்கீகரிக்கப்படுகின்றது. **पञ्चानाम्**=கர்மேந்திரியம் ஐந்துகளுக்கும் **वचनादानविहरणोत्सर्गानन्दाः**=பேசுதல், எடுத்தல், நடத்தல் வெளியில் தள்ளுதல் ஆனந்தத்திற்குக் காரணமான சேர்க்கை இவை **वृत्तिः**=அஸாதாரண வியாபாரமாயாகின்றன.

(தா - ம்) வெளுப்பு, சிவப்பு முதலிய நிறங்களையறிதல்சோத்திரேந்திரியத்தின் அஸாதாரண வியாபாரமாகவும், வாசனையையறிதல் கிராணேந்திரியத்தின் (மூக்கின்) அஸாதாரண வியாபாரமாகவும், திதிப்பு, புளிப்பு முதலியரசங்களையறிதல் ரசன (நாக்கு) என்ற இந்திரியத்தின் அஸாதாரண வியாபாரமாகவும், சுடுகை, குளுமை முதலிய ஸ்பர்சங்களையறிதல் த்வக் (தோல்) என்ற இந்திரியத்தின் அஸாதாரண வியாபாரமாகவும், சப்தத்தைக்கேட்டல் சுரோத்திரம் (காது) என்ற இந்திரியத்தின் அஸாதாரண வியாபாரமாகவும் இருக்கின்றது. மேற்சொல்லிய வையாவும் 'ஞானேந்திரியம்' எனப்படும். அவற்றால் இன்னதென்று நிர்ணயிக்கப்படாத நிலையிலேயே வஸ்துக்கள் அறியப்படுகின்றன.

சப்தத்தையுச்சரித்தல் வாக் என்ற இந்திரியத்தின் அஸாதாரண வியாபாரமாகவும், வஸ்துக்களைக்கிரஹித்தல் பாணி (கை) என்ற இந்திரியத்தின் அஸாதாரண வியாபாரமாகவும், அங்குமிங்கும் நடந்து செல்லுதல் பாதம் (கால்) என்ற இந்திரியத்தின் அஸாதாரண வியாபாரமாகவும், மலத்தை வெளியில்தள்ளுதல் பாயு (குதம்) என்ற இந்திரியத்தின் அஸாதாரண வியாபாரமாக

अन्तःकरणत्रयस्य वृत्तिमाह—

मू०। स्वालक्षण्यं वृत्तिस्त्रयस्य सैषा भवत्यसामान्या ।
सामान्यकरणवृत्तिः प्राणाद्या वायवः पञ्च ॥ २९ ॥

வும், ஆனந்தத்தைக்கொடுக்கின்ற ஸ்திரீபுருஷர்களின் அஸாதாரண அங்கத்தின் சேர்க்கை உபஸ்தம் (ஆண்பெண்குறி) என்ற இந்திரியத்தின் வியாபாரமாகவும் ஆகின்றது. மேற்சொல்லியவைகள் "கர்மேந்திரியம்" எனப்படும். மேற்சொல்லியபடி அதனதன் கார்யங்களைச் செய்கின்ற இந்திரியம் என்ற வஸ்து அந்தந்தச் சரீராவயவத்திலிருப்பதால் அந்தந்த அவயவங்களின் பெயர்களாலேயே அவை வியவஹரிக்கவும் படுகின்றன. இதிலிருந்து "அந்தந்த அவயவமே அந்தந்த இந்திரியம்" எனக்கருதுதல்தகா. கண், காது, கைகால் முதலியவைகள் சூக்ஷ்மமான இந்திரியங்களின் ஆதாரம் என்றுமட்டும் கொள்ளவேண்டும் (எ - று)

இருபத் தொன்பதாவது சுலோகம்.

(அ - கை) அந்தக்கரணம் எனப்படும் புத்தி, அஹங்காரம், மனஸ் இவற்றின் அஸாதாரணமான, விருத்தியையும் (கார்யத்தையும்) ஸாதாரண வியாபாரத்தையும் உபதேசிக்கிறார்—

(ப - ரை) **त्रयस्य**=மூன்றுக் எனப்படும் புத்தி, அஹங்காரம் மனஸ், இம்மூன்றிற்கும் **स्वालक्षण्यम्**=அதனதன் லக்ஷணமாகக் கூறப்பட்ட அத்யவஸாயம், அபிமானம், ஸங்கல்பம் இவை **वृत्तिः**=வியாபாரமாக ஆகின்றது. **सैषा**=மேற்சொல்லிய அத்யவஸாயம் முதலியது. **असामान्या**=அஸாதாரணவியாபாரமாக ஆகின்றது. **प्राणाद्याः**=பிராணனே முதலாவதாகவுடைய **पञ्चवायवः**=ஐந்துவித மானவாயுக்கள் **सामान्यकरणवृत्तिः**=அந்தக்கரணம் எனப்படும், புத்தி, அஹங்காரம், மனஸ் இவற்றின் ஸாதாரணவியாபாரமாக ஆகின்றன.

"स्वालक्षण्यम्" इति । स्वालक्ष्ण्यं वृत्तित्रयस्य । स्वमसाधारणं लक्षणं येषां तानि स्वलक्षणानि महदहङ्कारमनांसि, तेषां भावः स्वालक्षण्यम्, तच्च स्वानिस्वानि लक्षणान्येव । तद्यथा—महतो ऽध्यवसायः, अहङ्कारस्याभिमानः, सङ्कल्पो मनसो वृत्तिर्व्यापारः ॥

वृत्तिद्वैविध्यं साधारणासाधारणत्वाभ्यामाह—"सैषाभवत्यसामान्या" असाधारणी । "सामान्यकरणवृत्तिः प्राणाद्या वायवः पञ्च" । सामान्या चासौ करणवृत्तिश्चेति । त्रयाणामपि करणानां पञ्च वायवो जीवनं वृत्तिः, तद्भावे भावात् तदभावे चाभावात् । तत्र प्राणो नामाग्रहृन्नाभिपादाङ्गुष्ठवृत्तिः, अपानः कृकाटिकापृष्ठपाद पायूपस्थपार्श्व वृत्तिः, समानो हृन्नाभिसर्वसन्धिवृत्तिः, उदानो हृत्कण्ठतालुमूर्धभ्रूमध्य वृत्तिः, व्यानस्त्वग्वृत्तिरिति पञ्च वायवः ॥ २९ ॥

(தா - ம்) நாம் இதைச்செய்யவேண்டும் என்றக் ஞானம் "அத்யவஸாயம்" எனப்படும். அது புத்தியின் லக்ஷணமாகச் சொல்லப்பட்டது. அதுவே புத்தியின் அஸாதாரண வியாபாரம். நான் என்ற ஞானம் "அபிமானம்" எனப்படும். அது அஹங் காரத்தின் லக்ஷணமாகமுன் சொல்லப்பட்டது. அதுவே அஹங்காரத்தின் அஸாதாரணவியாபாரம். இது இத்தகையது என்ற நிச்சயம் "ஸங்கல்பம்" எனப்படும். அது மனஸ்ஸின் லக்ஷணமாகமுன் கூறப்பட்டது. அதுவே மனத்தின் அஸாதாரணவியாபாரம். மேற்சொல்லியவையாவும் மூன்றுவிதமான அந்தக்கரணத்தின் அஸாதாரண விருத்திகள்.

பிராணன், அபானன், வியான்ன், உதானன், ஸமானன் என்ற ஐந்துவிதமான பிராணங்கள் மூன்றுவிதமான அந்தக் கரணத்தின் ஸாதாரண வியாபாரமாகின்றன. அவற்றிர்க்கே ஜீவனம்.—பிழைத்திருத்தல் என்றுபெயர். எனென்றால் பிராணன், அபான் என்றதுமுதலிய வாயுவின் சஞ்சாரமிருந்தால் மற்ற இந்திரியங்களுக்கு ஒழுங்காய் வேலைசெய்கின்ற நிலை ஏற்

चतुर्विधकरणस्यास्यासाधारणीषु वृत्तिषु क्रमाक्रमौ सप्रकारावाह—

मू०। युगपच्चतुष्टयस्य तु वृत्तिः क्रमशश्च तस्य निर्दिष्टा।
दृष्टे तथा ऽप्यदृष्टे त्रयस्य तत्पूर्विका वृत्तिः ॥ ३० ॥

படுகிறது. இஃதே ஜீவனம் எனப்படும். பிராணஸஞ்சார மில்லாவிடில் இந்திரியங்கள் வேலைசெய்வதில்லை. ஆதலால் பிராணஸஞ்சாரம் ஜீவனமாகின்றது. அவற்றுள் பிராணன் என்றவாயு மூக்கின்நுனி, ஹிருதயம், உந்தி, கால் கட்டை விரல் இவ்விடங்களிலிருக்கின்றது. அபானன் என்ற விருத்தி கண்டம், பிட்டம், மலத்வாரம், ஆண்பெண்குறிகள், இடது வலது பக்கங்கள், இவற்றிலிருக்கின்றது. ஸமானன் என்ற விருத்தி ஹிருதயம், உந்தி, எல்லாவிதமான சரீரத்திலுள்ள ஸந்திபந்தங்கள் இவைகளிலிருக்கின்றது. உதானன் என்றவிருத்தி ஹிருதயம், கண்டம், தாலு, சிரஸ், இரண்டு புருவங்களின் மத்தியபாகம், இவைகளிலிருக்கின்றது. வியானன் என்ற விருத்தி தோலிலிருக்கின்றது. இவ்விதம் அந்தக்கரண ஸாதாரண விருத்தி ரூபமான ஐந்து வாயுக்கள் சரீரத்திலிருக்கின்றன. (எ - று)

மூப்பதாவது சுலோகம்

(அ - கை) வெளியிலுள்ள காரணங்கள் ஒன்று, உள்ளிலுள்ளகாரணங்கள் மூன்று ஆக நான்குவிதமான காரணங்களின் அஸாதாரண வியாபாரங்கள் சிலசமயத்தில் கிரமமாகவும், சில சமயத்தில் கிரமமின்றி ஒரேகாலத்திலும் உண்டாகின்றன வென்று விரிவாய் உபதேசிக்கிறார்—

(ப - ரை) **चतुष्टयस्य तस्य**=வெளியிலுள்ள காரணங்கள் ஒன்று, உள்ளிலுள்ள காரணங்கள் மூன்று ஆக நான்குவிதமான காரணத்திற்கு **युगपत्**=ஒரே சமயத்திலும், **क्रमशश्च**=கிரமமாகவும் **वृत्तिः**=வியாபாரம் **दृष्टे**=பிரத்யக்ஷமான விஷயத்தில் **निर्दिष्टा**=சொல்லப்

"युगपत्" इति । दृष्टे यथा—यदा सन्तमसान्धकारे विद्युत्सम्पात-मात्राद्व्याघ्रमभिमुखमतिसन्निहितं पश्यति, तदा खल्वस्यालोचनसङ्कल्पाभिमानाध्यवसायाः युगपदेव प्रादुर्भवन्ति, यतस्तत उत्प्लुत्य तत्स्थानादेकपदेऽपसरति ॥ "क्रमशश्च" यदा मन्दालोके प्रथमन्तावद्वस्तुमात्रं सम्मुग्धमालोचयति, अथ प्रणिहितमनाः कर्णान्ताकृष्टसशरासिञ्जिनीमण्डलीकृतकोदण्डः प्रचण्डतरः पाटच्चरोऽयमिति निश्चिनोति, अथ च मांप्रत्येतीत्यभिमन्यते, अंथाध्यंवस्यति अपसरामीतः स्थानादिति ॥ परोक्षे त्वन्तःकरणत्रयस्य बाह्ये-

---

பட்டிருக்கின்றது तथापि = இவ்விதமிருக்கபோதிலும் अदृष्टे = பிரத்யக்ஷத்திற்குப் புலப்படாத விஷயத்தில் त्रयस्य = புத்தி, அஹங்காரம், மனஸ் இவற்றிற்கு तत्पूर्विका = பிரத்யக்ஷத்தை முன்னிட்டு वृत्तिः = கிரமமாகவும்; ஒரே சமயத்திலும் அனாதாரணவியாபாரம் (भवति = உண்டாகின்றது.)

(தா-ம்.) மேற்சொல்லிய நான்குவிதமான காரணங்களுக்கும் ஒரே சமயத்திலும், கிரமமாகவும் விருத்தி எற்படுகின்றது. ஒரே சமயத்தில் நான்குவிதமான காரணங்களுக்கும் விருத்தியுண்டாவதில் உதாஹரணம்—மழைக்காலத்திய இருளில் காட்டுப்பாதையாக ஒருவன் சென்றுகொண்டிருக்கும்பொழுது பளீரென ஓர் மின்னல் எற்படவே அதனால் தனக்கு சேரிலும் மிகவும் சமீபத்திலும் ஓர் புலி இருப்பதை பார்க்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது அம்மனிதன் அவ்விடம்விட்டுத் துள்ளிக்குதித்து அதே நிமிஷத்தில் வேறிடஞ்சென்று விடுவதால், ஆலோசனம், லங்கல்பம், அபிமானம், அத்யவசாயம் என்ற நான்கு விதமான விருத்திகள் ஒரே சமயத்திலுண்டாகின்றன என்று அங்கீகரிக்கவேண்டும். கிரமமாய் விருத்திகள் உண்டாவதற்கு உதாஹரணம்—ஒருவன் அற்பப்பிரகாசமுள்ள சமயத்தில் ஓர் பாதையில்சென்று கொண்டிருக்கிறான் என்று எடுத்துக்கொள்வோம். அவன் அவ்வழியில் ஓர்வஸ்துவை இன்னதென்று பிரித்தறியப்படாத நிலையில் காண்கிறான். பிறகு ஸாவதானத்துடன் கவனிக்கும் பொழுது 'காதுவரையில் இழுக்கப்பட்டதாயும், அம்புடன் சேர்ந்ததாயுமிருக்கிற நாண்கயிறினால் வளைக்கப்பட்ட வில்லையுடையவனும், மிகவும்

न्द्रियबर्जं वृत्तिरित्याह—"अदृष्टे त्रयस्य तत्पूर्विका वृत्तिः" इति । अन्तः करणत्रयस्य युगपत्क्रमेण वृत्तिर्दृष्टपूर्विकेति । अनुमानागमस्मृतयो हि परोक्षेऽर्थे दर्शनपूर्वाः प्रवर्तन्ते, नान्यथा । यथा दृष्टे तथा ऽदृष्टे ऽपीति योजना ॥ ३० ॥

स्यादेतत्—चतुर्णां त्रयाणां वा वृत्तयो न तावन्मात्राधीनाः, तेषां सदातनत्वेन वृत्तीनां सदोत्पादप्रसङ्गात्, आकस्मिकत्वे तु वृत्तिसङ्करप्रसङ्गे नियमहेतोरभावादित्यत आह—

உக்கிரனுமான ஓர் திருடன்' என்று நிச்சயிக்கிறன். பிறகு "தன் னைக்குறித்தே இவன் வருகிறன்" என்று அபிமானத்தையடை கிறன். அதற்குப் பிறகு "நாம் இவ்விடம் விட்டுச்சென்றுவிட வேண்டும்" என்று உறுதிசெய்து கொள்ளுகிறன்.

பிரத்யக்ஷத்திற்குப் புலப்படாத விஷயத்தில் பாஹ்யேந்திரியம் தவிர்த்து மற்ற இந்திரியங்களுக்கு விருத்தியுண்டாகின்றதென்கிறார் अदृष्टेत्रयस्य तत्पूर्विका वृत्तिः इति । பிரத்யக்ஷத்திற்குப் புலப்படாத விஷயங்கள் அனுமானம், ஆகமம் என்ற சப்தப் பிரமாணம், இவற்றால் அறியக்கூடியனவாக இருக்கும். அனுமானம், சப்தம் இவ்விரண்டுப் பிரமாணங்களும் பிரத்யக்ஷத்தை யபேக்ஷிக்கின்றன. எவ்விதமெனில் அனுமானத்திற்கு முக்கிய ஸாதனமான வியாப்திக்ஞானமானது தூமத, சாத்தியம் இவற்றைப் பலவிடங்களில் சேர்ந்திருப்பனவாய்க் காணுமிடல் உண்டாவதில்லை யாகையால் வியாப்திக்ஞானம் வாயிலாக அனுமானம் பிரத்யக்ஷத்தையபேக்ஷிக்கின்றது. சப்தத்தினால் போத (அறிவு) முண்டாவதற்குப் பதம், அர்த்தம் இவ்விரண்டிற்குமுள்ள சம்பந்த க்ஞானம் முக்கியமாய் வேண்டியதாகையாலும், அச்சம்பந்த க்ஞானம் அனுமானத்தினால் உண்டாகுமிடத்தில் மேற்சொல்லியப் பிரத்யக்ஷம் சாதனமாகின்றபடியாலும் சப்தப்பிரமாணம் பிரத்யக்ஷத்தையபேக்ஷிக்கின்றது. ஆகவே பரோக்ஷமான விஷயத்தில் மூன்றுவிதமான அந்தக் காரணத்திற்கும் பிரத்யக்ஷத்தை முன்னிட்டே விருத்தி ஏற்படுகின்றது என்றேற்பட்டது. (எ-று.)

स्वां स्वां प्रतिपद्यन्ते परस्पराकूतहेतुकां वृत्तिम् ।
पुरुषार्थ एव हेतुर्न केनचित्कार्यते करणम् ॥ ३१ ॥

"स्वाम्" इति । करणानीति शेषः । यथा हि, बहवः पुरुषाः शाक्तीकयाष्टीकधानुष्ककार्पाणिकाः कृतसङ्केताः परावस्कन्दनाय प्रवृत्ताः, तत्रान्यतमस्याकूतमवगम्यान्यतमः प्रवर्तते, प्रवर्तमानस्तु शाक्तीकः शक्तिमेवा-

---

மூப்பத்தேதான்றுவது சுலோகம்.

(அ-கை) நான்குவிதமான கரணங்களுடையவோ மூன்றுவிதமான கரணங்களுடையவோ அஸாதாரணவியாபாரங்கள் அவ்வவற்றை மாத்திரம் நிமித்த மாகக் கொள்ளுகின்றனவென்பது ஒப்பத்தக்கதல்ல. ஏனெனின் அந்த நான்கு விதமான கரணங்கள் எப்பொழுதுமிருப்பதால் அதன் அஸாதாரண வியாபாரங்களான விருத்திகளும் எப்போழுதுமுண்டாக வேண்டி நேரிடும். எவ்விதக் காரணத்தையும் எதிர்பாராமலே அந்தந்த விருத்திகள் உண்டாகின்றனவென்றால் பாஹ்யேந்திரியங்களின் விருத்தி அந்தக்காரணத்திற்கும், அந்தக் காரணத்தின் விருத்தி பாஹ்யேந்திரியங்களுக்குங் ஏன் உண்டாகக்கூடாது ? என்ற கேள்விக்குப் பதிலில்லாமை ஏற்பட்டு ஒன்றின் விருத்தி மற்றொன்றிற்கும் ஏற்படலாம் என்ற "சங்கரம்" எனப்படும் தோஷம் பிரசங்கிக்கும் என்றசங்கைக்கும் பதிலளிக்கிறார்

(ப-மை) करणानि = பாஹ்யேந்திரியங்கள், மனஸ், புத்தி, அஹங்காரம், என்றவைகள் स्वांस्वाम् = தத்தமது वृत्तिम् = வியாபாரத்தை परस्पराकूतहेतुकाम् = மற்றது அதன் காரியத்தைச் செய்வதற்குத் தயாராக இருத்தலைக் காரணமாகக் கொண்டு प्रतिपद्यन्ते = அடைகின்றன ஓர்காரணம் மற்றக் காரணத்தின் விருத்தியை எதிர்பார்த்துத் தனது விருத்தியையடைவதற்கு पुरुषार्थ एव = விஷயானுபவம், மோக்ஷம் என்ற புருஷார்த்தம் தான் हेतुः = காரணமாகின்றது करणम् = மேற் சொல்லியக் காரணங்கள் केनचित् = மற்ற சேதனனை எவனாலும் नकार्यते = தூண்டப்படுவதில்லை.

दत्ते नतु यष्ट्यादिकम्, एवं याष्टीको ऽपि यष्टिमेव, न शक्त्यादिकम्। तथा ऽन्यतमस्य करणस्याकूतात्=स्वकार्यकरणाभिमुख्यादन्यतमं करणं प्रवर्तते। तत्प्रवृत्तेश्च हेतुत्वान्न वृत्तिसङ्करप्रसङ्ग इत्युक्तम्—"स्वां स्वां प्रतिपद्यन्ते" इति॥

स्यादेतत्—याष्टीकादयश्चेतनत्वात् परस्पराकूतमवगम्य प्रवर्तन्त इति युक्तम्। करणानि त्वचेतनानि, तस्मान्नैवं प्रवर्तितुमुत्सहन्ते। तेनैषामधिष्ठात्रा

(தா-ம்) ஓர் இந்திரியம் மற்ற இந்திரியத்தின் பிரவிருத்தியை எதிர்பார்த்துப் பிரவிருத்திக்கின்ற தென்பதை உதாஹரணம் வாயிலாக நிரூபிக்கின்றோம். சத்துருவைக்கொல்வதற்காகச் சக்தி என்ற ஆயுதத்திற் பழக்கமுள்ளவன் ஒருவன், தடியை உபயோகிப்பதில் பழக்கமுள்ளவன் ஒருவன், வில்லை உபயோகிப்பதில் பழக்கமுள்ளவன் ஒருவன், கத்தியை உபயோகிப்பதில் பழக்கமுள்ளவன் ஒருவன் இவ்விதம் பலர் ஒன்றுசேர்ந்து "நாமெல்லோரும் இந்தச்சத்துருவைக் கொன்றுவிடவேண்டும்" எனறு சங்கேதஞ்செய்துகொண்டு சத்துருவைத்தாக்குவதற்காகப் பிரவிருத்தித்தனர் என்று வைத்துக்கொள்வோம். அவர்களுள் ஒவ்வொருவனும் மற்றவர்களின் அபிப்ராயந் தெரிந்துகொண்டு அதற்கனுகுணமாகவே பிரவிருத்திகின்றான். இவ்விதம் பிரவிருத்தித்தபோதிலும், சத்துருவைக்கொல்வதற்காகச் சக்தி என்ற ஆயுதத்தை உபயோகிப்பதில் பயிற்சிபெற்றவன் சக்தி என்ற ஆயுதத்தைத்தான் எடுத்துக்கொள்ளுகிறானேயொழிய தடிமுதலியவற்றை எடுப்பதில்லை. இவ்விதமே சிலம்பம்பழகுவதில் பழக்கமுள்ளவன் தடியை எடுக்கிறானேயொழிய சக்தி முதலியவற்றை எடுப்பதில்லை. இவ்விதமே ஓர் காரணம் தனது காரியத்தைச்செய்வதற்குத் தயாராக ஆகுமாயின் அதையே நிமித்தமாகக்கொண்டு மற்றக்காரணங்களும் தத்தமது காரியங்களைக் கிரமமாகவோ ஒரே சமயத்திலோ செய்வதற்குப் பிரவிருத்திக்கின்றன. இவ்விதம் அந்தந்தக் காரணபிரவிருத்திக்கு மற்றக்காரணங்களின் பிரவிருத்தி காரணமாகின்றதுபற்றி காரணமின்றி உண்டாகின்றதென்று சொல்வதற்கில்லை. ஆகையால் ஓர் இந்திரியத்தின் விருத்திமற்ற இந்திரியத்திற்கு உண்டாகலாம் என்கிற "சங்கரம்," என்றதோஷம் ஏற்படமாட்டாது.

करणानां स्वरूपसामर्थ्योपयोगाभिज्ञेन भवितव्यमित्यत आह -- "पुरुषार्थ एव हेतुः, न केनचित्कार्यते करणम्" इति । भोगापवर्गलक्षणः पुरुषार्थ एवानागतावस्थः प्रवर्तयति करणानि, कृतमत्र तत्स्वरूपाभिज्ञेन कर्त्रा । एतच्च "वत्सविवृद्धिनिमित्तम्" (कारिका ५७) इत्यत्रोपपादयिष्यते ॥ ३१ ॥

"न केनचित् कार्यते करणम्" इत्युक्तम् । तत्र करणं विभजते --

करणं त्रयोदशाविधम्, तदाहरणधारणप्रकाशकरम् ।
कार्यं च तस्य दशधा, ऽऽहार्यं धार्यं प्रकाश्यं च ॥ ३२ ॥

சங்கை --மேற்சொல்லிய சிலப்பம் படுகத்திரிக்தவர்கள் மூதலியவர்கள் சேதனர்களாயிருப்பதால் ஒருவர் மற்றவரின் அபிப்ராயத்தை அறிந்துப் பிரவிருத்திக்கின்றனர் என்பது பொருந்தும். இந்திரியங்களாலெனில் அசேதனமாயிருப்பதால் ஒன்று மற்றொன்றின் அபிப்ராயத்தை (தனது கார்யத்தைச் செய்வதற்குத் தயாராக இருத்தலை) எதிர்பார்த்துப் பிரவிருத்திக்கின்றதென்பது பொருந்தாது. ஆகையால் காணங்களைத் தூண்டுகிறவனும், அவ்வவற்றின் சக்தியையறிந்தவனுமான சேதனன் ஒருவன் இருக்கவேண்டும். என்றால் பதிலளிக்கிறார்.—पुरुषार्थ एवहेतुर्नकेनाचित्कार्यते करणम् । 'அந்தந்த விஷயானுபவம் புருஷனுக்கு உண்டாவது' என்ற போகம், 'துக்கங்கள் யாவும் விலகுதல் என்ற மோக்ஷம்' இவைகளாகிற புருஷார்த்தங்களை தாம் ஏற்படாத நிலையிலிருந்துகொண்டு காணங்களைத் தூண்டுகின்றனவாதலின் காணங்களின் ஸ்வரூபத்தையறிந்த கர்த்தா ஒருவன் வேண்டியதில்லை. இவ்விஷயத்தைப்பற்றி वत्सविवृद्धिनिमित्तम् என்ற 57-வது காரிகையில் விரிவாய்ச் சொல்லப்போகிறோம் (எ-று)

மூப்பத்திரண்டாவது சுலோகம்.

(அ-கை.) காணம் எனப்படும் 11 இந்திரியங்கள், புத்தி, அஹங்காரம் இவைகள் தங்களிலிடமிலாத சேதனனொருவனால் தூண்டப்படுவதில்லை என்று முன்னர்சொல்லப்பட்டது. அந்த "காணம்" எவ்வளவுள்ளதென்று பிரித்துக்காண்பிக்கிறார்.

"करणं त्रयोदशविधम्" इति । इन्द्रियाण्येकादश बुद्धिरहङ्कारश्चेति त्रयोदशप्रकारं करणम् । कारकविशेषः करणम् । न च व्यापारावेशं विना कारकत्वमिति व्यापारावेशमाह—"तदाहरणधारणप्रकाशकरम्" इति, यथायथम् । तत्र कर्मेन्द्रियाणि वागादीन्याहरन्ति, यथास्वमुपाददते, स्वव्यापारेण व्याप्नुवन्तीति यावत् । बुद्ध्यहङ्कारमनांसि तु स्ववृत्त्या प्राणादिलक्षणया धारयन्ति । बुद्धीन्द्रियाणि प्रकाशयन्ति ॥

(பா-ரை.) करणम् = காரணம் என்பது त्रयोदशविधम् = பதிமூன்றுவிதமாக இருக்கின்றது. तत् = அந்த காரணம் आहरण-धारण-प्रकाशकरम् = எடுத்தல், தரித்தல், பிரகாசப்படுத்தல் இவைகளைச்செய்கின்றது तस्य = அந்த 13 விதமான காரணத்திற்கு आहार्यम् = எடுக்கத்தகுந்தது धार्यम् = தரிக்கத் தகுந்தது प्रकाश्यम् = பிரகாசப்படுத்தத்தகுந்தது (इति = என்ற) कार्यम् = கார்யமான து दशधा = பத்து விதமாக இருக்கின்றது.

(தா-ம்) இந்திரியம் 11, புத்தி 1, அஹங்காரம் 1 ஆக இப்பதிமூன்றும் காரணங்களாம். யாதானு மோர்கிரியையை உண்டு பண்ணி அதன் வாயிலாக ஓர் கார்யத்திற்குச் சாதனமாவது "காரகம்" எனப்படும். காரணம் என்பது காரகத்தின் உட்பிரிவு. ஆகவே வியாபாரமேற்படாவிடில் காரணத்திற்குக் காரகமாயிருக்குந் தன்மை சம்பவிக்காதானதுபற்றி காரணங்களின்வியாபாரங்களைச்சொல்லுகிறார். तदाहरणधारणप्रकाशकरम् । கிரஹித்தல், தரித்தல், பிரகாசப்படுத்தல் இவற்றுள் எந்தக்கிரியை எந்தக் காரணத்திற்குச் சம்பவிக்குமோ அந்தக்கிரியையையே அந்தக்காரணத்தின் வியாபாரமாக எடுத்துக்கொள்ளவேண்டும். மேற்குறித்த 13 காரணங்களில் கர்மேந்திரியங்கள் தத்தமது விஷயங்களை எடுக்கின்றன. அதாவது—28வது சுலோகத்திற் சொல்லியபடி பேசுதல், எடுத்தல், நடத்தல், மலத்தை வெளியில் தள்ளுதல், புணர்தல் என்ற வியாபாரங்களை நடத்துகின்றன. புத்தி, அஹங்காரம், மனஸ் இவைகளாலெனில் பிராணன் அபானன் என்ற தமது விருத்திகளால் கர்மேந்திரியம், ஞானேந்திரியம் சரீரம் இவற்றைத்தரிக்கின்றன. (சரீரம் இந்திரியம் முதலியவற்றிற்கு அவ்வவற்றின்தொழிலைச் செய்வதற்குரிய யோக்யதையைக் கொடுக்கின்றன.) புத்தீந்திரியமெனப்படும் கண் காது முதலியனவைகள் வஸ்துக்களைப்

आहरणधारणादिक्रियाणां सकर्मकतया, किं कर्म, कतिविधं चेत्यत आह—"कार्यं च तस्य" इति । कार्यं तस्य त्रयोदशविधस्य करणस्य दशधा, आहार्यं धार्यं प्रकाश्यं च । आहार्यं व्याप्यम् । कर्मेन्द्रियाणां वचनादानविहरणोत्सर्गानन्दाः यथायथं व्याप्याः, ते च यथायथं दिव्यादिव्यतया दश —इत्याहार्यं दशधा । एवं धार्यमप्यन्तःकरणत्रयस्य प्राणादिलक्षणया वृत्त्या शरीरम्, तच्च पार्थिवादिपाञ्चभौतिकम् । शब्दादीनां पञ्चानां समूहः पृथिवी, ते च पञ्च दिव्यादिव्यतया दशेति धार्यमपि दशधा । एवं बुद्धीन्द्रियाणां शब्दस्पर्शरूपरसगन्धा यथायथं व्याप्याः, ते च यथायथं दिव्यादिव्यतया दशेति प्रकाश्यमपि दशधेति ॥ ३२ ॥

வொரு அசக்தி வீதம் மொத்தமாய் இந்திரியங்களுக்கு சேரு கின்ற அசக்தி 11 விதமாக ஆகின்றது. 'காது' என்ற இந்தி ரியத்திற்கு செவிடும், 'த்வக்' என்ற இந்திரியத்திற்கு குஷ்ட ரோகமும், 'கண்' என்ற இந்திரியத்திற்கு பொட்டைபும் 'நாஸி' என்ற இந்திரியத்திற்கு கபடப்பும், (ஜாட்யமும்) கிரா ணம்' என்ற இந்திரியத்திற்கு வாஸனையை யறியும் சக்திக்குறை வும், 'வாக்' என்ற இந்திரியத்திற்கு சப்தத்தையுண்டு பண்ணச் கூடாமையும், 'கை, கால்' இவ்விந்திரியங்களுக்கு நொண்டியா யிருத்தலும், அந்தநிருத்தி செய்யவதற்குரிய யோக்யதையற் றிருத்தல் 'உபஸ்தம்' என்ற இந்திரியத்திற்கும், உதாவர்த்தம் என்ற ரோகம் குதம் என்ற இந்திரியத்திற்கும், தவறுதல் மனத் திற்கும் அசக்தியாகும். இவ்விதம் இந்திரியங்களுக்கு அசக்தி ஏற்படுவதால்புத்திக்கும் அந்தந்த இந்திரியங்கள்வாயிலாகநடக்க வேண்டிய வியாபாரத்தில் அசக்தி ஏற்படுகின்றது. ஆகவே இந்தி ரியங்கள் 11விதமாக இருப்பதால் அவைவாயிலாக புத்திக்கு ஏற் படுகின்ற அசக்தியும் 11விதமாக ஏற்பட்டது. மஹதமத் எனப் படும் புத்தியையும், மஹது எனப்படும் இந்திரிகளையும் ஒன்றாக கருதி **एकादशेन्द्रियवधाः** என்று சொல்லப்பட்டது. இவ்விதம் இந் திரியங்களுக்குண்டாகின்ற அசக்திவாயிலாக புத்திக்குண்டா கிற அசக்தியை உபதேசித்து நேரிலேயே புத்திக்கு உண்டாகி ன்ற அசக்தியை இனி உபதேசிக்கிறார்—**सहबुद्धिवधैः।** துஷ்டியின்) விதம் இன்னின்னதென்றும், சித்தியின் 8 விதமின்னின்ன தென்றும் பின் வரும் சுலோகத்தால் நிரூபிக்கப்படப் போகி

तुष्टिर्नवधेत्युक्तम्, ताः परिगणयति—

आध्यात्मिकाश्चतस्रः प्रकृत्युपादानकालभाग्याख्याः ।
बाह्या विषयोपरमात् पञ्च च,—नव तुष्टयो ऽभिमताः ॥ ५० ॥

"आध्यात्मिकाः" इति । आध्यामिकाः—'प्रकृतिव्यतिरिक्त आत्मा ऽस्ति' इति प्रतिपद्य, ततो ऽस्य श्रवणमननादिना विवेकसाक्षात्काराय त्वसदुपदेशतुष्टो यो न प्रयतते तस्याध्यात्मिकाश्चतस्रस्तुष्टयो भवन्ति, प्रकृति-

---

ன்றது. அத்தகைய துஷ்டி சித்திகளின் இல்லாமையே புத்தியினிடமுள்ள 17 விதமான அசக்திகளாக ஆகின்றன.

50. (அகை) துஷ்டி 9 விதமென்று முன்னர் சொல்லப்பட்டது. அவற்றைக் கணக்கிடுகிறார்—

(ப - ரை) **प्रकृत्युपादानकालभाग्याख्याः** = பிரகிருதி உபாதானம், காலம், பாக்யம் எனப் பெயரினவும், **आध्यात्मिकाः**=பிரகிருதியினும் வேறுபட்ட ஆத்மாவைப் பற்றியதுமான **चतस्रः**=நான்கு (**तुष्टयः**ஸந்தோஷங்களும்) **विषयोपरमात्**=சப்தம், ஸ்பர்சம் முதலிய விஷயங்களில் வைராக்யத்தால் **बाह्याः**=ஆத்ம வஸ்துவாக இல்லாத பிரகிருதி மஹத் அஹங்காரம் இவைகளைப் பற்றிய **पञ्च**=ஐந்துவிதமான (**तुष्टयश्च**=ஸந்தோஷங்களும் **आहत्य**=சேர்ந்து) **नवतुष्टयः**=9 விதமான துஷ்டிகளாக **अभिमताः**=கருதப்பட்டன.

(தா-டம்) பிரகிருதியினும் வேறுபட்டவனும் ஆத்மா ஒருவனிருக்கிறான் என்று அறிந்தும், அவ்வாத்மாவைப் பற்றிய விவேக சாக்ஷாத்கார மேற்படுவதற்குச் சாதனமான சிரவணம், மனனம், நிதித்யாஸனம் என்ற உபாயங்களில், அசாதுக்களின் உபதேசத்தால் திருப்தியை யடைந்து எவன் முயற்சிப்பதில்லையோ அவனுக்கு நான்குவிதமான துஷ்டிகளுண்டாகின்றன. அந்தத்துஷ்டிகள் பிரகிருதியினும் வேறு பட்டவனும் ஆத்மா ஒருவனிருக்கிறான் என்ற அறிவை முன்னிட்டிருப்

व्यतिरिक्तमात्मानमधिकृत्य यस्मात् ताःतुष्टयस्तस्मादाध्यात्मिकाः। कास्ता इत्यत—आह " प्रकृत्युपादानकालभाग्याख्याः ", प्रकृत्यादिराख्या यासां तास्तथोक्ताः ॥

तत्र प्रकृत्याख्या तुष्टिर्यथा कस्यचिदुपदेशे—'विवेकसाक्षात्कारो हि प्रकृतिपरिणाममेदः, तञ्च प्रकृतिरेव करोतीति कृतन्तद्ध्यानाभ्यासेन, तस्मादेवमेवास्तु वत्स',—इति सेयमुपदेष्टव्यस्य तुष्टिः प्रकृतौ, सा तुष्टिः प्रकृत्याख्या "अंभ" उच्यते ॥

यातु,—"प्राकृत्यपि विवेकख्यातिर्न सा प्रकृतिमात्राद्भवति, मा भूत्सर्वस्य सर्वदा, तन्मात्रस्य सर्वान् प्रत्यविशेषात्, प्रव्रज्यायास्तु सा भवति

பதால் "ஆத்யாத்மிகம்" எனப்படும். அந்த நான்கு விதமான ஸங்கோசங்கள் இன்னின்னவை என்று குறிப்பிடுகிறார்—**प्रकृत्युपादानकालभाग्याख्याः इति ।**

நான்கு விதமான துஷ்டிகளுள் பிரகிருதி துஷ்டியை முதலில் நிரூபிப்பாம்—"விவேகஸாக்ஷாத்காரம் என்பது பிரகிருதியின் பரிணாமமாக இருக்கின்றது. அதைப் பிரகிருதியே தானகச் செய்துவிடுமாதலால் பிரகிருதி புருஷபேதத்தைப் பற்றித் தியானுப்பியாசஞ் செய்தலவசியம். ஆகையால் நீ எப்பொழுதுமிருக்கிறபடியே இருந்துவா" என்று ஒருவன் உபதேசித்தான் என்று வைத்துக்கொள்வோம். இதைக் கேட்டவுடன் கேட்கின்ற மனிதனுக்கு பிரகிருதியினிடம் சந்தோஷமுண்டாகிறது. இந்தச் சந்தோஷம் "பிரகிருதி" என்றும், **अंभः** என்றும் சொல்லப்படும்.

இரண்டாவதான உபாதான துஷ்டியை நிரூபிப்பாம்—"விவேகஸாக்ஷாத்காரம் என்பது பிரகிருதியின் விகாரமாக இருந்தபோதிலும் அது பிரகிருதியால்மட்டு முண்டாவதில்லை. அவ்விதமுண்டாகுமாயின் பிரகிருதியானது எல்லோருக்கும் ஒரே விதமாக இருப்பதால் எல்லோருக்கும் விவேக சாக்ஷாத்கார முண்டாகவேண்டி நேரிடும். அவ்விதமுண்டாவதாகவோ நாமனுபவத்தில் காணவில்லை. ஆதலால் ஸன்யாஸாச்ரமத்தை

तस्मात् प्रव्रज्यामुपाददीथाः, कृतन्ते ध्यानंभ्यासेनायुष्मन्'—इति उपदेशे या तुष्टिः सा उपादानाख्या 'सलिलम्' उच्यते ॥

या तु,—'प्रव्रज्या ऽपि न सद्यो निर्वाणदेति सैव कालपरिपाकमपेक्ष्य सिद्धिन्ते विधास्यति, अलमुत्तप्ततया तव'—इति उपदेशे या तुष्टिः सा कालाख्या 'ओघ' उच्यते ॥

या तु,—'न प्रकृतेर्न कालान्नाप्युपादानाद्विवेकख्यातिः, अपि तु भाग्यादेव। अत एव मदालसापत्यान्यतिबालाति मातुरुपदेशादेव विवेक-

---

ஸ்வீகரிப்பதா லுண்டாகின்றதென்று அங்கீகரிக்க வேண்டும். ஆகவே நீயும் ஸன்யாஸாச்ரமத்தை எடுத்துக்கொள், தியா னுப்யாஸம் வியர்த்தம்" என்று ஒருவன் உபதேசித்தான் என்று எடுத்துக் கொள்வோம். இவ்வுபதேசத்தைக் கேட்ட வுடன் ஒரு விதமான ஸந்தோஷமுண்டாகின்றது. இந்தச் சந் தோஷம் உபாதானதுஷ்டி என்றும் **सलिलम्** என்றும் சொல் லப்படும்.

மூன்றுவதான துஷ்டியை நிரூபிப்பாம்—"ஸன்யாஸமும் உடனே மோக்ஷத்தைக் கொடுத்துவிடாமல் மோக்ஷபுருஷார்த்த முண்டாவதற்குரிய காலத்தை எதிர்பார்க்கின்றது. ஆகையால் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிரு. வீணில் சிரமப்படாதே" என்று ஒருவன் உபதேசித்தான் என்று வைத்துக்கொள்வோம். இதைக்கேட்டவுடன் உண்டாகின்ற ஸந்தோஷம் "காலதுஷ்டி" என்றும், **ओघः** என்றும் சொல்லப்படும்.

நான்காவதான துஷ்டியை நிரூபணஞ் செய்வோம்—" பிர கிருதியிலேனோ, காலத்திலேனோ, ஸன்யாஸாச்ரமத்தை எடுத் துக்கொள்ளுதலாலேனோ, விவேகசாக்ஷாத்காரமுண்டாவதில்லை. பின்னையாவெனின் பாக்யத்தால் தான் உண்டாகின்றது. ஆனது பற்றியே மதம் மானம் முதலியவற்றால் நிறைந்த சிறு குழந்தை களும் தாயினுடைய உபதேசத்தால் மட்டுமே விவேக சாக்ஷாத் காரத்தைபடைந்து முக்தியையடைந்தன என்று புராணங்களிற்

ख्यातिमन्ति मुक्तानि बभूवुः, तस्माद्भाग्यमेव हेतुर्नान्यत्–इति उपदेशे या तुष्टिः सा भाग्याख्या 'वृष्टिः' उच्यते ॥

बाह्या दर्शयति—"बाह्याः" तुष्टयः "विषयोपरमात्, पञ्च"। या खल्वनात्मनः प्रकृतिमहदहङ्कारादीनात्मत्वेनाभिमन्यमानस्य वैराग्ये सति तुष्टयस्ता बाह्याः, आत्मज्ञानाभावे सत्यनात्मानमधिकृत्य प्रवृत्तेरिति। ताश्च वैराग्ये सति तुष्टय इति वैराग्यहेतुपञ्चत्वाद्वैराग्याण्यपि पञ्च, तत्पञ्चत्वात् तुष्टयः पञ्चेति। उपरम्यते ऽनेनेत्युपरमो वैराग्यम्, विषयादुपरमो विषयोपरमः। विषयाः भोग्याः शब्दादयः पञ्च, उपरमा अपि पञ्च ॥ तथा

சொல்லியதும் பொருந்துகின்றது. ஆகையால் மோக்ஷமுண்டாவதற்குப் பாக்கியந்தான் காரணமேயல்லாது மற்றது எதுவும் காரணமல்ல" என்ற உபதேசசத்தைக் கேட்டவுடன் உண்டாகின்ற சந்தோஷத்திற்கு "பாக்கியதுஷ்டி" என்றும் **वृष्टिः** என்றும் பெயர்.

இனி பாஹ்யமான துஷ்டிகளை நிரூபணஞ் செய்வாம்—ஆத்மாவாக இல்லாத பிரகிருதி, மஹத், அஹங்காரம் முதலியவற்றையே ஆத்மவஸ்துவாகக்கருதுகிறவனுக்கு வெளியிலுள்ள வஸ்துக்களிடம் வைராக்கிய முண்டாகி அதனாலுண்டாகின்ற சந்தோஷம் **बाह्यतुष्टिः** எனப்படும். உண்மையான ஆத்மக்ஞான முண்டாகாமல் ஆத்மாவாக இல்லாத வஸ்துக்களை ஆத்மாவாகக் கருதிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலுண்டாவதால் இந்தத் துஷ்டியானது பாஹ்யதுஷ்டி என்றழைக்கப்படுகின்றது. அந்தத் துஷ்டி (சந்தோஷம்) வைராக்யத்தாலுண்டாவதாலும், வைராக்கியத்தின் காரணம் ஐந்துவிதமாக இருப்பதுபற்றி வைராக்யமும் ஐந்து விதமாக ஆவதாலும், துஷ்டி என்பதும் ஐந்துவிதமாக ஆகின்றது. இதைபின் வருமாறு நிரூபணஞ்செய்வாம்—ஒரு வஸ்துவைச் சம்பாதித்தல், ரக்ஷித்தல், குறைவுபடுதல், அனுபவித்தல், ஹிம்ஸை என ஐந்துவிதமான தோஷங்களைக் கவனித்தல் என்ற

हि—अर्जन-रक्षण-क्षय-भोग-हिंसा-दोषदर्शनहेतुजन्मानः पञ्चोपरमा भवन्ति। तथा हि—सेवादयो धनार्जनोपायाः, ते च सेवकादीन् दुःखाकुर्वन्ति,

"दृष्यद्दुरीश्वरद्वाःस्थदण्डिचण्डार्धचन्द्रजाम् ।
वेदनां भावयन् प्राज्ञः कः सेवास्वनुषज्जते" ॥

एवमन्येऽप्यर्जनोपायाः दुःखा इति विषयोपरमे या तुष्टिः सैषा 'पारम्' उच्यते ॥ तथाऽर्जितन्धनं राजैकागारिकाग्निजलौघादिभ्योविनङ्क्ष्यतीति तद्रक्षणे महद्दुःखमिति भावयतो विषयोपरमे या तुष्टिः सा द्वितीया 'सुपारम्'.

காரணத்தால் உண்டாகின்ற வைராக்யமும் ஐந்துவிதமாக ஆகின்றது.

(1) பிறருக்கு ஊழியஞ் செய்தல் முதலியன பொருளீட்டச் சம்பாதிப்பதற்குச்சாதனங்கள். அவ்வுபாயங்கள் அவ்வவற்றைச்செய்பவர்களை மிகவும் துக்கப்படுத்துகின்றன. "கொழுப்பையடைந்த அயோக்யனுன பிரபுவினுடைய வாயிற்படியிலிருக்கின்ற வேலையாட்கள் கழுத்தில் கையைக்கொடுத்து தள்ளுதலால் ஏற்பட்ட துக்கத்தை அனுசந்திந்த எந்தமேதாவியான மனுஷ்யன் சேவை செய்வதற்கு முன் வருவான்" என்று பெரியோர்களும் இகழ்ந்திருக்கின்றனர். பொருளீட்டச் சம்பாதிப்பதற்கு வேண்டிய மற்றுமுள்ள எல்லா உபாயங்களும் துக்கத்தைத் தருகின்றனவாக இருக்கின்றபடியால் விஷயங்களினின்றும் வைராக்கியமுண்டாகி அதனலுண்டாகும் சந்தோஷம் பாஹ்யதுஷ்டிகளுள் முதலாவது துஷ்டியாகும். இதுவே "பாரம்" என்றும் வியவஹரிக்கப்படும் (2) சேமப்பட்டு சம்பாதிக்கப்பட்ட பொருளும் அரசன், திருடன், நெருப்பு, ஜலப்பிரவாஹம் இவை முதலிய வற்றால் நாசத்தையடையக்கூடுமாதலால் அவற்றினின்றும் ரக்ஷிப்பதில் அதிகக் கஷ்டமுண்டாகுமென்று நிச்சயிப்பவனுக்கு அதனல் விஷயத்தில் வைராக்யமுண்டாவதா லேற்படுகின்ற சந்தோஷம் பாஹ்ய துஷ்டிகளுள் இரண்டாவது துஷ்டியாகும். இதுவே "ஸுபாரம்" எனப்படும். (3) அதிகமான சேமத்தால்

उच्यते ॥ तथा महता ऽऽयासेनार्जितन्धनं भुज्यमानं क्षीयते इति तत्प्रक्षय म्भावयतो विषयोपरमे या तुष्टिः सा तृतीया 'पारापारम्' उच्यते ॥ ए शब्दादिभोगाभ्यासात् प्रवर्धन्ते कामाः, ते च विषयाप्राप्तौ कामि दुःखाकुर्वन्तीति भोगदोषं भावयतो विषयोपरमे या तुष्टिः सा चतुर्थी 'अनु त्तमाम्भ' उच्यते । एवन्नानुपहत्य भूतानि विषयोपभोगः सम्भवतीति हिंस दोषदर्शनाद्विषयोपरमे या तुष्टिः सा पञ्चमी 'उत्तमाम्भ' उच्यते एवमाध्यात्मिकीभिश्चतसृभिः बाह्याभिश्च पञ्चभिः 'नव तुष्टयो ऽभि मताः' ॥ ५० ॥

गौणमुख्यभेदैः सिद्धीराह—

சம்பாதிக்கப்பட்ட பொருளும் அனுபவித்தால் குறைந்துவி கின்றது என்று நினைப்பவனுக்கு அதனல் விஷயங்களில் வைரா க்கியமுண்டாகி அதனல் ஏற்படுகின்ற சந்தோஷம் மூன்றுவத பார்வ்ய துஷ்டியாகும். இதுவே "பார்ாபாரம்" எனப்படுட (4) சப்தம் முதலிய விஷயங்களை அடிக்கடி அனுபவிப்பதா அவற்றில் ஆசை விருத்தியடைகின்றது. அவ்வாசையே விரு பிய பொருள் கிடைக்காவிடில் விரும்பியவனை துக்கத்திற்கு ளாக்குகின்றது. என்பதுபற்றி அனுபவிப்பதிலும் தோஷத்தை யறிந்தவனுக்கு வைராக்கியமுண்டாகி அதனல் ஏற்படுகின் சந்தோஷம் நான்காவது பார்வ்ய துஷ்டியாகும். இதுவே "அனுத்தமாம்பஸ்" எனப்படும். (5) பிராணிகளை ஹிம்ஸி காமல் விஷயானுபவம் ஏற்படமாட்டாதென்று பிராணிஹிம்ஸை என்ற தோஷத்தைக் கவனித்தவனுக்கு அதனல் வைராக்கி முண்டாவதாலேற்படுகின்ற சந்தோஷம் ஐந்தாவது பார்வ் துஷ்டியாகும். இதுவே "உத்தமாம்பஸ்" எனப்படும். இ விதம் ஆத்யாத்மிக துஷ்டி நாலும், பார்வ்யதுஷ்டி ஐந்து சேர்ந்து துஷ்டி 9 விதமாகின்றது. (எ-று)

51. (அ - கை) கௌணம், முக்கியம் என்று இரண்டுவித பிரிவினையுள்ள 8 விதமான சித்திகளை உபதேசிக்கிறார்—

ऊहः शब्दो ऽध्ययनं दुःखविघातास्त्रयः सुहृत्प्राप्तिः ।
दानं च सिद्धयो ऽष्टौ, सिद्धेः पूर्वो ऽङ्कुशस्त्रिविधः ॥ ५१ ॥

"ऊह" इति । विहन्यमानस्य दुःखस्य त्रित्वात्तद्विघातास्त्रय इतीमा मुख्यास्तिस्रः सिद्धयः, तदुपायतयात्वितरा गौण्यः पञ्च सिद्धयः, ता अपि हेतुहेतुमत्तया व्यवस्थिताः । तत्राद्या ऽध्ययनलक्षणा सिद्धिर्हेतुरेव । मुख्यास्तु सिद्धयो हेतुमत्य एव । मध्यमास्तु हेतुहेतुमत्यः॥ विधिवद्गुरुमुखादध्यात्मविद्यानामक्षरस्वरूपग्रहणमध्ययनम् प्रथमासिद्धिः "तारम्" उच्यते ॥ तत्का-

---

(ப - ரை) **अध्ययनम्**=ஆசார்யரின் முகத்தினின்றும் ஆத்ம தத்துவத்தை உபதேசிக்கின்ற சாஸ்திரங்களின் ஆவ்ருத்தியை மட்டும் கிரஹித்தல் **शब्दः**=அந்தச் சாஸ்திரங்களின் அர்த்தத்தை யறிதல் **ऊहः**=அறியபட்ட சாஸ்திரார்த்தத்தை யுக்திகளால் நிர்ணயித்தல் **दुःखविघाताः**=ஆத்யாத்மிகம் ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்று மூன்றுவிதமான துக்கங்களை நாசமாக்குகின்ற **त्रयः**=பிரமோதம், முதிதம், மோதமானம் என்ற மூன்றுவிதமான சித்திகள் **सुहृत्प्राप्तिः**=குரு சிஷ்யன், தன்னுடன் படிப்பவன் இவர்களுடன் கலந்து விஷய விசாரஞ்செய்தல் **दानम्**=விவேகக் ஞானத்தைச் சுத்திசெய்து கொள்ளுதல் (**इति**=என்று) **सिद्धयः**=சித்திகள்) **अष्टौ**=எட்டுவிதமாக ஆகின்றன.

(தா - ம்) தத்துவ ஸாக்ஷாத்காரத்தினால் விலக்கப்படுகின்ற துக்கம் மூன்றுவிதமாக இருப்பதால் அவற்றை விலக்குகின்ற சாதனமும் மூன்றுவிதமாக ஆகின்றதுபற்றி முக்கிய சித்தி மூன்று என்று சொல்லப்படுகிறது. மற்ற ஐந்துவிதமான சித்திகளும் முக்கிய சித்தியுண்டாவதற்குச் சாதனமாகின்றபடியால் "கௌணசித்திகள்" எனப்படும். இவ்வெட்டு சித்திகளுள் சிலவை எப்பொழுதும் வேறு சித்தியின் கார்யமாகவும், சிலவை எப்பொழுதும் வேறு சித்திக்குக்காரணமாகவுமாகின்றன. அத்யயனம் எனப்படும் முதல் சித்தியானது எப்பொழுதும் வேறு சித்திக்குக்காரணமாகவே இருக்கக்கூடியது. ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் எனப்படும் மூன்றுவித துக்க நிவிருத்திக்குச் சாதனமாகின்ற பிரமோதம், முதிதம், மோத

र्थम्—शब्दः; 'शब्दः' इति पदम् शब्दजनितमर्थज्ञानमुपलक्षयति, कार्ये कारणोपचारात्। पाठार्थाभ्यान्तदिदन्विधा श्रवणम्॥ ऊहः तर्कः, आगमाविरोधिन्यायेनागमार्थपरीक्षणम्। परीक्षणञ्च संशयपूर्वपक्षनिराकरणेनोत्तरपक्षव्यवस्थापनम्। तदिदम्मननमाचक्षत आगमिनः। सा तृतीया सिद्धिस्तारतरमुच्यते॥ "सुहृत्प्राप्तिः" न्यायेन स्वयम्परीक्षितमप्यर्थं न श्रद्दधते, न यावद्गुरुशिष्यसब्रह्मचारिभिः सह संवाद्यते। अतः सुहृदां गुरुशिष्य सब्रह्मचारिणां संवादकानां प्राप्तिः सुहृत्प्राप्तिः सा सिद्धिश्चतुर्थी 'रम्यक' उच्यते॥

மானம் எனப்படும் சித்திகள் எப்பொழுதும் மற்றச் சித்தியின் காரியமாகவே இருக்கக்கூடியன. நடுவிலிருக்கின்ற மீதமுள்ள சித்திகள் மற்றச் சித்தியின் காரியமாகவும், காரணமாகவுமாகின்றன.

(1) முறைப்படி ஆத்மதத்துவத்தை யுபதேசிக்கின்ற சாஸ்திரங்களின் அகூசாரஸ்வரூபத்தை மாத்திரம் கிரகித்தல் **अध्ययनम्** எனப்படும். அதுவே 8 விதச் சித்திகளுள் முதல் சித்தியாகும். அதற்கு "காரம்" என்றும் மற்றுமோர் பெயருண்டு. (2) அத்யயனத்தின் காரியமான "சப்தம்" என்பது இரண்டாவது சித்தி. "சப்த" என்றபதம் சப்தத்தாலுண்டுபண்ணப்பட்ட அர்த்தக்ஞானத்தை "காரியத்தைக் காரணசப்தத்தால் வியவகரிப்பது" என்றமுறையை யனுஸரித்துக் குறிக்கின்றது. ஆகவே ஆத்மதத்துவ சாஸ்திரங்களின் அர்த்தமறிதல் இரண்டாவது சித்தி என்று எற்பட்டது. இதுவே **सुतारम्** என்றும் சொல்லப்படும். (3) "ஊஹம்" என்பது மூன்றாவது சித்தி அதாவது: சாஸ்திரத்திற்கு விருத்தமில்லாத யுக்திகளால் சாஸ்திரார்த்தங்களைப் பரீக்ஷித்தல். அதாவது: சந்தேகம், பூர்வபக்ஷம் இவைகளை விலக்கிக்கொண்டு சித்தாந்தத்தை நிர்ணயித்தல். இதையே சாஸ்திரக்காரர்கள் **मननम्** என்கின்றனர். இது மூன்றாவது சித்தியாகும். இது லாங்கியாசாரியர்களால் **तारतरम्** எனப்படும். (5) **सुहृत्प्राप्तिः** என்பது ஐந்தாவது சித்தி. அதாவது: சாஸ்திரத்திற்கு விருத்தமில்லாத யுக்திகளைக்கொண்டு ஓர் சமர்

"दानं" च शुद्धिर्विवेकज्ञानस्य, 'दैप् शोधने' इत्यस्माद्धातोर्दानपदव्युत्पत्तेः। यथाह भगवान् पतञ्जलिः—

"विवेकख्यातिरविप्लवो दुःखत्रयस्य हानोपायः" इति (योगसूत्र २।२६)। 'अविप्लवः' शुद्धिः, सा च सवासनसंशयविपर्यासानां परिहारेण विवेकसाक्षात्कारस्य स्वच्छप्रवाहे अवस्थापनम्। सा च न विना ऽऽदरनैरन्तर्यदीर्घकालसेविताभ्यासपरिपाकाद्भवतीति दानेन (विवेकख्यात्याः कार्येण) सो ऽपि

சாதம் நிர்ணயிக்கப்பட்டபோதிலும் குரு சிஷ்யன், தம்மூடன் அத்யயனஞ் செய்பவன் இவர்களுடன் கலந்து விசாரிக்காவிடில் நம்பிக்கைவற்படமாட்டாதாகையால் குரு, சிஷ்யன், தம்மூடன் அத்யயனஞ் செய்பவன் இவர்களாகிய மூவரிருத்துக்களையடைந்து விசாரஞ் செய்தல் நான்காவது சித்தியாகும். இதையே சாங்கியாசாரியர்கள் **ऊह्य**வென்கின்றனர் (5) **दानम्** என்பது ஐந்தாவது ஸித்தி. சுத்திசெய்தல் என்ற பொருளையுடைய **दैप्** என்பதாது (பகுதி)வினின்றும் **दान** என்ற பதம் எற்படுவதால் **दानम्** என்ற பதத்திற்கு சுத்தி என்று பொருள். இவ்விதமே பதஞ்ஜலியும் **विवेकख्यातिरविप्लवोदुःखत्रयस्य हानोपायः*** என்ற சூத்திரத்தால் சொல்லி இருக்கிறார். இந்த யோக சூத்திரத்திலுள்ள **अविप्लव** என்ற பதத்திற்கு சுத்தி என்று பொருள். அதாவது சந்தேகம், மித்தியாக ஞானம் இவைகளை அவற்றின் வாஸனையுடன் விலக்கி விவேக ஸாக்ஷாத் காரத்தை ஸ்வச்சப் பிரவாக முள்ளதாய்ச் செய்து கொள்ளுதல். அத்தகைய சுத்தியானது விவேக சாக்ஷாத்காரத்தைப் பெறுவதில் மிக்க ஆதரவு (ஊக்கம்) இடைவிடா முயற்சி, நீடித்தகாலம் அதன் உபாயங்களான சிரவணம், மனனம் முதலியவற்றைச்செய்தல், அப்யாஸத்தின் முதிர்ச்சி இவற்றாலுண்டாவதால் **दान** என்ற பதம் மேற் சொல்லிய ஆதரவு முதலியவற்றையும் கிரஹிக்கின்றது. இது ஐந்தாவது சித்தி. இதை சாங்கியாசிரியர்கள் **सदामुदितम्** என்கின்றனர்.

---

* இதன்பொருள்—சுத்தமான விவேக சாக்ஷாத்காரமானது ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், அதிதைவிகம் எனப்படும் மூன்றுவித துக்கங்களைப் போக்கிக் கொள்வதற்குச் சாதனமாகின்றது.

संगृहीतः। सेयं पञ्चमी सिद्धिस्सदामुदितमुच्यते ॥ तिस्रश्च मुख्याः सिद्धयः प्रमोदमुदितमोदमाना, इत्यष्टौ सिद्धयः ॥

अन्ये व्याचक्षते—विनोपदेशादिना प्राग्भवीयाभ्यासवशात्तत्त्वस्य स्वयमूहनं यत् सा सिद्धिरूहः। यस्य सांख्यशास्त्रपाठमन्यदीयमाकर्ण्य तत्त्वज्ञानमुत्पद्यते सासिद्धिः शब्दः, शब्दपाठादनन्तरंभावात्। यस्य शिष्याचार्यसम्बन्धेन सांख्यशास्त्रं ग्रन्थतो ऽर्थतश्चाधीत्य ज्ञानमुत्पद्यते सा ऽध्ययन-

---

மூக்கியமான சித்திகள் மூன்று. அவையாவன 1 பிரமோதம். 2 முதிதம். 3 மோதமானம். ஆகசித்திகள் 8 விதமாக ஆகின்றன.*

மற்றவர்கள் இந்தச் சுலோகத்திற்கு வேறுவிதமாக வியாக்யானஞ் செய்கின்றனர். இந்த ஜன்மத்தில் குருபதேசம் முதலிய சாதனமின்றியே முன்ஜன்மத்தின் அப்பியாஸவசத்தால் தத்துவார்த்தத்தைத் தானகவே ஊஹித்தல் என்பது "ஊஹம்" எனப்படும் சித்தியாகும். எவனுக்கு மற்றவன் சாங்கிய சாஸ்திராப்யாஸஞ் செய்து வருங்கால் அதைக் கேட்பதால் மட்டுமே தத்துவக்ஞான முண்டாகின்றதோ அது "சப்தம்" எனப்படும் சித்தியாகும். சப்தத்தைக் கேட்ட வுடனுண்டாவதால் அந்தச் சித்திக்கு "சப்தம்" எனப் பெயர் ஏற்பட்டது. எவனுக்கு ஆசார்யனிடமிருந்து சாங்கிய சாஸ்திரத்தின் ஆனுபூர்வியையும் அர்த்தத்தையும் அத்யயனஞ் செய்வதால் தத்வக்ஞான முண்டாகின்றதோ அது அத்யயனத்தாலுண்டாவதால் "அத்யயனம்" எனப்படும் சித்தியாகும். எவனுக்கு தத்துவக்ஞானத்தை யடைந்த சுஹிருத்தின் சேர்க்கையால் தத்துவக்ஞான முண்டாகின்றதோ அது "சுஹிருத்பிராப்தி" எனப்படும் சித்தியாகும். பொருள் முதலியவற்றைக்

---

*"ஆத்யாத்மிகம்" என்ற துக்கத்தை விலக்குகின்ற விவேகக்ஞானம் பிரமோதம் என்றும், ஆதி பௌதிக துக்கத்தை விலக்குகின்றவிவேகக்ஞானம் முதிதம் என்றும், ஆதிதைவிக துக்கத்தை விலக்குகின்ற விவேகக்ஞானம் மோத மானம் என்றும் சொல்லப்படும் என்று சாங்கிய சந்திரோதயம் என்ற கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

हेतुका सिद्धिरध्ययनम्। सुहृत्प्राप्तिरिति। यस्याधिगततत्त्वं सुहृदं प्राप्य ज्ञानमुत्पद्यते सा ज्ञानलक्षणा सिद्धिस्तस्य सुहृत्प्राप्तिः। दानञ्च सिद्धिहेतुः» धनादिदानेनाराधितो ज्ञानी ज्ञानं प्रयच्छति। अस्य च युक्तायुक्तत्वे सूरिभिरेवावगन्तव्ये इति, कृतं परदोषोद्भावनेन नःसिद्धान्तमात्रव्याख्यानप्रवृत्तानामिति ॥

सिद्धितुष्टिविपर्ययेण अशक्तिर्बुद्धिवधस्समदशधा द्रष्टव्यः। अत्र प्रत्ययसर्गे सिद्धिरुपादेयेति प्रसिद्धमेव। तन्निवारणहेतवस्तु विपर्ययाशक्तितुष्टयो हेया इत्याह—"सिद्धेः पूर्वो ऽङ्कुशस्त्रिविधः" इति। "पूर्व" इति। विपर्ययाशक्तितुष्टीः परामृशति। ताः सिद्धिकरिणीनामङ्कुशो, निवारकत्वात्। अतः सिद्धिपरिपन्थित्वात् विपर्ययाशक्तितुष्टयो हेया इत्यर्थः ॥ ५१ ॥

கொடுத்து ஞானியைத் திருப்தி செய்தால் ஞாதேஷபதேசம் செய்வானையால் அதனல் ஏற்படும் ஞானம் 'தானம்' எனப் படும் சித்தியாகும். என்பதாம்.

இந்த வியாக்யானத்தின் குண தோஷங்களை மேதாவிகள் அறிவார்களாதலால் பிரரிடமுள்ள தோஷத்தை வெளியிட நாம் பிரயத்தனப்படவில்லை. நாம் சித்தாந்த மாத்திரத்தையே வெளியிட ஆரம்பித்திருக்கிறோம்.

மேற் சொல்லிய 8 விதமான சித்தி, 9 விதமான துஷ்டி இவற்றின் இல்லாமையே 17 விதமான புத்தியின் அசக்தியாகும். புத்தியின் சிருஷ்டியான விபர்யயம், அசக்தி, துஷ்டி இவைகள் விலக்கத்தக்கவைகள் என்று சொல்லுகிறார்—**सिद्धेः पूर्वोऽङ्कुशस्त्रिविधः**। **पूर्व** என்றபதம் விபர்யயம், அசக்தி, துஷ்டி இவைகளைக் குறிக்கின்றது. அவைகள் சித்தியாகிற யானைக்கு கண்டாகக் கோடாலிபோ லாகின்றன. எனென்றால் இவைகள் சித்தி உண்டாகாமலிருக்கும்படித் தடை செய்கின்றன. விபர்யயம், அசக்தி, துஷ்டி இவைகள் சித்திக்கு விருத்தமாயிருப்பதால் அவைகளை விட்டுவிட முயற்சிக்கவேண்டும் (என்று)

स्यादेतत्—पुरुषार्थप्रयुक्ता सृष्टिः स च पुरुषार्थः प्रत्ययसर्गाद्वा तन्मात्रसर्गाद्वा सिध्यतीति, कृतमुभयसर्गेणेत्यत आह—

नविनाभावैर्लिङ्गं नविना लिङ्गेन भवनिर्वृत्तिः ।
लिङ्गाख्यो भावाख्यः तस्माद्द्विविधः प्रवर्तते सर्गः ॥ ५२ ॥

"न विना" इति । "लिङ्गम्" इति तन्मात्रसर्गमुपलक्षयति, "भावैः" इति च प्रत्ययसर्गम् । एतदुक्तंभवति—तन्मात्रसर्गस्य पुरुषार्थसाधनत्वं स्वरूपञ्च न प्रत्ययसर्गाद्विना भवति, एवं प्रत्ययसर्गस्य स्वरूपं पुरुषा-

---

(அ - கை) சிருஷ்டியானது புருஷார்த்த முண்டாவதற்காக வற்படுகின்றது என்று முன்னர் சொல்லப்பட்டது. அந்தப் புருஷார்த்தமானது புத்தியின் கார்யமான விபர்யயம் முதலிய வற்றால் மட்டுமோ, தன்மாத்திரைகளின் சிருஷ்டியான பஞ்ச பூதங்களால் மட்டுமோ வற்படலாமாதலால் இரண்டுவிதமான சிருஷ்டி வேண்டியதில்லை என்று சந்தேஹித்துப் பதிலளிக் கிறார்—

(ப - தை) **भावैर्विना** = புத்தியின் சிருஷ்டியான விபர்யயம் முதலியன இல்லாமல் **लिङ्गम्**=தன்மாத்திரையின் சிருஷ்டியானது **न(संभवति**=சம்பவிக்காது)**लिङ्गेन**=தன்மாத்திரையின் சிருஷ்டியான பூதங்களில்லாமல் **भावनिर्वृत्तिः**=புத்தியின் சிருஷ்டியானது **न (संभवति**=சம்பவிக்காது.) **तस्मात्**=ஆகையால் **लिङ्गाख्यः** = லிங்கம் என்று பெயருள்ளதும், **भावाख्यः**=பாவம் என்று பெயருள்ளதுமான **द्विविधः**=இரண்டுவிதமான **सर्गः**=சிருஷ்டி **प्रवर्तते**=வற்படுகின்றது.

(தா - ம்) **लिङ्गम्**=என்றபதம் தன்மாத்திரைகளால் வற்படுகின்ற பஞ்சபூதங்களின் சிருஷ்டியைக் குறிக்கின்றது. **भाव** என்ற பதம் புத்தியின் சிருஷ்டியான விபர்யயம் முதலியவற்றைக் குறிக்கின்றது. இந்தச்சுலோகத்தின் கருத்து பின்வருமாறு—தன்மாத்திரை சிருஷ்டியான ஐந்து பூதங்களுக்குப் புருஷார்த்த ஸாதனமாயிருக்குகையும், சுவரூபமும் புத்தியின் கார்ய

र्थसाधनत्वञ्च न तन्मात्रसर्गार्हतं, इत्युभयथा सर्गप्रवृत्तिः । भोगः पुरुषार्थो न भोग्यान् शब्दादीन् भोगायतनं शरीरद्वयञ्च अन्तरेण सम्भवतीत्युपपन्नस्तन्मात्रसर्गः । एवं स एव भोगो भोगसाधनानीन्द्रियाण्यन्तः करणानि चान्तरेण न सम्भवति । न च तानि धर्मादीन् भावान् विना संभवन्ति । न चापवर्ग हेतुर्विवेकख्यातिरुभयसर्गं विना, इत्युपपन्न उभयविधः सर्गः ॥

மான விபர்யயம் முதலியன இல்லாமல் சம்பவிக்காது. இவ் விதமே புத்தியின் சிருஷ்டியான விபர்யயம் முதலியனவற்றின் சுவரூபமும், அவற்றிற்குப் புருஷார்த்த ஸாதனமாயிருக்குகை யும் தன்மாத்திர ஸிருஷ்டியான ஐந்து பூதங்களின்று சம்பவிக் காது. ஆனதுபற்றி இரண்டுவிதமான சிருஷ்டியும் ஆவச்யக மான்தாக ஏற்பட்டது. அதாவது: புருஷார்த்தம் எனப்படும் போகமானது அனுபவிக்கத் தகுந்த சப்தம் முதலிய விஷயங் கள், போகத்திற்குச்சாதனமான சூக்ஷ்ம ஸ்தூல சரீரங்கள் இவை யில்லாமல் சம்பவிக்காதாகையால் தன்மாத்திரையிலுல் உண்டாகின்ற சிருஷ்டி யுக்திக்குப் பொருந்தியதாக ஏற்பட்டது. இவ்விதமே புருஷார்த்த மெனப்படும் போகமோ போகத்திற் குச் சாதனமான இந்திரியங்கள், அந்தக்காணங்கள் இவை யின்றி சம்பவிக்காது. போகசாதனமான இந்திரியம் முத லியவைகளோ தர்மம், அதர்மம் முதலிய பாவங்களில்லாமல் ஏற்படமாட்டாது. மோக்ஷஸாதனமான விவேக க்ஞானமும் புத்தியிலுல் ஏற்படுகின்ற சிருஷ்டி, தன்மாத்திரையிலுல் ஏற் படுகின்ற சிருஷ்டி, இவ்விரண்டுமில்லாமல் ஏற்படமாட்டாது. ஆதலால் இரண்டுவிதமான சிருஷ்டியும் யுக்திக்குப் பொருந்திய தாக ஏற்பட்டது.

சங்கை—புத்தியின் சிருஷ்டி ஏற்பட்டால்தான் தன்மாத்திர சிருஷ்டி சம்பவிக்கின்றது; தன்மாத்திர சிருஷ்டி ஏற்பட்டால் தான் புத்தியின் சிருஷ்டி சம்பவிக்கின்றது என்று அங்கீகரித் தால் "அன்யோன்யாச்ரயம்" என்ற தோஷம் வராதிரு வெனின் ?

अनादित्वाच्च बीजाङ्कुरवन्नान्योन्याश्रयदोषमावहति। कल्पादावपि प्राचीनकल्पोत्पन्नभावलिङ्गसंस्कारवशाद्भावलिङ्गयोरुत्पत्तिर्नानुपपन्नेति सर्वमवदातम् ॥ ५२ ॥

विभक्तः प्रत्ययसर्गः। भूतादिसर्गं विभजते—

अष्टविकल्पो दैवस्तैर्यग्योनश्च पञ्चधा भवति।
मानुषकश्चैकविधः समासतो भौतिकः सर्गः ॥ ५३ ॥

"अष्टविकल्प" इति। ब्राह्मः, प्राजापत्यः, ऐन्द्रः, पैत्रो, गान्धर्वो, याक्षो, राक्षसः, पैशाचः इत्यष्टविधो दैवः सर्गः ॥ "तैर्यग्योनश्च पञ्चधा भवति"

உத்தரம்—இவ்விரண்டு சிருஷ்டிகளும் அநாதியாக (ஆதியற்றதாக) இருப்பதால் பீஜாங்குர நியாயத்தை யனுஸரித்து "அன்யோன்யாச்ரயம்" என்பது தோஷமாக ஆகமாட்டாது. கல்பம் துடங்கும்பொழுதும் முன் கல்பத்திலுண்டான பாவம், லிங்கம் இவற்றின் சம்ஸ்காரத்தைக்காரணமாகக்கொண்டுபாவம், லிங்கம் இவைகள் உண்டாவதால் அப்பொழுதும் அன்யோன்யாச்ரயம் சம்பவிக்காதானதுபற்றி மேற் சொல்லியவையாவும் தோஷமற்றதாக ஏற்பட்டது.

53. (அ - கை) பிரத்யயசர்க்கம் எனப்படும் தர்மாதிகள் பிரித்து நிரூபிக்கப்பட்டன. இனி தன் மாத்திரைகளின் சிருஷ்டியைப் பிரித்து உபதேசிக்கிறார்—

(ப - ரை) **दैवः**=தேவர்களின் சம்பந்தியான சிருஷ்டி **अष्टविकल्पः**=8 விதப் பிரிவையுடையது. **तैर्यग्योनश्च**=திர்யக்யோனி களெனப்படும் பசுபக்ஷி முதலியவற்றின் சிருஷ்டி **पञ्चधा**=5விதமாக **भवति**=ஆகின்றது. **मानुषकश्च**=மனுஷ்ய சம்பந்தியான சிருஷ்டி **एकविधः**=ஒருவிதமாக இருக்கின்றது. **भौतिकः**=பஞ்சபூதங்களின் விகாரமான **सर्गः**=சிருஷ்டியான து **समासतः**=சுருக்கமாய் (**एवम्**=மேற் சொல்லியபடி இருக்கின்றது.)

(தா - ம்) பஞ்சபூதங்களால் எற்படுகின்ற சிருஷ்டியைச்

पशुमृगपक्षिसरीसृपस्थावराः ॥ "मानुषकश्चैकविधः" इति, ब्राह्मणत्वाद्यवान्तरजातिभेदाविवक्षया, संस्थानस्य चतुर्ष्वपि वर्णेष्वविशेषात्। इति समासतः संक्षेपतः भौतिकः सर्गः। घटादयस्त्वशरीरत्वे ऽपि स्थावरा एवेति ॥

भौतिकस्यास्य सर्गस्य चैतन्यौत्कर्षनिकर्षतारतम्याभ्यामूर्ध्वाऽधोमध्यभावेन त्रैविध्यमाह—

ऊर्ध्वं सत्त्वविशालस्तमोविशालश्च मूलतः सर्गः।
मध्ये रजोविशालो, ब्रह्मादिस्तंबपर्यन्तः ॥ ५४ ॥

சுருக்கமாய் மூன்றுவிதமாகப் பிரிக்கலாம். 1 தேவவகுப்பைச் சேர்ந்தது. 2. திர்யக்வகுப்பைச் சேர்ந்தது. 3. மநுஷ்யவகுப்பைச்சேர்ந்தது. ஆவற்றுள் தேவவகுப்பைச் சார்ந்த சிருஷ்டி பிராம்மம், பிராஜாபத்யம், ஐந்த்ரம், பைத்ரம், காந்தர்வம், யாக்ஷம், ராக்ஷஸம், பைசாசம் என்று 8வகைப்படும். திர்யக்யோனி வகுப்பைச்சார்ந்த சிருஷ்டி பசு, மிருகம், பக்ஷி, ஸரீஸிருபம் (மார்பிணல் ஊர்ந்துசெல்லும் பிராணிகள்) ஸ்தாவரம் (மரம்முதலியன) என்று ஐந்துவகைப்படும். மநுஷ்ய வகுப்பைச்சார்ந்த சிருஷ்டி ஒருவிதமாகவேயுள்ளது. சங்கை—மனிதவகுப்பிலும் பிராம்மணன், க்ஷத்திரியன், வைச்யன், சூத்திரன் என நான்குவிதப் பிரிவினைகளிருப்பதால் மநுஷ்யசிருஷ்டி ஒருவிதமாகவேயுள்ளது என்று சொன்னது எங்ஙனம்? உத்தரம்—இங்கு அவயவங்களின் அமைப்பிலிருக்கின்ற அபேதத்தை முன்னிட்டுப் பிரிவினை செய்யப்படுகின்றதே யல்லாது பிராம்மணம் முதலிய ஜாதிபேதத்தைக் குறிப்பிடவில்லை என்று கொள்ளவும். குடம் முதலிய அசேதனங்களும் ஸ்தாவரவகுப்பைச் சேர்ந்தவைகளே. (எ-று)

54. (அ - கை) பௌதிகமெனப்படும் மேற்சொல்லிய சிருஷ்டிக்கு சைதன்யத்தின் ஆதிக்யம், குறைவு என்ற வித்தியாஸத்தால் மேற்பட்டது, கீழ்பட்டது, நடுநிலையிலுள்ளது என்று மூன்றுவிதமான பிரிவை உபதேசிக்கிறார்—

(ப - ரை) **ऊर्ध्वम्**=மேல்பாகத்திலிருக்கின்ற **सत्त्वः**=சிருஷ்ட

"ऊर्ध्वं सत्त्वविशालः" इति । द्युप्रभृतिसत्यान्तो लोकः सत्त्वबहुलः । "तमोविशालश्च मूलतः सर्गः" पश्वादिस्थावरान्तः, सोऽयं मोहमयत्वात्तमोबहुलः । भूलोकस्तु सप्तद्वीपसमुद्रसन्निवेशः "मध्ये रजोविशालः" धर्माधर्मानुष्ठानपरत्वाद्दुःखबहुलत्वाच्च । तामिमां लोकसंस्थितिं संक्षिपति "ब्रह्मादिस्तम्बपर्यन्तः", स्तम्बग्रहणेन वृक्षादयः संगृहीताः ॥ ५४ ॥

तदेवं सर्गं दर्शयित्वा तस्यापवर्गसाधनवैराग्योपयोगिनीं दुःखहेतुतामाह—

तत्र जरामरणकृतं दुःखम्प्राप्नोति चेतनः पुरुषः ।
लिङ्गस्याविनिवृत्तेस्तस्माद्दुःखं स्वभावेन ॥ ५५ ॥

सत्त्वविशालः=சத்வகுணம் அதிகமாயுள்ளது. **मूलतः**=பசு முதல் ஸ்தாவரம் வரையுள்ள **सर्गः**=சிருஷ்டி **तमोविशालः**=தமோகுண மதிகமாயுள்ளது. **मध्ये**=நடுவிலுள்ள பூலோகத்தில் **रजोविशालः**=ரஜோகுண மதிகமாயுள்ளது. (**भौतिकः सर्गः**=பஞ்சபூதங்களின் விகாரமான சிருஷ்டி) **ब्रह्मादिस्तंबपर्यन्तः**=பிரும்மா முதல் சிறிய பூச்சி முடிவாக இருக்கின்றது.

(தா - டம்) சுவர்க்கலோகம் முதல் ஸத்யலோகம் வரையுள்ள லோகங்கள் ஸத்வகுணதிக்யம் வாய்ந்தன. பசு, பக்ஷி, மிருகம், ஸரீஸிருபம், ஸ்தாவரம் முதலியவைகள் மோஹம் நிறைந்திருப்பதால் தமோகுணதிக்யம் வாய்ந்தன. 7 த்வீபம், 7 ஸமுத்ரம் இவைகளையுடைய பூலோகமோவெனில், தர்ம அதர்மங்களையனுஷ்டிப்பதில் ஈடுபட்டிருப்பதாலும், துக்கம் நிறைந்திருப்பதாலும் ரஜோகுணதிக்யம் வாய்ந்தது. இத்தகைய லௌகிகலோகத்தின் அமைப்பைக் சுருக்கிச் சொல்லுகிறார்— **ब्रह्मादिस्तंबपर्यन्तः इति । स्तंब** என்ற பதத்தால் மரம் முதலியவற்றையும் கிரஹித்துக்கொள்ளவேண்டும்.

55. (அ - கை) இவ்விதம் சிருஷ்டியை நிரூபணஞ் செய்து காண்பித்து அதற்கு மோக்ஷத்திற்குச் சாதனமான யாதொரு வைராக்யமுண்டோ அதற்குச் சாதனமான துக்க ஹேதுவா யிருத்தலை உபதேசிக்கிறார்—

'तत्र'' इति। 'तत्र' शरीरादौ। यद्यपि विविधा विचित्रानन्दभोगभागिनः ाणभृद्देहाः, तथा ऽपि सर्वेषां जरामरणकृतं दुःखमविशिष्टम्। सर्वस्य खलु ्मेरपि मरणत्रासो—'मा न भूवम्' 'भूयासम्' इत्येवमात्मको ऽस्ति। ःखं च भयहेतुरिति दुःखंमरणम्॥

स्यादेतत्—दुःखादयः प्राकृता बुद्धिगुणाः, तत्कथमेते चेतनसम्बन्धि- ो भवन्तीत्यत आह—"पुरुष" इति। पुरि लिङ्गे शेते इति पुरुषः, लिङ्गञ्च त्सम्बन्धीति चेतनो ऽपि तत्सम्बन्धी भवतीत्यर्थः॥

(ப - ரை) **तत्र**=அந்தத்தேவன், மனுஷ்யன் முதலிய சரீரங் களில் **पुरुषः**=லிங்கசரீரத்துடன்கூடிய **चेतनः**=புருஷன் **लिङ्गस्य**= லிங்க சரீரத்திலும் **अविनिवृत्तेः**=பேதக்ஞான முண்டாகாதபடி யால் அல்லது **आविनिवृत्तेः**=லிங்கசரீரம் தொலையுமட்வரையில் **जरा-रणकृतम्**=ஜராமரணங்களால் ஏற்பட்ட **दुःखम्**=துக்கத்தை **प्राप्नो-ते**=அடைகிறான். **तस्मात्**=ஆகையால் **सर्गः**=சிருஷ்டி **स्वभावेन**= இயற்கையில் **दुःखम्**=துக்கசாதனமாக இருக்கின்றது.

(தா - பம்) பிராணிகள் பலவிதமாயும், விசித்திரமாயிருக் கின்ற ஆனந்தானுபவமுள்ளவர்களாயு மிருக்கின்றனராயினும் எல்லாப்பிராணிகளுக்கும் ஜனன (கிழத்தன்மை) இறப்பு இவற் றால் ஏற்படுகின்ற துக்கம் ஸாமான்யவிதமாக இருக்கின்றது. பூழுவுக் குக் கூட 'நாம் இறந்துவிடக்கூடாது' என்று மரணத்தில் பய மிருக்கின்றது. அவ்விதம் பயமுண்டாவதற்கு துக்கமே காரண மாவதால் மரணம் துக்கமாக ஆகின்றது. சங்கை—துக்கம் முத லியவைகள் பிரகிருதியின் விகாரமாயும்; புத்தியின் குணமாயுமி ருக்கின்றன. அவை எவ்விதம் சேதனனைச் சம்பந்தித்தவைகளா கின்றன? என்றால், உத்தரம்—பதிலளிக்கிறார்—**पुरुष इति। पूः** எனப் படும் லிங்கசரீரத்தில் **उष** வஸிப்பவனாக புருஷனாகின்றான். லிங்க சரீரமோ துக்கத்தின் ஸம்பந்தமுள்ளதாக இருக்கின்றது. அந்த லிங்கசரீரத்தின் ஸம்பந்தம் பெற்றிருப்பதால் சேதனனும் துக்கஸம்பந்தம் பெற்றவனாக ஆகின்றான். லிங்கசரீர ஸம்பந்த மிருந்தபோதிலும் அதிலிருக்கின்ற துக்காதிகள் புருஷனிடம்

कुतः पुनर्लिङ्गसम्बन्धि दुःखं पुरुषस्य चेतनस्येत्यत आह—"लिङ्गस्याविनिवृत्तेः"—पुरुषाद्वैदाग्रहालिङ्गधर्मानात्मन्यध्यवस्यति पुरुषः। अथवा दुःखप्राप्ताववधिराङा कथ्यते, लिङ्गम् यावन्न निवर्तते तावदिति ॥ ५५ ॥

उक्तस्य सर्गस्य कारणविप्रतिपत्तीर्निराकरोति—

इत्येष प्रकृतिकृतो महदादिविशेषभूतपर्यन्तः ।
प्रतिपुरुषविमोक्षार्थं स्वार्थ इव परार्थ आरम्भः ॥ ५६ ॥

"इत्येष" इति। आरभ्यते इति "आरम्भः" सर्गः महदादिभूम्यन्तः प्रकृत्यैव कृतो नेश्वरेण, न ब्रह्मोपादानो, नाप्यकारणः। आकरणत्वे ह्यत्यन्ता-

---

எவ்விதம் ஸம்பவிக்கின்றவென்றால் சொல்லுகிறார்—**लिङ्गस्याविनिवृत्तेरिति**। புருஷன் வேறு, லிங்க சரீரம் வேறு என்ற பேதக் ஞான மேற்படாததால் லிங்கசரீரத்தைச் சேர்ந்த லோகதுக்காதி களைத் தன்னிட முள்ளதாய்ப் புருஷன் கருதுகிறான். **लिङ्गस्याऽऽविनिवृत्तेः** என்றதற்கு வேறுவிதமாக வியாக்யானஞ் செய்கின்றார். **लिङ्गस्य, आविनिवृत्तेः** என்று பிரித்துக்கொண்டு லிங்க சரீரம் எவ்வளவு காலம் வரை விலகாமலிருக்கின்றதோ அது வரையில் இந்த துக்காநுபவம் புருஷனுக்கு உண்டாகிக்கொண்டிருக்கும். (எ—று)

(56) (அ - கை) மேற் சொல்லிய சிருஷ்டியுண்டாவதற்குக் காரணம் யாது என்ற விஷயத்திலிருக்கின்ற வாதிகளின் கக்ஷி களை நிராகரணஞ் செய்கிறார்—

(ப — ரை) **महदादिविशेषभूतपर्यन्तः**—**महदादिविशेष** = மஹத் அஹங்காரம் முதலிய விசேஷங்கள் தொடங்கி **भूतपर्यन्तः** = ஐந்து பூதம் முடிவாகவுள்ள **इत्येषः** = மேற்சொல்லிய **आरंभः** = சிருஷ்டி **प्रतिपुरुषविमोक्षार्थम्** = ஒவ்வொரு புருஷனும் முக்தியைப் பெறுவதற்காக **स्वार्थ इव** = தனக்காகப்போல **परार्थे** = பிறருக்காக **प्रकृतिकृतः** = பிரகிருதியால் ஏற்படுத்தப்பட்டது.

(க - ட்) ஜகத்சிருஷ்டியானது பிரகிருதியால் செய்யப்பட்டதே தவிர ஈசுவரனால் செய்யப்பட்டதல்ல. ஜகத் சிருஷ்டி

भावो ऽत्यन्तभावो वा स्यात्। न ब्रह्मोपादानः, चितिशक्तेरपरिणामात्। नेश्वराधिष्ठितप्रकृतिकृतः निर्व्यापारस्याधिष्ठातृत्वासम्भवात्। न हि निर्व्यापारस्तक्षा वास्याद्यधितिष्ठति ॥

ननु प्रकृतिकृतश्चेत्, तस्या नित्यायाः प्रवृत्तिशीलाया अनुपरमात् सदैव सर्गः स्यादिति न कश्चिन्मुच्येतेत्यत आह—"प्रतिपुरुषविमोक्षार्थं स्वार्थ इव पारार्थं आरम्भः" इति। यथौदनकाम ओदनाय पाके प्रवृत्तः, ओदनसिद्धौ निवर्तते,—एवं प्रत्येकं पुरुषान् मोचयितुं प्रवृत्ता प्रकृतिः यं पुरुषं मोचयति तं प्रति पुनर्न प्रवर्तते, तदिदमाह स्वार्थ इवेति। स्वार्थे यथा तथा परार्थ आरम्भ इत्यर्थः ॥ ५६ ॥

க்குப் பிரும்மம் உபாதானகாரணமாயாவதில்லை. காரணமின்றியே ஜகத்சிருஷ்டி ஏற்படுகின்றது என்றும் சொல்லமுடியாது. ஜகத்சிருஷ்டிக்குகாரணம் எதுவும் தேவையில்லையாகில் ஜகத்சிருஷ்டி என்பது எப்பொழுதும் இல்லாததாகவோ, அல்லது எப்பொழுது மிருக்கின்றதாகவோ ஆகவேண்டிவரும். பிரும்மமும் ஜகத்திற்கு உபாதான காரணமாயாவதில்லை. ஏனென்றால் சைதன்யரூபமான பிரும்மத்திற்கு பரிணமம் (மாறுதல்) ஸம்பவிக்காது. ஈசுவரனல் தூண்டப்பட்டப் பிரகிருதியால் ஜகத்சிருஷ்டி ஏற்படுகின்றது என்பதும் பொருந்தாது. ஏனென்றால் ஈசுவரனே கிரியையற்றவன் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது; அவ்விதம் கிரியையற்றவன் அதிஷ்டாதாவாக (தூண்டுகிறவனாக) ஆகிறான் என்பது பொருந்தாதென்பது பற்றியே என்க. கிரியையற்ற தச்சனைப்பார்த்து இவன் வாச்சியைத் தூண்டுகிறான் என்று வியவஹரிக்கின்றோமா? இல்லை. அவ்விதமே இங்கு மறியவேண்டும். சங்கை—ஜகத்சிருஷ்டியானது பிரகிருதியால் செய்யப்படுகின்றது என்று அங்கீகரித்தால் நித்தியமாயும், பிரவிருத்தியையே சுபாவமாயுடையதாயுமிருக்கிற பிரகிருதியானது ஒருபொழுதும் ஓழிவையடையாதாகையால் சிருஷ்டி எப்பொழுதும் ஏற்பட்டுக் கொண்டிருக்குமாதல்பற்றி

स्यादेतत्—स्वार्थं परार्थं वा चेतनः प्रवर्तते । न च प्रकृतिरचेतनैवं भवितुमर्हति, तस्मादस्ति प्रकृतेरधिष्ठाता चेतनः । न च क्षेत्रज्ञाश्चेतना अपि प्रकृतिमधिष्ठातुमर्हन्ति, तेषां प्रकृतिस्वरूपानभिज्ञत्वात् । तस्मादस्ति सर्वार्थदर्शी प्रकृतेरधिष्ठाता, स चेश्वरः—इत्यत आह—

वत्सविवृद्धिनिमित्तं क्षीरस्य यथा प्रवृत्तिरज्ञस्य ।
पुरुषविमोक्षनिमित्तं तथा प्रवृत्तिः प्रधानस्य ॥ ५७ ॥

ஒருவனும் மோக்ஷத்தை யடையமாட்டான் எனின்? உத்தரம்—பதிலளிக்கிறார்—**प्रतिपुरुषविमोक्षार्थं स्वार्थ इवपरार्थ आरंभः इति** । அன்னத்தில் விருப்பமுள்ளவன் அன்னங்கிடைப்பதற்காகச்சமையல் செய்வதில் பிரவிருத்திக்கிறான். அன்னங்கிட்டியவுடன் அந்தச் சமையல் என்ற வியாபாரத்தினின்றும் ஒழிவை அடைந்துவிடுகிறான் இது எவ்விதமோ அவ்விதமே ஒவ்வொரு புருஷனையும் முக்தனாகச்செய்வதற்காகப் பிரவிருத்தித்தப் பிரகிருதியும் எந்தப் புருஷனை முக்தனாக்குகின்றதோ அவன் விஷயத்தில் மறுபடியும் பிரவிருத்திப்பதில்லை. இதுவே **स्वार्थ इव** என்றதால் சொல்லப்படுகின்றது. தனது காரியம் சித்திபெறுவதற்காக லோகத்தில் புருஷன் பிரவிருத்திப்பதுபோல் பிறருடைய காரியம் சித்திபெறுவதற்காக இந்தப் பிரகிருதி பிரவிருத்திக்கின்றது.

(அ-னை) சங்கை—சேதனனுயிருப்பவன் (அறிவுள்ளவன்) தனக்காகவோ, பிறருக்காகவோ பிரவிருத்திக்கிறான் என்பது பொருந்தும். அசேதனமான பிரகிருதியானது பிறருக்காக இவ்விதப் பிரவிருத்திக்கின்றது என்பது சம்பவிக்காது. ஆகையால் பிரகிருதிக்கு அதிஷ்டாதாவான (தாண்டுகிறவன்) சேதனனொருவனிருக்கின்றான் என்று அங்கீகரிக்கவேண்டும். அந்தச் சேதன் ஜீவன்தான் என்று சொல்லமுடியாது. ஏனென்றால் ஜீவர்கள் பிரகிருதியின் ஸ்வரூபத்தை யறியாதவர்களா யிருக்கின்றனர் என்பது பற்றியே என்க. ஆனதுபற்றி ஸகல ஸம்சாரங்களையும் நேரில் பார்க்கின்றவனும், பிரகிருதியைத் தாண்டுகிறவனுமான ஓர் விஜாதீய சேதனனிருக்கின்றான். அவனே ஈசுவரன் எனப்படுவன் எனின்? உத்தரம்—பதிலளிக்கிறார்.—

"वत्सविवृद्धिनिमित्तम्" इति। दृष्टं अचेतनमपि प्रयोजनं प्रति प्रवर्तमानम्, यथा वत्सविवृद्ध्यर्थं क्षीरमचेतनं प्रवर्तते। एवं प्रकृतिरचेतना ऽपि पुरुषविमोक्षणाय प्रवर्तिष्यते ॥

न च—'क्षीरप्रवृत्तेरपीश्वराधिष्ठाननिबन्धनत्वेन साध्यत्वान्न साध्यव्यभिचार'—इति, सांप्रतम्। प्रेक्षावतः प्रवृत्तेः स्वार्थकारुण्याभ्यां व्याप्तत्वात्।

(ப - ரை) **अज्ञस्य**=அசேதனமான **क्षीरस्य**=பாலுக்கு **वत्सविवृद्धिनिमित्तम्**=*கன்று வளர்வதற்காக **प्रवृत्तिः**=வியாபாரம் **यथा**=எவ்விதம் **जायते**=உண்டாகின்றதோ **तथा**=அவ்விதமே **पुरुषविमोक्षनिमित्तम्**=ஒவ்வொரு புருஷனும் மோக்ஷத்தை யடைவதற்காக **प्रधानस्य**=பிரகிருதிக்கு **प्रवृत्तिः**=வியாபாரம் **जायते**=ஏற்படுகின்றது.

(தா - ம்) அசேதனமான வஸ்துவும் பிரயோஜனத்தை யுத்தேசித்துப் பிரவிருத்தியையடைவதாகக் கண்டிருக்கிறோம். உதாஹரணம்—கன்று வளர்வதற்காக அசேதனமான க்ஷீரம் வியாபாரத்தை யடைகின்றது. அவ்விதமே அசேதனமான பிரகிருதியும் புருஷனுக்கு மோக்ஷம் என்ற நிலை ஏற்படுவதற்காகப் பிரவிருத்தியை யடைகின்றது. சங்கை—பசுவின் பாலினிடமுண்டாகின்ற உத்பத்தி என்ற வியாபாரமும், ஈசுவரனால் தாண்டப்பட்டேயுண்டாவதாயங்கீகரிப்பதால் †சாத்யவியபிசாரமில்லை என்று சொல்லக்கூடாதோ வெனின்? உத்தரம்—அது சரியல்ல. ஏனெ

---

* பசு கன்றுபோடுவதற்குமுன் பாலற்றிருந்தபோதிலும், கன்று போட்டவுடன் அதனிடம் பாலுண்டாகின்ற தென்பதை நாம் அனுபவத்திற்கண்டிருக்கிறோம். அவ்விதம் பால் தாளுகவே உண்டாவதற்குக்காரணம் கன்று பாலில்லாவிடில் வளராதென்பதே. ஆகவே அசேதனமான பால் என்ற வஸ்துவினிடம் கன்று வளர்தல் என்ற பிரயோஜனத்திற்காக விருத்தியடைதல் என்ற வியாபாரமுண்டாவது யாவர்க்கும் பிரசித்தமாக இருக்கின்றது. அது இங்கு திருஷ்டாந்தமாகக் கூறப்படுகிறது.

† **प्रवृत्तित्वम्** என்பது ஹேது **(ईश्वररूप)चेतनाधिष्ठितत्वम्** சாத்யம் **चेतनाधिष्ठितत्वम्** என்ற சாத்யமில்லாத விடத்தில் **प्रवृत्तित्वम्** என்ற ஹேதுவிருக்குமாதலால் வியபிசாரம் என்ற தோஷம் ஸம்பவிக்கும். க்ஷீரத்

ते च जगत्सर्गाद्यावर्तमाने प्रेक्षावत्प्रवृत्तिपूर्वकत्वमपि व्यावर्तयतः । न ह्यवाप्तसकलेप्सितस्य भगवतो जगत् सृजतः किमप्यभिलषितं भवति । नापि कारुण्यादस्य सर्गे प्रवृत्तिः, प्राक् सर्गाज्जीवानामिन्द्रियशरीरविषयानुत्पत्तौ दुःखाभावेन कस्य प्रहाणेच्छा कारुण्यम् ? सर्गोत्तरकालं दुःखिनो ऽवलोक्य कारुण्याभ्युपगमे, दुरुत्तरमितरेतराश्रयत्वन्दूषणम्,—कारुण्येन सृष्टिः, सृष्ट्या च कारुण्यमिति । अपि च करुणया प्रेरित ईश्वरः सुखिन एव जन्तून् सृजेन्न

னில் நன்கறிந்தவனின் பிரவிருத்தியானது தனது பிரயோஜனத்துடனே காருண்யத்துடனே வியாப்தியுள்ளதாயிருக்கும் என்பது பற்றியே என்க. அதாவது—ஈசனனின் பிரவிருத்தியானது தனது பிரயோஜனத்தை முன்னிட்டதாகவோ, காருண்யத்தால் ஏற்பட்டதாகவோ இருக்கின்றது என்பதேயாம். இவ்விரண்டும் ஜகத்சிருஷ்டியில் ஸம்பவிக்காதாகையால் ஈசனுடைய பிரவிருத்தியை முன்னிட்டிருத்தலையும் விலக்கி விடுகின்றன. அடையவேண்டிய பொருள்கள் யாவையுமடைந்தவராயும், நிறைந்த வீர்யம், நிறைந்த கீர்த்தி, நிறைந்த சம்பத்து, நிறைந்த ஞானம், நிறைந்த விக்ஞானம் இவையுள்ளவராயு மிருக்கிற ஈசுவரனுக்கு ஜகத்தைப் படைத்து அதனாலடையவேண்டிய பயன் ஏதாகிலும் சம்பவிக்குமா! சம்பவிக்காது. ஆனதுபற்றியே ஈசுவரன் ஜகத்தைப் படைப்பதற்குத் தனது கார்யசித்தி என்பது நிமித்தமாகாது. தனையிளைல் ஈசுவரன் ஜகத்சிருஷ்டியில் பிரவிருத்திக்கிறான் என்பதும் பொருந்தாது. எனெனில் துக்கமடைந்தப் பிராணியைக்கண்டு அப்பிராணியின் துக்கத்தை விலக்குவதில் விருப்பமே "காருண்யம்" எனப்படும். சிருஷ்டி ஏற்படுவதற்குமுன் ஜீவர்கட்குத் துக்கத்திற்குச் சாதனமான இந்திரியம், சரீரம், விஷயம் முதலியன வுண்டாகாதபடியால் துக்கமே சம்பவிக்காதானதுபற்றி எந்தத் துக்கத்தைப் போக்கவேண்டுமென்ற இச்சாரூபமான காருண்யம் ஈசுவரனுக்குச் சம்பவிக்கும்.

தின் பிரவிருத்தியும் ஈசுவரனல் தூண்டப்பட்டே ஏற்படுவதால் அங்கும் சேதனதிஷ்டிதத்வம் என்ற சாத்யமிருக்கிறது. ஆதலால்வியபிசாரமில்லை.

विचित्रान्। 'कर्मवैचित्र्याद्वैचित्र्यम्' इति चेत्, कृतमस्य प्रक्षोवतः कर्माधिष्ठानेन, तदनधिष्ठानमात्रादेवाचेतनत्यापि कर्मणः प्रवृत्त्युपपत्तेः तत्कार्यशरीरेन्द्रियविषयानुत्पत्तौ दुःखानुत्पत्तेरपि सुकरत्वात् ॥

प्रकृतेस्त्वचेतनायाः प्रवृत्तेर्न स्वार्थानुग्रहो न वा कारुण्यं प्रयोजकमिति नोक्तदोषप्रसङ्गावतारः। पारार्थ्यमावन्तु प्रयोजकमुपपद्यते। तस्मात् सुष्ठूक्तम्—"वत्सविवृद्धिनिमित्तम्" इति ॥ ९७ ॥

சிருஷ்டி ஏற்பட்டபிறகு துக்கமுள்ளப் பிராணிகளைப் பார்த்து தயையுண்டாகின்றதென அங்கீகரித்தால்—கருணையால் சிருஷ்டி, சிருஷ்டியால் காருண்யம்—என்ற அன்யோன்யாச்ரய தோஷம் சம்பவிக்கும்.

மேலும் கருணையால் தூண்டப்பட்டு ஈசுவரன் ஜகத்தைப் படைப்பானுகில் எல்லாப் பிராணிகளையும் சுகமுள்ளவர்களாய்ப் படைப்பரே யல்லாது விசித்திரமாய்ப் படைக்கமாட்டார். அந்தந்த ஜீவர்களின் கர்ம வைசித்திரியத்தால் ஜகத்சிருஷ்டியிலும் வைசித்திரியம் ஏற்படுகின்றதெனில், கர்ம சஹாயனை ஈசுவரன் வேண்டுவதில்லை; ஈசுவர ஸஹாயமற்ற கர்மாவிலேயே அசேதனமான பிரகிருதிக்கும் பிரவிருத்தி ஏற்படலாம். மேலும் பிரகிருதியின் கார்யமான சரீரம், இந்திரியம், விஷயம் முதலியன ஏற்படாவிடில் துக்கமுமுண்டாவதில்லை என்றும் ஸாதித்து விடலாம். ஆகையால் ஈசுவரன் ஒருவன் வேண்டியதில்லை. பிரகிருதி அசேதனமாயிருப்பதால் அதனிடமுண்டாகின்ற பிரவிருத்திக்கு தனதுகார்யஸித்தியோ, காருண்யமோ காரணமாயாவதில்லையானதுபற்றி ஈசுவரப்பிரவிருத்தியில் கூறப்பட்ட தோஷங்கள் சம்பவிக்காது. பாரார்த்யம் (மற்றவனின் பிரயோஜனத்திற்காக ஏற்பட்டிருத்தல்) என்பது மட்டும் பிரகிருதியின் பிரவிருத்திக்குக் காரணமாக ஏற்படலாம். ஆகையால் **वत्सविवृद्धिनिमित्तम्** என்றதாற் சொல்லியது மிக்க பொருத்தமுள்ளதாகவே இருக்கின்றது. (எ-று)

"स्वार्थ इव" इति दृष्टान्तितम्" । (कारिका ५६) तद्विभजते—

औत्सुक्यनिवृत्त्यर्थं यथा क्रियासु प्रवर्तते लोकः ।
पुरुषस्य विमोक्षार्थं प्रवर्तते तद्वदव्यक्तम् ॥ ५८ ॥

"औत्सुक्य—" इति । औत्सुक्यमिच्छा, सा खल्विष्यमाणप्राप्तौ निवर्तते । इष्यमाणश्च स्वार्थः, इष्टलक्षणत्वात् फलस्य । दार्ष्टान्तिके योजयति—"पुरुषस्य विमोक्षार्थंप्रवर्तते तद्वदव्यक्तम्" इति ॥ ५८ ॥

ननु भवतु पुरुषार्थः प्रकृतेः प्रवर्तकः, निवृत्तिस्तु कुतस्त्या प्रकृतेः? इत्यत आह—

---

58 (அ - கை) **स्वार्थइव** என்று திருஷ்டாந்தமாகக் கூறப்பட்டது. அதைப்பிரித்து உபதேசிக்கிறார்—

(ப - ரை) **औत्सुक्यनिवृत्यर्थम्**=ஆசை விலகுவதற்காக **लोकः**=ஜனம் **यथा**=எவ்விதம் **क्रियासु**=காரியங்களில் **प्रवर्तते**=பிரவிருத்திக்கின்றதோ **तद्वत्**=அவ்விதமே **अव्यक्तम्**=பிரகிருதி **पुरुषस्य**=புருஷனுக்கு **विमोक्षार्थम्**=மோக்ஷம் மேற்படுவதற்காக **प्रवर्तते**=பிரவிருத்திக்கின்றது.

(கா - ம்) ஆசையானது விரும்பிய பொருள் கிடைத்தவுடன் நிவிருத்தியடைகின்றது. எது விரும்பப்படுகிறதோ அதுவே 'ஸ்வார்த்தம்' எனப்படும். ஆகவே ஜனங்கள் எவ்விதம் தனது கார்யஸித்திக்காக முயற்சிக்கின்றனவோ அவ்விதமே பிரகிருதியும் பரார்த்தமான மோக்ஷத்தையே தனது கார்யமாகக் கருதிப் பிரவிருத்திக்கின்றது. மோக்ஷம் ஏற்பட்டவுடன் ஒழிவையடைந்து விடுகின்றது. (எ-று)

59 (அ - கை) சங்கை—புருஷார்த்தம் பிரகிருதிக்குப் பிரவிருத்தியை யுண்டுபண்ணுவதாக இருக்கட்டும். ஆயினும் பிரகிருதிக்கு நிவிருத்தி எதனால் ஏற்படுகின்றது? உத்தரம்—பதிலளிக்கிறார்.—

रङ्गस्य दर्शयित्वा निवर्तते नर्तकी यथा नृत्यात् ।
पुरुषस्य तथा ऽऽत्मानं प्रकाश्य विनिवर्तते प्रकृतिः ॥ ५९ ॥

"रङ्गस्य" इति, स्थानेन स्थानिनः पारिषदानुपलक्षयति । 'आत्मानम्' शब्दाद्यात्मना पुरुषाद्भेदेन च प्रकाश्येत्यर्थः ॥ ५९ ॥

स्यादेतत्—'प्रवर्ततां प्रकृतिः पुरुषार्थम् । पुरुषादुपकृतात्प्रकृतिर्लप्स्यते कञ्चिदुपकारम्, आज्ञासम्पादनाराधितादिवाज्ञापयितुर्भुजिष्या । तथा च न परार्थो ऽस्या आरम्भः'—इत्यत आह—

नानाविधैरुपायैरुपकारिण्यनुपकारिणः पुंसः ।
गुणवत्यगुणस्य सतस्तस्यार्थमपार्थकञ्चरति ॥ ६० ॥

(ப - ரை) **नर्तकी**=நர்த்தனஞ் செய்கின்ற ஸ்திரீயானவள் **रङ्गस्य**=சபையிலிருக்கின்ற புருஷர்கட்கு (**नृत्तम्**=நர்த்தனத்தை) **दर्शयित्वा**=காண்பித்துவிட்டு **यथा**=எவ்விதம் **नृत्यात्**=நர்த்தனத்தினின்றும் **निवर्तते**=நிவிருத்தியை யடைகின்றாளோ **तथा**=அவ்விதமே **प्रकृतिः**=பிரகிருதியானது **पुरुषस्य**=புருஷனுக்கு **आत्मानम्**=தன்னை **प्रकाश्य**=சப்தம் முதலிய பிரபஞ்சவடிவமாகவும், புருஷனிலும் வேறுபட்டதாகவும் காண்பித்து **विनिवर्तते**=ஓழிவை யடைகின்றது. தான்செய்யவேண்டிய பிரயோஜனத்தைச் செய்து முடித்துவிட்டபடியாலேயே பிரகிருதியானது விவேக ஸாக்ஷாத்காரமேற்பட்டவுடன் ஓழிவை யடைகின்றது என்று கருத்து.

60 (அ . கை) சங்கை—பிரகிருதியானது புருஷனுக்கு மோக்ஷ முண்டாவதற்காகப் பிரவிருத்தியை யடையட்டும். ஆயினும் ஆக்ஷேபப்படி நடந்ததால் திருப்தியை யடைந்த யஜமானனிடமிருந்து வேலைக்காரி யாதானும் பரிசுபெறுவதுபோல் பிரகிருதியானது தன்னால் உபகாரம் பெற்ற புருஷனிடமிருந்து யாதானு முபகாரத்தை யடையக்கூடும். ஆகவே பிரகிருதியின் பிரவிருத்தி பாரார்த்தமல்ல, எனின் ? உத்தரம்—பதிலளிக்கிறார்—

(ப - ரை) **अनुपकारिणः**=பதிலுபகாரஞ் செய்யாத **पुंसः**=புரு

"नाना-" इति। यथा गुणवान् उपकार्यपि भृत्यो निर्गुणे ऽतएव अनुपकारिणि स्वामिनि निष्फलाराधनः, एवमियम्प्रकृतिस्तपस्विनी गुणवती उपकारिणी अनुपकारिणि पुरुषे व्यर्थपरिश्रमेति पुरुषार्थमेव यतते न स्वार्थमिति सिद्धम् ॥ ६० ॥

स्यादेतत्—'नर्तकी नृत्यम्परिषद्भ्यो दर्शयित्वा निवृत्ता ऽपि पुनस्त-द्दृष्टकौतूहलात् प्रवर्तते यथा, तथा प्रकृतिरपि पुरुषायात्मानं दर्शयित्वा निवृत्ता ऽपि पुनः प्रवर्त्स्यति'—इत्यत आह—

ஷஷ்டிக்கு **नानाविधैः**=பலவிதமான **उपायैः**=ஸாதனங்களால் **उपकारिणी**=நன்மையைச்செய்கின்றதும், **अगुणस्य**=குணமற்றவனுப் **सतः**=இருக்கின்ற புருஷன் விஷயத்தில் **गुणवती**=நல்லகுண முள்ளதாய் நடக்கின்றதுமான பிரகிருதி **तस्यार्थम्**=அந்தப்புருஷனின் பிரயோஜனத்திற்காக **अपार्थकम्** = தனக்கு எவ்விதப் பிரயோஜனமுமின்றி **चरति**=பிரவிருத்திக்கின்றது.

(கா - ம்) ஓர் நேகவன் நல்லகுண முள்ளவனுயினும், யஜமானனுக்குப் பல விதமான நன்மைகளைச் செய்கின்றவனுயினும், குணமற்றவனும், ஆனது பற்றியே பதிலுபகாரம் செய்யாதவனுமான யஜமானன் விஷயத்தில் எவ்விதம் பயனற்ற ஸேவையை (முயற்சியை) யுடையவனுயாவனே அவ்விதமே யாவரும் பார்த்துத் தக்கிக்கக்கூடிய நிலையிலுள்ள இந்தப்பிரகிருதியானது, நல்லகுணம், பிறருக்குபகரித்தல் இவையுள்ளதாயினும், பதிலுபகாரத்தைச் செய்யாத புருஷன் விஷயத்தில் பயனற்றகாரம முள்ளதாகவே ஆகின்றது. ஆகவே பிரகிருதி, புருஷனின் பிரயோஜனத்தை யுத்தேசித்தே முயற்சிக்கின்றது; தனது பிரயோஜனம் யாதுமில்லை என்று அறியவேண்டும். (எ - று)

61 (அ - கை) நர்த்தனஞ் செய்கின்ற பெண்மணி நர்த்தனக்தை ஸபையிலுள்ளோருக்குக் காண்பித்துவிட்டுத்திரும்பியபோதிலும் மறுபடியும் அதைப் பார்க்கின்றவர்கள் விரும்பினுல் அவர்களது அவ்வார்தையை யனுஸரித்து நர்த்தனஞ் செய்வதில் பிரவிருத்திப்பது போலப் பிரகிருதியும் புருஷனுக்குத் தனது

प्रकृतेः सुकुमारतरन्न किञ्चिदस्तीति मे मतिर्भवति ।
या दृष्टा ऽस्मीति पुनर्न दर्शनमुपैति पुरुषस्य ॥ ६१ ॥

"प्रकृतेः" इति । सुकुमारतरता अतिपेशलता, परपुरुषदर्शनासहिष्णुतेति यावत्। असूर्यंपश्या हि कुलवधूः अतिमन्दाक्षमन्थरा प्रमादाद्विगलितसिचयाञ्चला चेदालोक्यते परपुरुषेण, तदा ऽसौ तथा प्रयतते, अप्रमत्तां यथैनां परपुरुषान्तराणि न पुनः पश्यन्ति, । एवंप्रकृतिरपि कुलवधूतो ऽप्यधिका दृष्टा विवेकेन न पुनर्द्रष्टव्यत इत्यर्थः ॥ ६१ ॥

ஸ்வரூபத்தைப் பிரகாசப் படுத்தித் திரும்பிய போதிலும் மறுபடியும் பிரவிருத்தியை யடையக்கூடும் என்று சங்கதஹித்துப் பதிலளிக்கிறார்—

(ப - ரை) **प्रकृतेः**=பிரகிருதியைக் காட்டிலும் **सुकुमारतरम्**=அன்யபுருஷனின் பார்வையைச் சஹிக்காதது **किञ्चित्**=எதுவும் **नास्तीति**=இல்லை என்ற **मतिः**=புத்தியானது **मे**=எனக்கு **भवति**=உண்டாகின்றது. (**हि**=எனென்றால்) **या**=எந்தப் பிரகிருதியானது **दृष्टास्मि**=(அன்ய புருஷரால்) பார்க்கப் பட்டவளாக இருக்கின்றேன் **इति**=என்ற காரணத்தால் **पुनः**=மறுபடியும் **पुरुषस्य**=புருஷனுடைய **दर्शनम्**=பார்வையை **नोपैति**=அடைகிறதில்லையோ.

(தா - ம்) ஸூர்யனைக் கூடக் கண்ணெடுத்துப்பார்க்காதவரும், மிகுந்த வெட்க முள்ளவருமான குலஸ்திரீயானவள், தவறுதலால் கொஞ்சம் நழுவின வஸ்திரத்தை யுடையவளாயிருக்கும் பொழுது அன்ய புருஷரால் பார்க்கப் படுவாளேயாகில் அப்பொழுது அவள் எவ்விதம் மறுபடியும் கவனக்குறைவை யடையாமலிருப்பதற்கும், பரபுருஷன் தன்னைப்பார்க்காமலிருப்பதற்கும் முயற்சி செய்வாளோ அவ்விதமே குலஸ்திரீயினும் மேன்மை தங்கியப் பிரகிருதியானது புருஷனினும் வெறு பட்டதாய் பார்க்கப்படுமேயாகில் மறுபடியும் தன்னை அவ்விதம் பார்க்கும் படியான நிலையில் வைத்துக் கொள்வதில்லை. ஆகையால் விவேக சாக்ஷாத் காரமேற்பட்ட பிறகு பிரகிருதியானது சேஷ்டிக்கிறதில்லை. (எ - று)

स्यादेतत्—"पुरुषश्चेदगुणो ऽपरिणामी, कथमस्य मोक्षः ? मुचेर्बन्धनविश्लेषार्थत्वात्, सवासनक्लेशकर्माशयानाञ्च बन्धनसमाख्यानां पुरुषे ऽपरिणामिन्यसम्भवात्। अत एवास्य च पुरुषस्य न संसारः प्रेत्यभावापरनामाऽस्ति, निष्क्रियत्वात्। तस्मात् 'पुरुषविमोक्षार्थम्' इति रिक्तं वचः" इतीमां शङ्कामुपसंहारव्याजेनाभ्युपगच्छन्नपाकरोति ॥

तस्मान्न बध्यते ऽद्धा न मुच्यते नापि संसरति कश्चित् ।
संसरति बध्यते मुच्यते च नानाश्रया प्रकृतिः ॥ ६२ ॥

---

62 (அ - கை) சங்கை—புருஷன் என்பவன் குணமற்றவனும், பரிணமமற்றவனுமிருப்பானுகில் அவனுக்கு 'மோக்ஷம்' என்பது எங்ஙனம்? **मुच्** என்ற தாதுவிற்கோ பந்தத்தை (கட்டை) அவிழ்த்துவிடுதல் என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது. பந்தம் எனப்படும் வாஸனையுடன் கூடிய அவித்யை அஸ்மிதை முதலியவைகளும், புண்ணியபாபகர்மங்களும் சித்தத்திலிருக்கின்ற ஸம்ஸ்காரங்களும் பரிணமமற்ற புருஷனிடமோ சம்பவிக்காது. ஆகலால் புருஷன் மோக்ஷத்தை யடைகிறான் என்பது எங்ஙனம் பொருந்தும். புருஷன் குணமற்றிருப்பதுபற்றி கிரியை பற்றிருப்பதால் பிரேத்யபாவம் எனப்படும் ஸம்ஸாரமும் ஸம்பவிக்காது. ஆகையால் **पुरुषविमोक्षार्थम्** (புருஷன் மோக்ஷத்தையடைவதற்காக) என்று கூறியதற்கு அர்த்தமில்லை என்று ஸங்கேகரித்து அதை அங்கீகரித்துக் கொண்டு சாஸ்திரார்த்தத்தை முடிக்கல் என்ற வியாஜமாய் பதிலளிக்கிறார்—

(ப - ரை) **तस्मात्**=புருஷன் கர்மாதிகளற்றிருப்பதால் **कश्चित्**=ஒருவனும் **अद्धा**=உண்மையில் **नबध्यते**=பந்தத்தையடைவதில்லை **नमुच्यते**=மோக்ஷத்தை யடைவதில்லை. **नापिसंसरति**=ஜனனமரணத்தையுமடைவதில்லை. **प्रकृतिः**=பிரகிருதிதான் **नानाश्रया**=அநேகவிதமாக இருந்துகொண்டு **संसरति** = ஜனனமரணங்களை யடைகின்றது. **बध्यते** = பந்தத்தை யடைகின்றது. **मुच्यतेच** = மோக்ஷத்தையுமடைகின்றது.

"तस्मात्" इति। अद्धा न कश्चित् पुरुषो बध्यते, न कश्चित् संसरति, न कश्चिन्मुच्यते। प्रकृतिरेव तु नानाश्रया सती बध्यते संसरति मुच्यते चेति बन्धमोक्षसंसाराः पुरुषेषूपचर्यन्ते। यथा जयपराजयौ भृत्यगतावपि स्वामि न्युपचर्यते, तदाश्रयेण भृत्यानान्तद्भागित्वात् तत्फलस्य च शोकलाभादेः स्वामिनि सम्भवात् भोगापवर्गयोः प्रकृतिगतयोरपि विवेकाग्रहात् पुरुषसम्ब न्ध उपपादित इति सर्वंपुष्कलम्॥ ६२॥

नन्ववगतम् प्रकृतिगता बन्धसंसारापवर्गाः पुरुषे उपचर्यन्ते इति। किंसाधनाः पुनरेते प्रकृतेरित्यत आह—

(தா - ம்) உண்மையில் ஒருபுருஷனும் பந்தத்தையடைவதில்லை, ஒரு புருஷனும் ஜனனமரணங்களையடைவதில்லை, ஒரு புருஷனும் மோக்ஷத்தையடைவதில்லை, பிரகிருதிதான் உண்மையில் பலவிதமாகப் பிரிந்திருந்துகொண்டு பந்தத்தையடைகின்றது, ஜனனமரணங்களையடைகின்றது, மோக்ஷத்தைப்படைகின்றது. அவ்விதமிருந்தபோதிலும் பந்தம், மோக்ஷம், ஸம்ஸாரம் இவைகள் புருஷனுக்கேற்படுவதாய் வழங்கப்படுகின்றன. உதாஹரணம்—ஜயம் பராஜயம்: இவைகள் உண்மையில் வேலையாட்களிடமிருந்தபோதிலும் யஜமானனை யாச்ரயித்திருப்பது பற்றி வேலையாட்கள் ஜயபராஜயங்களையடைவதாலும், ஜயபராஜயத்தின் பலமான துக்கம், லாபம் இவைகளை முடிவில் யஜமானனே யடைவதாலும், எவ்விதம் யஜமானனிட மிருப்பனவாய் வியவஹரிக்கப் படுகின்றனவோ, அவ்விதமே பொகம் மோக்ஷம் இவைகள் பிரகிருதியினிட மிருந்தபோதிலும் விவேக க்ஞான மில்லாமையால் புருஷ ஸம்பந்தத்தையடைவதாய் வியவ ஹரிக்கப்படுகின்றன வென்பதை முன்னமே நிரூபணஞ் செய்திருக்கிறோம்.

63 (அ - கை) பிரகிருதியினிடமிருக்கின்ற பந்தம், ஸம்ஸாரம், மோக்ஷம் இவைகள் புருஷனிட மிருப்பன வாய் வியவஹரிக்கப்படுகின்றன என்று அறியப்பட்டது. பந்தம், ஸம்ஸா

रूपैः सप्तभिरेव तु बध्नात्यात्मानमात्मना प्रकृतिः ।
सैव च पुरुषार्थप्रति विमोचयत्येकरूपेण ॥ ६३ ॥

"रूपैः" इति । तत्त्वज्ञानवर्जं बध्नाति धर्मादिभिस्सप्तभी रूपैः भावैरिति । "पुरुषार्थंप्रति" भोगापवर्गप्रति "आत्मना ऽऽत्मानम्" एकरूपेण तत्त्व-ज्ञानेन विवेकख्यात्या विमोचयति, पुनर्भोगापवर्गौ न करोतीत्यर्थः ॥६३॥

अवगतमीदृशं तत्त्वम्, ततः किमित्यत आह—

एवन्तत्त्वाभ्यासान्नास्मि न मे नाहमित्यपरिशेषम् ।
अविपर्ययाद्विशुद्धं केवलमुत्पद्यते ज्ञानम् ॥ ६४ ॥

ரம், மோக்ஷம் இவைகள் பிரகிருதிக்கு எதை ஸாதனமாக வைத்துக்கொண்டு எற்படுகின்றன ? வென்றால் பதிலளிக்கிறார்.—

(ப - ரை) **प्रकृतिः** = பிரகிருதியானது **सप्तभिः**=எழுவிதமான **रूपैरेव**=தர்மம் முதலிய பாவங்களால் மட்டும், **आत्मना**=தன்னாலேயே **आत्मानम्**=தன்னை **बध्नाति**=கட்டிக்கொள்ளுகிறது. **सैवच**=அந்தப்பிரகிருதியே **एकरूपेण**=ஒரு பாவத்தால் (தத்வக்ஞானத்தால்) **पुरुषार्थंप्रति**=புருஷார்த்தமான மோக்ஷமுண்டாவதற்காக **आत्मानम्**=தன்னை **विमोचयति**=விடுவித்துக் கொள்ளுகிறது.

(தர்-ம்) தர்மம், அதர்மம், க்ஞானம், அக்ஞானம், வைராக்யம், அவைராக்யம், ஐசுவர்யம், அநைசுவர்யம் இவ்வெட்டும் **भाव** எனப்படும் என்றும், இவைகள் புத்தியின் தர்மங்கள் என்றும் சொல்லி இருக்கிறோம். இவற்றுள் ஞானம் என்றதைத் தவிர்த்து மற்ற எழுவிதமான பாவங்களால் பிரகிருதியானது தன்னைப்பந்தப் படுத்திக்கொள்ளுகிறது. அதாவது பிரகிருதி புருஷ விவேகம் என்ற தத்வக்ஞானம் ஏற்பட்டுவிட்டால் பிரகிருதியானது மறுபடியும் போகம் மோக்ஷம் இவைகளைச் செய்வதில்லை. (எ - று)

64. (அ – கை) மேல் நிரூபணஞ் செய்தப்பிரகாரம் தத்துவங்கள் அறியப்பட்டும் ; அதனால் என்ன ஏற்படுகின்றது என்றால் பதிலளிக்கிறார்—

"एवम्" इति । तत्त्वेन विषयेण तत्त्वज्ञानमुपलक्षयति । उक्तरूपप्रकारतत्त्व-विषयज्ञानाभ्यासादादरनैरन्तर्यदीर्घकालसेवितात् सत्त्वपुरुषान्यतासाक्षात्कारिज्ञानमुत्पद्यते । यद्विषयश्चाभ्यासस्तद्विषयकमेव साक्षात्कारमुपजनयति,—तत्त्वविषयश्चाभ्यास इति तत्त्वसाक्षात्कारं जनयति । अत उक्तम् 'विशुद्धम्' इति ॥

कुतो विशुद्धमित्यत आह—"अविपर्ययात्" इति । संशयविपर्ययौ हि ज्ञानस्य अविशुद्धी, तद्रहितं विशुद्धम्, तदिदमुक्तम्—"अविपर्ययात्" इति ।

(ப - பை) **एवम्**=இவ்விதம் **तत्वाभ्यासात्**=தத்வக்ஞானத்தின் ஆவிருத்தியால் **नास्मि**=என்னிடம் எவ்விதக்கிரியையுமில்லை **नाहम्**=நான் கர்த்தாவல்ல, **नमे**=நான் அவற்றின் பலத்தையனுபவிப்பவனல்லன் **इति**=என்ற வடிவமுள்ளதாயும், **अविपर्ययात्**=ஸம்சயம், விபர்யயம் இவற்றின் தர்மமில்லாமையால் **विशुद्धम्**=தோஷமற்றதாயும், **केवलम्**=மித்தியாக்ஞான ஸம்பந்தமற்றதாயும் **अपरिशेषम्**=அறியப்படாதவஸ்து வற்றதாயுமிருக்கிற **ज्ञानम्** = பிரகிருதி புருஷ ஸாக்ஷாத்காரம் என்ற க்ஞானம் **उत्पद्यते**=உண்டாகின்றது.

(தா - ம்) விஷயத்தைக் குறிக்கின்ற **तत्व** என்றபதம் தத்வக்ஞானத்தை கௌணீ என்ற விருத்தியால் கூறிப்பிடுவதாகக் கொள்ளவேண்டும். மேற் சொல்லியப்பிரகாரமுள்ளதும், தத்வத்தை விஷயீகரிக்கின்றதுமான ஞானத்தை அப்யாசஞ் செய்வதால்-மேற்சொல்லிய க்ஞானத்தை ஆதரவுடனும் (ஊக்கத்துடனும்) இடைவிடாமலும் வெகுகாலமும் பழக்கிவருவதால்—பிரகிருதி புருஷ பேதத்தைச் சாக்ஷாத்கரிக்கின்ற க்ஞானமுண்டாகின்றது. அப்யஸிக்கப்படுகின்றக் ஞானம் எதை விஷயீகரிக்கின்றதோ அதை விஷயீகரித்த ஸாக்ஷாத்காரத்தையே மேற்சொன்ன அப்யாஸம் ஏற்படுத்தும். அப்யஸிக்கப்படுகின்றக் ஞானம் தத்துவத்தை விஷயீகரிப்பதால் அது தத்துவஸாக்ஷாத்காரத்தையே உண்டுபண்ணுகிறது. இவ்வபிப்ராயத்தை மேற்கொண்டே **विशुद्धम्** என்றபதம் போடப்பட்டிருக்கிறது. தத்துவ ஸாக்ஷாத்காரம் தோஷமற்ற தென்பது எங்ஙனம்? எனின், பதிலளிக்

नियतमनियततया गृह्णन् संशयोऽपि विपर्ययः, तेन 'अविपर्ययात्' इति संशयविपर्ययाभावो दर्शितः। तत्त्वविषयत्वाच्च संशयविपर्ययाभावः।

स्यादेतत्—'उत्पद्यतामीदृशाभ्यासात् तत्त्वज्ञानम्, तथा ऽप्यनादिना मिथ्याज्ञानसंस्कारेण मिथ्याज्ञानं जनयितव्यम्। तथा च तन्निबन्धस्य संसार स्यानुच्छेदप्रसङ्ग इत्यत उक्तम्—"केवलम्" इति—विपर्ययेणाऽसम्भिन्नम्। यद्यप्यनादिर्विपर्ययवासना तथा ऽपि तत्त्वज्ञानवासनया तत्त्वविषयसाक्षात्कार-मादध्वत्या आदिमत्या ऽपि शक्या समुच्छेत्तुम्। तत्त्वपक्षपातो हि धियां स्वभावः, यदाहुर्बाह्या अपि—

கிழ்—**अविपर्ययात्** ஸம்சயரூபமாயிருக்கலும் *விபர்யயரூபமாயிருக்கலும் ஞானத்தின் தோஷமாகும். மேற்சொன்ன ஸம்சய விபர்யயத்தின் சன்மையற்றிருப்பதால், தத்துவஸாக்ஷாத்காரம் விசுத்தமாயாகின்றது. உண்மையில் ஓரே தர்மமுள்ள வஸ்துவை அதனிட முன்மையிலில்லாத அநேகதர்மமுள்ளதாய் 'ஸம்சயம்' என்ற க்ஞானம் கிரஹிப்பதால் விபர்யயத்தின் பொது தர்மமிருப்பதுபற்றி ஸம்சயம் என்றக்ஞானமும் 'விபர்யய' என்ற சப்தத்தின் பொருளாக ஆகின்றது. ஆகையால் **अविपर्ययात्** என்றதால் ஸம்சயம் விபர்யயம் இவற்றின் ஸ்வரூபமாக இல்லாதிருத்தல் என்பது குறிக்கப்பட்டதாயாகின்றது.

சங்கை—தத்துவக்ஞானத்தை யப்யஸிப்பதால் ஸத்வ புருஷ பேதத்தைச் சாக்ஷாத்கரிக்கின்ற க்ஞானமுண்டாகட்டும். ஆயிதும் அநாதியான மித்யாக்ஞான ஸம்ஸ்காரத்தால் மித்தியாக்ஞானமுண்டுபண்ணப்பட்டே தீரும். ஆகவே மித்தியாக்ஞானத்தைக் காரணமாகவுடைய ஸம்ஸாரத்திற்கு முடிவு ஏற்படமாட்டாது எனின்? உத்தரம்—பதிலளிக்கிறார்—**केवलम्** தத்துவஸா

---

* கிளிஞ்சலைப்பார்த்து வெள்ளி என்றும், கானலைக்கண்டு ஜலம் என்றும், பனியைக்கண்டு புகை என்றும் எற்படுகின்றக் ஞானம் விபர்யயம் என்றும், மித்தியாக்ஞானம் என்றும், பிரமம் என்றும் சொல்லப்

निरुपद्रवभूतार्थस्वभावस्य विपर्ययैः ।

न बाधोऽयत्नवत्त्वेऽपि बुद्धेस्तत्पक्षपाततः" इति ॥

ज्ञानस्वरूपमुक्तम्—"नास्मि, न मे, नाहम्" इति । 'नास्मि' इत्यत्मनि क्रियामात्रन्निषेधति । यथाहुः 'कृञ्वस्तयः क्रियासामान्यवचनाः' इति (सिद्धान्तकौमुदी) । तथा चाध्यवसायाभिमानसङ्कल्पालोचनानि च आन्तराणि, बाह्याश्च सर्वे व्यापारा आत्मनि प्रतिषिद्धानि बोद्धव्यानि । यतश्चात्मनि व्यापारावेशो नास्ति अतो 'नाहम्', अहमिति कर्तृपदम्, 'अहञ्ज्ञानाभ्यहं

கூடாத்காரம் மித்யாக்ஞான ஸம்பந்தமற்றதாகவே எற்படுகின்றது. மித்யாக்ஞான வாஸனை என்பது அனுதியாக இருந்தபோதிலும், தத்துவ ஸாக்ஷாத்காரத்தை புண்டுபண்ணுகின்றதும் ஆதியுள்ளதுமான தத்துவக்ஞான வாஸனையால் நாசத்தை யடைவிக்கக்கூடும். தத்துவத்தில் பக்ஷபாத முள்ளதாக இருப்பது புத்தியின் ஸ்வபாவம்—பௌத்தர்களும் இவ்விஷயத்தை யங்கீகரித்திருக்கின்றனர்.

निरुपद्रवभूतार्थस्वभावस्य—निरुपद्रव=உபத்திரவம் எனப்படும் பிரவிருத்தி விக்ஞானமற்றதாயிருக்கிற **भूतार्थ** = ஆலயவிக்ஞானத்தை **स्वभावस्य**=இயற்கையிலுடைய க்ஞானத்திற்கு **अयत्नवत्वेऽपि**=தத்துக்ஞான (ஆலயவிக்ஞான)த்தின் ஆவிருத்தியில்லாவிடினும் **विपर्ययैः**=பிரவிருத்தி விக்ஞானங்களினால் **नबाधः** = பாதமுண்டாவதில்லை. எனனின் **बुद्धेः**=ஞானத்திற்கு **तत्पक्षपाततः**=தத்துவத்தைச் சார்ந்திருத்தல் இயற்கையாகையால் என்க.

नास्मि, नमे, नाहम् என்றதால் ஞானஸ்வரூபம் சொல்லப்பட்டதாயாகின்றது. **नास्मि** என்றபதம் ஆத்மாவினிடம் எந்தக்கிரியையுமில்லை என்பதைக்குறிக்கின்றது. எனென்றால்—**कृञ्** என்றதாதுவும், **भू** என்ற தாதுவும் **अस्** என்ற தாதுவும் கிரியாஸாமான்யத்தைப் பொருளாகவுடையன என்பதுபற்றியே என்க. ஆகவே **नास्मि** என்றதால் ஆத்மவஸ்துவிடம், அபிமானம், சங்கல்

जुहोमि, अहन्ददे' इति सर्वत्र कर्तुः परामर्शात्। निष्क्रियत्वे च सर्वत्र कर्तृत्वाभावः। ततः सुष्ठूक्तम्—'नाहम्' इति। अत एव "न मे"। कर्ता हि स्वामितां लभते, तस्मात् कुतः स्वाभाविकी स्वामितेत्यर्थः। अथवा "नास्मि" इति "पुरुषो ऽस्मि, न प्रसवधर्मा"। अप्रसवधर्मित्वाच्चाकर्तृत्वमाह—"नाहम्" इति। अकर्तृत्वाच्च न स्वामितेत्यत आह—"न मे" इति॥

பம், ஆலோசனம் என்ற ஆந்தர வியாபாரங்கள், பாஹ்யமான வியாபாரங்கள் இவையாவும் ஆத்மாவினிடம் இல்லை என்று நிஷேதிக்கப்பட்டனவாய் அறியவேண்டும். ஆத்மாவினிடம் வியாபாரஸம்பந்தமில்லாமையால் **नाहम्** என்றும் (நான்கர்த்தாவல்ல என்றும்) அந்த ஸாக்ஷாத்காரம் விஷயீகரிக்கின்றது. **अहंजानामि** (நான் அறிகிறேன்) **अहं जुहोमि** (நான் ஹோமஞ் செய்கிறேன்) **अहं ददे** (நான் கொடுக்கிறேன்) என்ற விடங்களில் **अहम्** என்ற பதம் கர்த்தாவைக் குறிக்கின்றது. அதுபோலவே **नाहम्** என்ற விடத்திலும் **अहम्** என்ற பதம் கர்த்தாவைக்குறிக்கின்றது. ஆத்மாவினிடம் கிரியையில்லாமலிருப்பதால் கர்த்திருத்வம் (செய்கின்றவனின் தன்மை) இல்லாத தாயாகின்றது. ஆகவே **नाहम्** என்று சொன்னது மிகவும் பொருத்தமுள்ளதாகவே யிருக்கின்றது. கர்த்தாவாக இல்லாமலிருப்பதுபற்றியே **नमे** (நான் கர்மபலன்களில் அபிமானமற்றவன்) என்றும் அந்தத் தத்துவ ஸாக்ஷாத்காரம் விஷயீகரிக்கின்றது. கர்தாவாக இருப்பவன் எவனோ அவனிடம் தான் ஸ்வாமித்வம் (அபிமானித்தல்) என்பது சம்பவிக்கும். ஸ்வாமித்வம் என்பது ஸ்வாபாவிகமல்ல. ஆகவே ஆத்மவஸ்து கர்த்தாவாக இல்லாமலிருப்பதால் ஸ்வாமியாகவுமாவதில்லை.

அல்லது வேறுவிதமாக வியாக்யானஞ் செய்கிறோம்—**नास्मि** என்றதற்கு—நான் புருஷனாக இருக்கிறேன், பரிணமமுள்ளவனாக இல்லை என்று பொருள். பரிணமமற்றிருப்பதால் கர்த்தாவாக ஆவதில்லை என்று **नाहम्** என்றபதத்தால் சொல்லப்படு

ननु 'एतावत्सु ज्ञातेष्वपि कश्चित् कदाचिदज्ञातो विषयो ऽस्ति, तदज्ञानञ्जतून् बन्धयिष्यति' इत्यत आह—"अपरिशेषम्" इति । नास्ति किञ्चिदस्मिन् परिशिष्टं ज्ञातव्यं, यदज्ञानं बन्धयिष्यतीत्यर्थः ॥ ६४ ॥

किं पुनरीदृशेन तत्त्वसाक्षात्कारेण सिध्यतीत्यत आह—

तेन निवृत्तप्रसवामर्थवशात् सप्तरूपविनिवृत्ताम् ।
प्रकृतिं पश्यति पुरुषः प्रेक्षकवदवस्थितः स्वच्छः ॥ ६५ ॥

கிறது. கர்த்தாவாக இல்லாமலிருப்பதால் ஸ்வாமியாக (அனுபவிக்கின்றவனாக) ஆவதில்லை என்பது नमे என்றபதத்தால் சொல்லப்படுகின்றது.

சங்கை—இவ்வளவு தூரம் வஸ்துக்கள் அறியப்பட்டிருந்தபோதிலும் ஒருக்கால் யாதானுமொருவிஷயம் அறியப்படாததாக இருக்கக்கூடும். ஆகவே அந்த வஸ்துவின் அக்ஞானம் பிராணிகளைப் பந்தப்படுத்தும் என்று ஸந்தேஹித்துப் பதிலளிக்கிறார்—**अपरिशेषम्** தத்வ ஸாக்ஷாத்காரத்தில் விஷயமாக ஆகாதவஸ்து எதுவும் மீதமில்லையாதலால் எந்த வஸ்துவின் அக்ஞானமும் பந்தத்தைக் கொடுக்கமாட்டாது.

65. (அ - கை) மேற்சொல்லியதத்துவ ஸாக்ஷாத்காரத்தால் என்ன ஏற்படுகின்றது என்றால் பதிலளிக்கிறார்—

(ப - ரை) **स्वच्छः**=ரஜஸ், தமஸ் இவற்றின் விருத்தியுள்ள புத்தியுடன் கூடியிருந்தவனும் **प्रेक्षकवत्**=சபையில் நடைபெறுகின்றவற்றைப் பார்த்துக்கொண்டிருப்பவனைப் போல் **अवस्थितः**=கிரியையற்றவனுமான **पुरुषः**=புருஷன் **तेन**=அந்தத்தத்துவஸாக்ஷாத்காரத்தினால் **अर्थवशात्**=போகம் விவேக ஸாக்ஷாத்காரம் என்றப் பிரயோஜனங்கள் ஏற்பட்டுவிட்டனபற்றி **निवृत्तप्रसवाम्**=கிரியையற்றதாயும் **सप्तरूपविनिवृत्ताम्**=தர்மம், அதர்மம், அக்ஞானம், வைராக்யம், அவைராக்யம், ஐசுவர்யம், அனைசுவர்யம் என்ற ஏழுவிதமான ரூபங்களற்றதாயுமிருக்கின்ற **प्रकृतिम्**=பிரகிருதியை **पश्यति**=பார்க்கிறான்.

"तेन" इति । भोगविवेकसाक्षात्कारौ हि प्रकृतेः प्रसोतव्यौ । तौ च प्रसूताविति नास्याः प्रसोतव्यमवशिष्यत इति निवृत्तप्रसवा प्रकृतिः । विवेकज्ञानरूपो यो ऽर्थः, तस्य वशः सामर्थ्यम् तस्मात् । अतत्त्वज्ञानपूर्वकाणि खलु धर्माधर्माऽज्ञानवैराग्यावैराग्यैश्वर्यानैश्वर्याणि । वैराग्यमपि केवलतौष्टिकानामतत्त्वज्ञान पूर्वकमेव । तत्र तत्त्वज्ञानं विरोधित्वेनातत्त्वज्ञानमुच्छिनत्ति । कारणनिवृत्त्या च सप्तरूपाणि निवर्तन्त इति सप्तरूपविनिवृत्ता प्रकृतिः । "अव

(தா - ம்) போகம், விவேக சாக்ஷாத்காரம் இவைகளே பிரகிருதியால் உண்டுபண்ணப் படவேண்டிய காரியங்கள். அவைகள் உண்டு பண்ணப்பட்டபடியால் இனி உண்டுபண்ணப்பட வேண்டிய காரியமில்லாமைபற்றி பிரகிருதி காரியங்களையுண்டு பண்ணுதல் என்ற வியாபாரத்தினின்றும் ஒழிவையடைந்துவிடுகின்றது. தர்மம், அதர்மம், அக்ஞானம், வைராக்யம், அவைராக்யம், ஐசுவர்யம், அனைசுவர்யம் என்ற புத்தியின் தர்மங்கள் அதத்துவக் ஞானத்தை நிமித்தமாகக் கொண்டிருக்கின்றன. அஸாதுக்களின் உபதேசத்தால் சந்தோஷமடைகின்றவர்களுக் குண்டான வைராக்யம் அதத்துவக் ஞானத்தை மூன்னிட்டிருப்பதால் வைராக்யம் அதத்துவக் ஞானத்தை நிமித்தமாயுடைய தென்று சொல்லப்பட்டது. அதத்துவக் ஞானத்திற்கு தத்துவக்ஞானம் விரோதியாக இருப்பதால் தத்துவக்ஞானம் அதத்துவக்ஞானத்தை விலக்குகின்றது. ஆகவே அதத்துவக்ஞானம் என்ற காரணம் விலகிவிட்டபடியால் அதன் காரியங்களான தர்மம், அதர்மம் முதலிய எழுவிதபாவங்கள் விலகிவிடுகின்றனவாதல் பற்றி எழுவித ரூபங்களற்றதாய் பிரகிருதியாகின்றது. **स्वतः** என்ற பதத்திற்கு ரஜஸ், தமஸ் என்ற விருத்தியால் கலங்கின புத்தியின் ஸம்பந்தமற்றது என்று பொருள் கொள்ளவேண்டும். விவேக ஸாக்ஷாத்காரம் ஏற்பட்ட பிறகும் ஸாத்விகமான புத்தியுடன் கொஞ்சம் சம்பந்தமிருந்துகொண்டு தானிருக்கிறது. இவ்விதமங்கி காரிக்காவிடல் **नास्मि, नमे, नाहम्** என்று கூறியபடி விவேக ஸாக்ஷாத்காரம் சம்பவிக்காது. எல்லாக் ஞானமும்

स्थितः" इति, निष्क्रियः, "स्वच्छः" इति, रजस्तमोवृत्तिकलुषया बुद्धया ऽसम्भिन्नः। सात्त्विक्या तु बुध्द्या तदा ऽप्यस्य मनाक् सम्भेदो ऽस्त्येव, अन्यथैवंभूतप्रकृतिदर्शनानुपपत्तेरिति ॥ ६५ ॥

स्यादेतत्—'निवृत्तप्रसवामिति न मृष्यामहे। संयोगकृतो हि सर्ग इत्युक्तम्, योग्यता च संयोगः, भोक्तृत्वयोग्यता च पुरुषस्य चैतन्यम्, भोग्यत्वयोग्यताच प्रकृतेर्जडत्वं विषयत्वञ्च। न चैतयोरस्ति निवृत्तिः। न च करणीयाभावान्निवृत्तिः, तज्जातीयस्यान्यस्य करणीयत्वात् पुनः पुनः शब्दाद्युपभोगवत्'—इत्यत आह—

புத்தியின் காரியமாக இருப்பதால் புத்தியின் சம்பந்தமில்லாவிடில் இத்தகைய விவேக ஸாக்ஷாத்காரமும் ஏற்படமாட்டாது என்று கருத்து.

66. (அ - கை) சங்கை—பிரகிருதியானது காரியங்களை யுண்டுபண்ணுதலினின்றும் நிவிருத்தியை யடைகின்றதென்பதை நாம் அங்கீகரிக்கமுடியாது-எனின்றால்—முன்னர் பிரகிருதி புருஷசம்யோகத்தால் சிருஷ்டியுண்டாவதாய் சொல்லப்பட்டிருக்கிறது. யோக்யதையே (தகுதியாயிருத்தல்) சம்யோகத்திற்குக் காரணம். **भोक्तृत्वयोग्यता** (அனுபவிக்கின்றவனையிருத்தலுக்குத் தகுதியுடன் கூடியிருத்தலே) புருஷனுக்கு சைதன்யம் எனப்படும். **भोग्यत्वयोग्यता** (அனுபவிப்பதற்குத் தகுதியாக இருத்தலே) பிரகிருதியினிடமுள்ள விஷயத்வம், ஜடத்வம் என்ற தர்மங்களாகும். இவ்விரண்டு தர்மங்களுக்கும் எப்பொழுதாகிலும் நிவிருத்தியுண்டா? இல்லை. தத்வஸாக்ஷாத்கார முண்டானபிறகு செய்ய வேண்டிய காரியம் எதுவும் மீதமில்லாதபடியால் பிரகிருதி சேஷ்டிக்கிறதில்லை என்றும் சொல்லமுடியாது. ஏனெனில் அடிக்கடி சப்தாதி விஷயங்களின் அனுபவம் ஏற்படுகின்ற மாதிரி உண்டுபண்ணப்பட்ட போகம், விவேகஸாக்ஷாத்காரம் இவற்றைப்போன்ற வேறுபோகம், விவேகஸாக்ஷாத்காரம் இவை யுண்டாகலாம் என்பதுபற்றியே என்க. ஆகவே தத்வக்ஞான

दृष्टा मयेत्युपेक्षक एको, दृष्टा ऽहमिति चिरमत्यन्या ।
सति संयोगे ऽपि तयोः प्रयोजनन्नास्ति सर्गस्य ॥ ६६ ॥

"दृष्टा" इति । करोतु नाम पौनःपुन्येन शब्दाद्युपभोगंप्रकृतिः, यया विवेकख्यातिर्नकृता, कृतविवेकख्यातिस्तु शब्दाद्युपभोगंनजनयति । अविवेक ख्यातिनिबन्धनो हि तदुपभोगः, निबन्धनाभावे न तद्भवितुमर्हति, अङ्कुर

முண்டானபிறகு பிரகிருதி சேஷ்டிக்கிறதில்லை என்று சொன்னது எங்ஙனம் எனின் ? உத்தரம்—பதிலளிக்கிறார்—

(ப - ரை) **एकः**=ஒருவன்—புருஷன் (**प्रकृतेः**=பிரகிருதி) **मया**=என்னால் **दृष्टा**=பார்க்கப்பட்டது **इति**=என்று **उपेक्षकः**=உபேக்ஷை செய்கின்றவனாக ஆகின்றான். **अन्या**=பிரகிருதி(**पुरुषेण**=புருஷனால்) **दृष्टा**=பகுத்தறியப்பட்டேன் **इति**=என்று **चिरमति**=ஒழிவையடைகின்றது. **अतः**=ஆனதுபற்றி **तयोः**=பிரகிருதி புருஷன் இவற்றிற்கு=**संयोगेसत्यपि**=சேர்க்கை இருந்தபோதிலும் **सर्गस्य**=சிருஷ்டிக்கு **प्रयोजनम्**=பிரயோஜனம் (தாண்டுகின்ற வஸ்து) **नास्ति**=இல்லை.

(தா-ம்) எந்தப் பிரகிருதியால் விவேக சாக்ஷாத்காரமுண்டுபண்ணப்படவில்லையோ அதனால் திரும்பவும், திரும்பவும் சப்தம் முதலிய விஷயங்களின் அனுபவம் உண்டுபண்ணப்படலாம். விவேக சாக்ஷாத்காரத்தை யுண்டுபண்ணின பிரகிருதியோவெனின் சப்தம் முதலிய விஷயங்களின் அனுபவத்தை யுண்டுபண்ணுகிறதில்லை. எனென்றால்—விவேக ஸாக்ஷாத்கார முண்டாகாதபடியாலல்லவோ சப்தம் முதலிய விஷயங்களின் அனுபவம் புருஷனுக்கு ஏற்படுகின்றது. ஆகவே விதை இல்லாவிடில் முளை எவ்விதம் முண்டாவதில்லையோ அவ்விதமே அவிவேகம் என்ற காரணமில்லாததால் சப்தம்முதலிய விஷயங்களின் அனுபவம் புருஷனுக்கு ஏற்படுவதில்லை. இவ்விஷயத்தையே விரிவாய் நிரூபணஞ்செய்வாம்—சுகதுக்கமோஹ ரூபமாயும், பிரகிருதியைச் சேர்ந்தனவாயுமிருக்கின்ற சப்தம் முத

इव बीजाभावे । प्राकृतान् हि सुखदुःखमोहात्मनः शब्दादींस्तदविवेकात् 'ममैतत्' इत्यभिमन्यमान आत्मा भुञ्जीत । एवं विवेकख्यातिमपि प्राकृतीमविवेकादेवात्मा 'मदर्थेयम्' इति मन्यते । उत्पन्नविवेकख्यातिस्तु तदसंसर्गाच्छब्दादीन्नोपभोक्तुमर्हति, नापि विवेकख्यातिं प्राकृतीमपि कर्तुम् । ततो विविक्त आत्मा न स्वार्थमभिमन्तुमर्हति । पुरुषार्थौ च भोगविवेकौ प्रकृत्यारंभप्रयोजकाविति अपुरुषार्थौ सन्तौ न प्रकृतिं प्रयोजयतः । तद्दि-

---

வில விஷயங்களைப் புருஷன் 'பிரகிருதியிலும் நான் வேறு பட்டவன்' என்ற விவேகக் ஞானத்தை யடையாதபடியால் சப்தம் முதலிய விஷயங்கள் நம்மையே சேர்ந்தன என்று அபிமானத்தை யடைந்து அதனால் அனுபவிக்கிறான். இவ்விதமே பிரகிருதியைச் சார்ந்தான விவேகக்ஞானத்தையும் அவிவேகத்காலேயே தன்னைச் சேர்ந்ததென்று ஆத்மா அபிமானிக்கிறான். விவேகசாக்ஷாத்காரத்தை யடைந்த பிறகோவெனில் அவிவேகத்தைக்காரணமாக வுடைய அபிமானம் நிவிருத்தியை யடைந்து விடுவதால் பிரகிருதியைச் சேர்ந்தான சப்தம் முதலிய விஷயங்களைப் புருஷன் அனுபவிப்பதற்குத் தகுதியுள்ளவனுவதில்லை. அவ்விதமே பிரகிருதியைச் சேர்ந்தான விவேகக்ஞானத்தையும் தன்னைச் சேர்ந்ததென்று அபிமானிக்கிறதில்லை. ஆகவே சுத்தனை ஆத்மா வென்றையும் தன்னைச்சேர்ந்ததாகப் பாவிப்பதற்குச் சக்தியற்றவனுகின்றன். போகம், விவேக சாக்ஷாத்காரம் இவைகள் புருஷனால் விரும்பப்படுகின்ற நிலையிலிருந்தால் தான் பிரகிருதியின் கார்யாரம்பத்திற்கு நிமித்தங்களாகுமேதலாலும் விவேகக்ஞான மேற்பட்டபிறகு புருஷனால் அபிமானிக்கப்படுகின்ற நிலையிலில்லாமலிருக்கின்றனவாதலாலும் புருஷார்த்தங்களாயாவதில்லை என்பதுபற்றி அவைகள் பிரகிருதியின் பிரவிருத்திக்கு நிமித்தமாக ஆவதில்லை. இதுவே **प्रयोजनं नास्ति सर्गस्य** என்றதால் சொல்லப்பட்டிருக்கிறது. **प्रयोजनम्** என்ற பதத்திற்குத் தூண்டுகின்ற வஸ்து என்று பொருள். போகம் விவேகம் இவைகள் மோக்ஷம் ஏற்பட்டபிறகு புருஷார்த்தங்களாயாவ

मुक्तम्—"प्रयोजनन्नास्ति सर्गस्य" इति । अथ प्रयुज्यते सर्गे प्रकृतिरनेनेति प्रयोजनम्, तदपुरुषार्थे नास्तीत्यर्थः ॥ ६६ ॥

स्यादेतत्—"उत्पन्नतत्त्वसाक्षात्कारश्चेत्तदनन्तरमेव मुक्तस्य तस्य देहपातः स्यादिति कथमदेहः प्रकृतिंपश्येत् । अथ तत्त्वज्ञाने ऽपि न मुच्यते? कर्मणामप्रक्षीणत्वात् तेषां कुतः प्रक्षयः 'भोगात्' इति चेत्, हन्त मोस्तत्त्वज्ञानन्न मोक्षसाधनम्—इति 'व्यक्ताव्यक्तज्ञविज्ञानजन्मना तत्त्वज्ञानेनापवर्गः' इति रिक्तंवचः । 'भोगेन चापरिसंख्येयः कर्माशयप्रचयो ऽनिय-

---

தில்லையாகையால் அவற்றினிடம் **प्रयोजनत्वम्** (தூண்டுகின்றதன்மை இல்லை என்று ஏற்பட்டது. (எ-று)

67. (அ-கை) சங்கை—இஃதெல்லாமிருக்கட்டும். தத்துவ சாக்ஷாத்காரமுண்டான பிறகு முக்தனாக ஆகிவிடுகின்றானால் பால் சரீரமும் உடனே நாசத்தையடைந்து விடுமாதல்பற்றி தேஹமற்றவனாய்க்கொண்டு எவ்விதம் பிரகிருதியைப் பார்க்கக் கூடும். ஆகவே **प्रकृतिंपश्यति पुरुषः प्रेक्षकवदवस्थितः स्वच्छः** என்று சொன்னது எங்ஙனம்? தத்துவக்ஞான முண்டான போதிலும் கர்மங்கள் நாசத்தையடையாததடியால் முக்தனாக ஆவதில்லை எனின்?—அந்தக்கர்மங்கள் எதனால் நாசத்தை யடைகின்றன? அனுபவத்தால் நாசமடைகின்றன என்று அங்கீகரித்தால்—தத்துவ சாக்ஷாத்காரத்திற்கு மோக்ஷசாதன மாயிருக்கும் தன்மை இல்லாமலாகிவிடுகின்றபடியால் "விபக்தம் (கார்யம்) அவ்யக்தம் (காரணமான பிரகிருதி) க்ஞன் (புருஷன்) இவைகளைப் பகுத்தறிவதாலுண்டான விவேகஸாக்ஷாத்காரத்தால் மோக்ஷமுண்டாகின்றது" என்ற வார்த்தைக்கு அர்த்தமில்லாமை யுற்பட்டுவிடுகின்றது. மேலும் அனுபவத்தால் கணக்கிலடங்காததும், நிர்ணயிக்கப்படாத விபாக(फल)காலத்தையுடையதுமான கர்மங்களின் ஸமூஹம் போக்கடிக்கப்படவேண்டும். அதற்குப்பிறகு மோக்ஷமுண்டாகும் என்பதும் மனோரத

तविपाक्कालः ज्ञेतव्यः, ततश्चापवर्गप्राप्तिः' इत्यपि मनोरथमात्रम्'' इत्यत आह—

सम्यग्ज्ञानाधिगमात् धर्मादीनामकारणप्राप्तौ ।
तिष्ठति संस्कारवशात्, चक्रभ्रमिवद्धृतशरीरः ॥ ६७ ॥

''सम्यक्'' इति । तत्त्वसाक्षात्कारोदयादेवानादिरप्यनियतविपाककालो ऽपि कर्माशयप्रचयो दग्धबीजभावतया न जात्यायुर्भोगलक्षणाय फलाय कल्पते । क्लेशसलिलावसिक्तायां हि बुद्धिभूमौ कर्मबीजान्यङ्कुरं प्रसुवते । तत्त्वज्ञान-निदाघनिपीतसकलक्लेशसलिलायामूषरायां कुतः कर्मबीजानामङ्कुरप्रसवः ?

மாத்திரமே. (அவ்விதம் நடைபெறுதென்பது கருத்து) என்றால் உத்தரம்—பதிலளிக்கிறார்—

(ப - ரை) **सम्यग्ज्ञानाधिगमात्** = தத்துவ ஸாக்ஷாத்காரத்தை யடைவதால் **धर्मादीनाम्**=தர்மம், அதர்மம் இவைகளுக்கு **अकारणप्राप्तौ**=பந்தத்திற்குக் காரணமான இல்லாமலிருக்கும் தன்மையானது ஏற்பட்டுவிடுவதால் **संस्कारवशात्**=பலனைக்கொடுக்க ஆரம்பித்த தர்மாதர்மங்களாகிற ஸம்ஸ்காரபலத்தால் **चक्रभ्रमिवत्**=சக்கிரத்திலுண்டான சுழல்போல **धृतशरीरः** = சரீரகாரணமுள்ளவனாய் **तिष्ठति**=இருக்கின்றான்.

(தா - ம்) தத்துவ சாக்ஷாத்காரமுண்டானவுடன் கர்மங்கள், அவற்றின் ஸம்ஸ்காரங்கள் இவற்றின் ஸமூஹம் ஆதியற்றதாயும், நிர்ணயிக்க முடியாதவிபாக (**फल**) காலத்தையுடையதாயு மிருந்தபோதிலும் அதனிடமுள்ள சுகதுக்கங்களையுண்டுபண்ணும்சக்தியானது பொசுக்கப்பட்டதாயாகி விடுகின்றபடியால் ஜன்மம், சுகதுக்காநுபவம், ஆயுஸ் என்ற ரூபமான பலனைக்குறித்துச் சாதனமாயாவதில்லை. புத்தியாகிற பூமியானது அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம் அபிநிவேசம் என்ற ஜலத்தினால் நனைக்கப்படுமாயின் கர்மங்களாகிற பீஜங்கள் ஜன்மம், ஆயுஸ் போகம் என்ற மூன்றையுண்டுபண்ணும். தத்துவக் ஞான

तदिदमुक्तम्—"धर्मादीनामकारणप्राप्तौ" इति, अकारणत्वप्राप्तावित्यर्थः। उत्पन्नतत्त्वज्ञानो ऽपि च संस्कारवशात् तिष्ठति, यथोपरते ऽपि कुलालव्यापारे चक्रं वेगाख्यसंस्कारवशात् भ्रमत् तिष्ठति। कालपरिपाकवशात्तूपरते संस्कारे निष्क्रियंभवति। शरीरस्थितौ च प्रारब्धपरिपाकौ धर्माधर्मौ संस्कारौ। तथा चानुश्रूयते—"भोगेन त्वितरे क्षपयित्वा ऽथ सम्पद्यते" इति "तस्य तावदेव चिरं यावन्न विमोक्ष्ये ऽथ संपत्स्ये" इति च (छान्दोग्य-६। १४। २)। प्रक्षीयमाणाविद्यासंस्कारावशेषश्च संस्कारः, तद्वशात् तत्सामर्थ्यात् धृतशरीरस्तिष्ठति ॥ ६७ ॥

மாகிற உஷ்ணத்தால் உறுஞ்சப்பட்ட அவித்யை அஸ்மிதை மூதலியனவாகிய ஜலத்தையுடையதும், சுக்கான் பூமிக்குச் சமமானதுமான புத்தியாகிற பூமியில் ஜன்மம், ஆயுஸ் போகம் என்ற மூன்கள் எந்நனம் சம்பவிக்கும். ஒரு பொழுதும் சம்பவிக்காது. இதுவே **धर्मादीनामकारणप्राप्तौ** என்றதால் சொல்லப்படுகின்றது. தத்துவசாக்ஷாத்காரம் எற்பட்ட பிறகும் பிராரப்த கர்மங்களாகிற ஸம்ஸ்காரத்தின் பலத்தால் சரீரம் கீழ்விழுந்து விடாமல் விபவஹாரங்களை நடத்திக்கொண்டு கொஞ்ச காலமிருக்கின்றது. உதாஹரணம்—குயவன் தனது சக்கிரத்தைச் சுற்றுது நின்றுவிட்டாலும் சக்கிரம் மாத்திரம் வேகம் என்ற ஸம்ஸ்காரத்தின் பலத்தால் கொஞ்சநேரம் சுற்றிக் கொண்டிருக்கிறது. கொஞ்சநேரம் சென்றவுடன் ஸம்ஸ்காரம் நாசத்தையடைந்து விட்டால் சக்கிரம் சுழலுதல் என்ற கிரியை யற்றதாயாகின்றது. இது எவ்விதமோ அவ்விதமே பலனைக் கொடுக்க வாரம்பித்த கர்மங்களாகிற ஸம்ஸ்காரத்தின் பலத்தால் தத்துவக்ஞானம் எற்பட்ட பிறகும் சரீரம் வியவஹரிக்கின்றது. ஸம்ஸ்காரம் ஒழிந்த பிறகு சரீரமும் கீழ்விழுந்து விடுகின்றது. இவ்விதமே சாங்கேதாக்யம் முதலிய உபநிடதங்களில். "பிராரப்த கர்மங்களை அனுபவத்தால் விலக்கிக்கொண்டு முக்தனாகின்றான்" என்றும் "அவனுக்கு மோக்ஷமடையும் விஷயத்தில் அவ்வளவு காலம் தாமதமேற்படும். (பிராரப்தகர்மத்தாலுண்டான இந்தச்

स्यादेतत्—यदि संस्कारशेषादपि धृतशरीरस्तथा ऽपि कदा ऽस्य मोक्षो भविष्यति ? इत्यत आह—

प्राप्ते शरीरभेदे चरितार्थत्वात् प्रधानविनिवृत्तौ ।
ऐकान्तिकमात्यन्तिकमुभयं कैवल्यमाप्नोति ॥ ६८ ॥

"प्राप्ते" इति । अनारब्धविपाकानान्तावत् कर्माशयानां तत्त्वज्ञानाग्निना बीजभावो दग्धः । प्रारब्धविपाकानान्तूपभोगेन क्षये सति, शरीरभेदे

சரீரம்) எதுவரை விடுபடுவதில்லையோ! சரீரம் விடுபட்டால் முக்தியை யடைந்துவிடுகிறான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

68. (அ - கை) ஸம்ஸ்காரம் மீதமிருப்பதால் சரீரகாரணம் கொஞ்சகாலம் எற்படுகின்றதாயின் எப்பொழுது மோக்ஷமுண்டாகும்? எனின் பதிலளிக்கிறார்—

(ப - ரை) **शरीरभेदे**=எந்தச் சரீரமிருக்கும் பொழுது தத்துவ ஸாக்ஷாத்காரமேற்பட்டதோ அந்தச் சரீரத்திற்கு நாசம் **प्राप्ते**=ஏற்பட்ட பிறகு **चरितार्थत्वात्**=தான் செய்யவேண்டிய கார்யங்கள்யாவையும் செய்து முடித்துவிட்டபடியால் **प्रधानविनिवृतौ**=பிரகிருதியானது விலகியபொழுது **ऐकान्तिकम्**=அவச்யமுண்டாகக் கூடியதாயும், **आत्यन्तिकम्**=நாசமற்றதாயுமிருக்கின்ற **उभयम्**=இரண்டு தர்மமுள்ள **कैवल्यम्**=ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்ற மூன்றுவித துக்கங்களற்ற நிலையை (**पुरुषः**=புருஷன்) **प्राप्नोति**=அடைகின்றான்.

(தா-ம்) பலனைக்கொடுக்க ஆரம்பிக்காத கர்மங்களுக்கு தத்துவக்ஞானம் என்ற அக்னியால் கார்யத்தை யுண்டுபண்ணும் திறமை பொசுக்கப்பட்டதாயாகிவிடுகின்றது. பலனைக்கொடுக்க ஆரம்பித்த கர்மங்கள் அனுபவத்தால் நாசமடைந்து விடுகின்றன. ஆகவே எந்தச் சரீரத்தில் தத்துவ ஸாக்ஷாத்கார மேற்பட்டதோ அந்தச் சரீரம் நாசமடைந்தவுடன் மறுபடியும் வேறு

विनाशे चरितार्थत्वात्=कृतप्रयोजनत्वात्। प्रधानस्य तं पुरुषंप्रति विनिवृत्तौ—ऐकान्तिकम्=अवश्यम्भावि आत्यन्तिकम्=अविनाशि—इत्युभयं कैवल्यम्=दुःखत्रयविगमं प्राप्नोति पुरुषः ॥ ६८ ॥

प्रमाणेनोपपादिते ऽप्यत्यन्तश्रद्धोत्पादनाय परमर्षिपूर्वकत्वमाह—

पुरुषार्थज्ञानमिदं गुह्यं परमर्षिणा समाख्यातम्।
स्थित्युत्पत्तिप्रलयाश्चिन्त्यन्ते यत्र भूतानाम्॥ ६९ ॥

சரீரம் ஏற்படுவதில்லை. எனென்றால் பிரகிருதியானது தான் செய்துமுடிக்கவேண்டிய கார்யங்கள் யாவையும் செய்துமுடித்து நிவிருத்தியை யடைந்துவிட்டதே அதன்காரணமாகும். எந்தப் புருஷன் தத்துவக்ஞானத்தை யடைந்தாலே அவன் விஷயத்தில் மட்டும் பிரகிருதி சேஷ்டிக்கிற தில்லையே யல்லாது மற்றவர்களிடம் சேஷ்டித்துக்கொண்டுதானிருக்கிறது. இவ்விதம் சரீரமுண்டாகாவிடில் மூற்றிலும் ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்ற மூன்றுவிதமான துக்கங்களற்ற நிலையைப் புருஷன் அடைந்துவிடுகிறான். அன்னிலையே "மோக்ஷம்," "கைவல்யம்" எனப்படும்.

69. (அ - கை) இதுவரை உபதேசிக்கப்பட்ட விஷயங்கள் யாவும் யுக்திகளால் ஸ்தாபிக்கப்பட்டனவாக இருந்த போதிலும் அவற்றில் மேலும் அதிகமாய் சிரத்தை ஏற்படுவதற்காக மஹருஷிகளால் உபதேசிக்கப்பட்டன வென்பதையும் சொல்லுகிறார்—

(ப - தை) **यत्र**=எந்த தத்வசாக்ஷாத்கார மேற்படுவதற்காக **भूतानाम्**=பிராணிகளுடைய **स्थित्युत्पत्तिप्रलयाः**=ஸ்திதி (இருப்பு) உத்பத்தி, நாசம் இவைகள் **(आगमैः**=சாஸ்திரங்களால்—வேதங்களால்) **चिन्त्यन्ते**=விசாரிக்கப்படுகின்றனவோ. **इदम्**=இந்த **गुह्यम्**=ஸ்தூலபுத்திகளால் அறிவதற்கியலாததான **पुरुषार्थज्ञानम्** = மோக்ஷ சாதனமான தத்துவக்ஞானம் **परमर्षिणा**=மஹருஷியான கபிலரால் **समाख्यातम्**=உபதேசிக்கப்பட்டது.

"पुरुष" इति । गुह्यम्=गुहानिवासि, स्थूलधियां दुर्बोधमिति यावत् । परमर्षिणा=कपिलेन, तामेव श्रद्धामागमिकत्वेन द्रढयति——स्थित्युत्पत्तिप्रलयाश्चिन्त्यन्ते यत्र भूतानाम् इति । 'यत्र' ज्ञाने-यदर्थम्,—यथा 'चर्मणि द्वीपिनं हन्ति' इति । भूतानाम्—प्राणिनां स्थित्युत्पत्तिप्रलयाः-आगमैः चिन्त्यन्ते ॥ ६९ ॥

स्यादेतत्-"यत् परमर्षिणा साक्षात्कथितं तच्छ्रद्धीमहि, यत्पुनरीश्वरकृष्णेन कथितम् तत्र कुतः श्रद्धा ?"-इत्यत आह—

एतत् पवित्रमग्र्यं मुनिरासुरयेऽनुकंपया प्रददौ ।
आसुरिरपि पञ्चशिखाय, तेन बहुधा कृतं तन्त्रम् ॥ ७० ॥

(தா-டம்) வேதங்களில் சொல்லப்படுகின்ற சிருஷ்டி, ஸ்திதி, பிரளயம் இவைகள் தத்துவக்ஞானமுண்டாவதற்காகவே வாதல் பற்றி கபிலமஹருஷியால் உபதேசிக்கப்பட்ட தத்துவக்ஞானம் வேதங்களால் அங்கீகரிக்கப்பட்டதாயு மாகின்றது. மேலும் இந்தத் தத்துவக்ஞானம் ஸ்தூலமான புத்தியுள்ளவர்களாலறியக் கூடியதல்ல. ஆதலால் இது மிகவும் சிறந்தது. (எ-று)

70. (அகை) சங்கை——கபில மஹருஷியால் நேரில் எவைகள் சொல்லப்பட்டனவோ அவற்றை நாம் நம்புகிறோம். எது ஈச்வரகிருஷ்ணரால் சொல்லப்பட்டதோ அதில் நம்பிக்கை எவ்விதம் சம்பவிக்கும் எனின் ? உத்தரம்——பதிலளிக்கிறார்—

(ப-ரை) **पवित्रम्**=மூன்றுவிதமான துக்கங்களுக்குக் காரணமான பாபத்தினின்றும் சுத்தி செய்கின்றதும் **अग्र्यम्**=மற்ற சுத்திசாதனங்களுள் சிறந்ததுமான **एतत्**=இந்த தத்துவக்ஞானத்தை **मुनिः**=கபிலமஹாமுனி **आसुरये**=ஆஸுரி என்பவருக்கு **अनुकंपया**=தயையினால் **प्रददौ** = கொடுத்தார்——உபதேசித்தார். **आसुरिरपि**=ஆஸுரி என்பவரும் **पंचशिखाय**=பஞ்சசிகர் என்ற ஆசிரியருக்கு (**प्रददौ**=உபதேசித்தார்) **तेनच**=அவரால் **तन्त्रम्** = சாங்கியசாஸ்திரமானது **बहुधा**=பலவிதமாக **कृतम्**=செய்யப்பட்டது.

"एतत्" इति । "एतत् पवित्रम्"—पावनम् दुःखक्षयहेतोः पाप्मनः पुनातीति, "अग्र्यम्" सर्वेभ्यः पवित्रेभ्यो मुख्यम्, मुनिः=कपिलः आसुरये ऽनुकम्पया प्रददौ 'आसुरिरपि पञ्चशिखाय, तेन बहुधाकृतं तन्त्रम्॥

शिष्यपरंपरया ऽऽगतमीश्वरकृष्णेन चैतदार्याभिः ।
संक्षिप्तमार्यमतिना सम्यग्विज्ञाय सिद्धान्तम् ॥ ७१ ॥

"शिष्य" इति । आरात् याता तत्त्वेभ्य इत्यार्या, आर्या मतिर्यस्य सो ऽयम् "आर्यमतिः" इति ॥ ७१ ॥

एतच्च शास्त्रम्, सकलशास्त्रार्थसूचकत्वात्, न तु प्रकरणमित्याह—

71(ப - மை) (**पूर्वोक्तप्रकारेण**=முன்சொல்லியபடி) **शिष्यपरंपरया**=சிஷ்யர்களின் கிரமமாய் **आगतम्**=வந்ததான **एतत्**=இந்தச் சாஸ்திரார்த்தமானது **आर्यमतिना**=தத்துவங்களுடன் கூருங்கிய புத்தியையுடைய அதாவது சாஸ்திரார்த்தங்களை நன்கறிந்தவரான **ईश्वरकृष्णेनच**=ஈச்வர கிருஷ்ணன் என்ற மஹானால் **आर्याभिः**=ஆர்யா என்ற விருத்தத்திலமைந்த சுலோகங்களால் **सिद्धान्तम्**=சாங்கிய சித்தாந்தத்தை **सम्यक्**=நன்றாய் **विज्ञाय**=அறிந்து **संक्षिप्तम्**=சுருக்கி எழுதப்பட்டது. ஆகவே சிஷ்யபரம்பரையாய் கபிலரிடமிருந்து கிடைத்தவிஷயங்களையே ஈச்வர கிருஷ்ணர் என்ற மஹான் சுருக்கி எழுதியிருப்பதாலும், சுதந்திரமாய் தமது புத்திக்குத்தோன்றியதை வெளியிடவில்லையாதலாலும் சாங்கிய தத்துவகாரிகை என்ற இந்தக் கிரந்தமும் மஹரிஷிகளால் கோரில் எழுதப்பட்டக் கிரந்தங்கள் போல் சிரத்தையுடன் ஆதரிக்கக்கூடியதே என்று கருத்து.

(அ - கை) இந்தக்கிரந்தம் சாங்கிய சித்தாந்தம் யாவையும் நிரூபிப்பதால் சாஸ்திரமேயல்லாது பிரகரணமல்ல என்று சொல்லுகிறார்—

सप्तत्यां किल ये ऽर्थास्ते ऽर्थाः कृत्स्नस्य षष्टितन्त्रस्य ।
आख्यायिकाविरहिताः परवादविवर्जिताश्चापि ॥ ७२ ॥

"सप्तत्याम्" इति । तथा च राजवार्तिकम् ॥

"प्रधानास्तित्वमेकत्वमर्थवत्त्वमथान्यता ।
पारार्थ्यं च तथा ऽनैक्यं वियोगो योग एव च
शेषवृत्तिरकर्तृत्वं मौलिकार्थाः स्मृता दश ।
विपर्ययः पञ्चविधस्तथोक्ता नव तुष्टयः ॥
करणानामसामर्थ्यमष्टाविंशतिधा मतम् ।
इति षष्टिः पदार्थानामष्टभिः सह सिद्धिभिः" ॥ इति ॥

सेयं षष्टिपदार्थी कथितेति सकलशास्त्रार्थकथनान्नेदं प्रकरणम्, अपि तु शास्त्रमेवेदमिति सिद्धम् । एकत्वमर्थत्वं पारार्थ्यञ्च प्रधानमधिकृत्योक्तम् । अन्यत्वम-

---

(ப - ரை) **षष्टितन्त्रस्य** = 60 பதார்த்தங்களடங்கிய **कृत्स्नस्य**= சம்பூர்ணமான சாஸ்திரத்திற்கு **येऽर्थाः** = எந்த விஷயங்களுண்டோ **ते**=அந்த விஷயங்கள் **आख्यायिकाविरहिताः**=கதைகளற்றனவாயும் **परवादविवर्जिताश्च**=மதாந்தரங்களின் நிரூபணம், கண்டனம் இவைகளற்றனவாயும் **सप्तत्याम्**=70 சுலோகங்களில் **(निरूपिताः**=நிரூபிக்கப்பட்டிருக்கின்றன)

(தா - ம்) மஹர்ஷிகளாலியற்றப்பட்ட சம்பூர்ணமான சாங்கிய சாஸ்திரங்களில் நிரூபிக்கப்பட்ட விஷயங்கள் 60. அவையாவன (1) பிரகிருதி என்று ஒன்று இருக்கின்றது. (2) அது ஒன்றே. (3) அது சுகதுக்க மோஹரூபமாயிருக்கின்றது. (4) பிரதானம், புருஷன் இவர்களின் பேதம் (5) பிரகிருதி பரார்த்தமாகின்றது (6) புருஷன் அனேகன் (7) பிரகிருதி புருஷன் இவர்களின் விபர்கம் (சம்பந்தம் விலகுதல்) (8) பிரகிருதி புருஷன் இவர்களின் சேர்க்கை (9) தத்துவசாக்ஷாத்கார முண்டானபிறகும் சரீரதாரணத்திற்கு யுக்தி. (10) புருஷன் கர்த்தாவாக ஆவ

कर्तृत्वं बहुत्वञ्चेति पुरुषमधिकृत्य । अस्तित्वं वियोगो योगश्चेत्युभयमधिकृत्य । वृत्तिः स्थितिरिति स्थूलसूक्ष्ममधिकृत्य ॥ ७२ ॥

मनांसि कुमुदानीव बोधयन्ती सतां सदा ।
श्रीवाचस्पतिमिश्राणां कृतिस्तात्त्वकौमुदी ॥

समाप्तोऽयं ग्रन्थः ।

திலை. இந்தப்பத்து விஷயங்களும் பிரதானமான்வைகள் இவற்றைத் தவிர்த்து விபர்யயம் 5. துஷ்டிகள் 9. காரணாகளுக்குச் சக்திக்குறைவு 28. சித்திகள் 8. ஆக 60வது விஷயாகள் சாங்கிய சாஸ்திரங்களில் நிரூபிக்கப்படுகின்றன. அவைகளியாவும் இந்த 70 சுலோகங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன வாதல்பற்றி இது சாஸ்திரமாக ஆகின்றது பிரகரணமல்ல என்று கருதது.

வியாகரண வேதாந்த பாரங்கதரும், பாகவதபகவத் கீதா பன்யாஸகரும், சோதிட மந்திரசாஸ்திர வித்துவானும், ஆர்ய மதசம்வர்த்தனீ பத்திராதிபரும், மூன்று வேதிகளின் சந்தியாவந்தனம், பிருஹத்ஜாதகம், மந்திரப்பிரச்னம் முதலியவற்றிற்குத்தமிழில் உரையியற்றியவருமான

கடலங்குடி பிரும்மஸ்ரீ நடேச சாஸ்திரிகள் அவர்களால்

எழுதப்பட்ட உரை சுபமாய் முடிவு பெற்றது.

சாங்கியதத்துவ கௌமுதீ

முற்றிற்று.

C. M. & Sons, Madras.

தேவநாகரலிபியில் மூலத்துடனும் தமிழுரையுடனும் கூடின புஸ்தகங்கள்

தர்சன க்ரந்தங்கள்.

1. ப்ரம்ஹ ஸூத்ர சாங்கரபாஷ்யம்.—(நாகர எழுத்தில் மூலமும் தமிழுரையுமுள்ளது) சாங்கர பாஷ்யத்தை ஒருவரிகூட விடாமல் தமிழில் பெயர்த்திருக்கிறோம். பாமதீ, ப்ரம்ஹவித்யாபரணம், ரத்னப்ரபா, ந்யாயரக்ஷாமணி முதலிய வியாக்கியானங்களை யொட்டி ஆங்காங்கு குறிப்பெழுதி விளக்கியும், ஸூத்ரார்த்தங்களைத் தெளிவுபடுத்தியும், வித்யாரண்யரின் வையாஸிக ந்யாயமாலையை எழுதி அதற்கும் கருத்துரை எழுதியும் வெளியிட்டிருக்கிறோம். 1-வது அத்யாயம் ஆண்டிக்பேபர் ரூ. 10. கிளாஸ் ரூ. 8. 2-வது அத்யாயம் ஆண்டிக் ரூ. 8. கிளாஸ் ரூ. 6. 3-வது அத்யாயம் ஆண்டிக் ரூ. 8. கிளாஸ் ரூ. 6. 4-வது அத்யாயம் ஆண்டிக் ரூ. 4. கிளாஸ் ரூ 2–8–0. நான்கு அத்யாயங்களின் கிளாஸ் காப்பிகளின் மொத்தகிரயம் ரூ. 22–8–0. எல்லாம் கிலிட்டு எழுத்துடன் உயர்ந்த காலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கின்றன.

2. ஷை கிரந்தலிபியில் மூலமும் தமிழுரையுமுள்ளது —2-வது அத்யாயம் ரூ. 6. 3-வது அத்யாயம் ரூ. 6. 4-வது அத்யாயம் ரூ. 2–8. கிரந்தப்படிட்பில் முதலத்யாயம் வெளியிடவில்லை.

3. ஸ்ரீமத்பாகவதம். — ஸ்ரீதரீயம், வம்சீதரீயம் முதலிய வியாக்கியானங்களைத்தழுவின தமிழுரையுடனும் நாகரலிபியில் மூலத்துடனும் கூடியது. பக்திரஸம் ததும்பும் நாராயணீயமும் பதவுரையெழுதி சேர்க்கப்பட்டிருக்கிறது. தசமஸ்கந்தபூர்வார்த்தம். ரூ. 5-8.

4. ஷை தசமஸ்கந்த உத்தரார்த்தம்—ரூ. 4–8–0.

ஷை 11, 12-வது ஸ்கந்தம் ரூ. 5–8. 1-வது ஸ்கந்தம் மாதஸஞ்சிகையாக வெளிவருகின்றது. வருஷ சந்தா ரூ. 6. இம்முறையில் 9 ஸ்கந்தங்களையும் வெளியிடுவதாக யுத்தேசித்திருக்கிறோம். இத்துடன் தசோபநிஷத்துக்களும் தேவநாகரலிபியில் சங்கரபாஷ்யத்துடனும், தமிழுரையுடனும் வெளியிடப்படுகின்றன.

5. ஈசகேநோபநிஷத்துக்கள். — சங்கர பாஷ்யத்துடனும் தமிழ் மொழிபெயர்ப்புடனும் ரூ. 2.

6. காடகோபநிஷத்.—ஸ்ரீசங்கர பாஷ்யத்துடனும் தமிழுரையுடனும். ரூ. 1–8–0.

7. ஸாங்கியதத்துவகாரிகா. — இதில் ஈசுவரகிருஷ்ணரால் செய்யப்பட்ட காரிகைகளும், வாசஸ்பதிமிச்ரரால் செய்யப்பட்ட "ஸாங்கியதத்துவகௌமுதீ" என்ற அவற்றின் வியாக்கியானமும் தேவநாகரலிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஒவ்வொரு ச்லோகங்களுக்கும் பதவுரை கருத்துரைகளும் ஸாங்கியதத்துவகௌமுதீ என்ற வியாக்யானத்தின் கருத்தை உள்ளது உள்ள

படி வெளியிடும் தமிழ் மொழிபெயர்ப்புமடங்கியிருக்கின்றன. கிளாஸ் ரூ. 3. ரப் ரூ. 2.

8. பாதஞ்ஜலயோக ஸூத்திரம்.—இது பதஞ்ஜலி மஹரிஷியால் செய்யப்பட்டது. இதில் 4 பாதங்களுண்டு. இப்பதிப்பில் ஒவ்வொரு சூத்திரமும் தேவநாகரம், தமிழ் ஆகிய இரண்டு எழுத்துக்களிலும் அச்சிடப்பட்டிருப்பதுடன் பதவுரை எழுதுமிடத்தும் மேலே இரண்டு எழுத்துக்களிலும் சூத்திரபதங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. இதற்கு 1. வியாஸபாஷ்யம், 2. வாசஸ்பதிமிச்ராின் வியாக்கியானம், 3. நாகோஜிபட்டவிருத்தி, 4. பாவா கணேசிய வியாக்கியானம், 5. ராமானந்த ஸ்வாமிகளின் வியாக்கியானம், 6. ஸதாசிவேந்திர ஸரஸ்வதிகளின் விருத்தி, 7. போஜவிருத்தி ஆகிய 7 வியாக்கியானங்களைத்தழுவிப் பதவுரை, கருத்துரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. கிளாஸ் காபி ரூ. 3. ரப் காபி ரூ. 2-8-0.

॥ स्वाराज्यसिद्धिः ॥

9. **सर्व तन्त्रस्वतन्त्रैः श्रीगङ्गाधरेन्द्रसरस्वतीन्द्रैः विरचिता,** तैरेव विरचितया **कैवल्यकल्पद्रुमाख्यव्याख्यया,** ब्रह्मश्रीयुत करुङ्गुळं **कृष्ण शास्त्रिभिः** विरचितया **परिमळाख्य** विषमस्थल टिप्पण्या च समेता ॥ **(अद्वैत वेदान्त ग्रन्थः)** **க்ளாஸ். 4–0–0. ரஃ. 3–8–0.**

சோதிட சாஸ்திரக் கிரந்தங்கள்.

பிருஹத்ஜாதகம்.

10. இதையே ஹோரை என்றும், வராஹஹோரை என்றும் சொல்லுவர். இதற்குப்பல வியாக்யானங்களுக்கிணங்கவும், நமது சொந்தமான பல அனுபவங்களுக்கிணங்கவும் எளிய நடையில் தமிழில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளை எழுதித் தேவநாகரலிபியில் மூலத்துடன் வெளியிட்டிருக்கிறோம். யாவராலும் மிகக் கடினமெனக்கருதப்படும் ஆயுர்த்தாயம், தசாந்தர்த்தசை, நஷ்டஜாதகம் முதலிய பாகங்கள் எவரும் எளிதிலுணருமாறு மிக்க விரிவாக உரை எழுதி விளக்கப்பட்டும் பல அனுபவ ஜாதகங்களும் கட்டங்களும் ஆங்காங்கு கொடுக்கப்பட்டுமிருக்கின்றன. சோதிடத்தையப்யஸிக்க விருப்பமுள்ளவரும், பல சாஸ்திரத்திற் பழகுகின்றவரும் இப்புஸ்தகத்தைப் படிப்பது மிகவுமவஶ்யம். புஸ்தகம் டிம்மி 8 பக்க அளவில் சுமார் 750 பக்கங்களுள்ளது. கிலிட்டு எழுத்துடன் காலிகோ பைண்டு செய்தது. கிளாஸ் ரூ. 8. ரப் ரூ. 7.

11. ஜாதக தத்வாதசபாவபல நிர்ணயம்—(முதற்பாகம், 1ம் பாவம் முதல் 5ம் பாவம் முடிய தேவநாகரலிபியில் மூலமும் தமிழுரையுமுள்ளது.) இதில் பாராசரஸம்ஹிதை, ஸாராவளீ, பலதீபிகை, ஸர்வார்த்த சிந்தாமணி, ஜாதகதத்துவம் முதலிய கிரந்தங்களில் ஒவ்வொரு பாவவிஷயமாகவும் விரிவாகக் கூறியுள்ள வசனங்கள்

யாவையும் தனித்தனியே அந்தந்தப் பாவபலன் கூறுமிடத்து எடுத் தெழுதி அவற்றை எளிய நடையில் தமிழில் பெயர்த்து வெளியிட்டி ருக்கிறோம். இதில் (1)லக்கினபாவம், (2)தனபாவம், (3)ஸஹோதர பாவம், (4) பந்துபாவம், (5) புத்திரபாவம் என்ற ஐந்து பாவங்க ளின் பலன்கள் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. டிம்மி 1க்கு 8ல் 400 பக்கங்களுள்ளது. கிளாஸ் ரூ. 3-8-0. ரப் ரூ. 3.

12. வீடு இரண்டாவது பாகம்.—இதில் முதல் பாகத்தில் கூறிய முறைப்படி 6, 7, 8-வது பாவபலன்கள் அடங்கியிருக்கின் றன. 6-வது பாவமூலம் காணவேண்டிய ரோகம், சத்துரு, காரிய விக்கினம், சரீரத்திலுண்டாகும் புண்கள், திருட்டு முதலியவற்றைப் பற்றியும், 7-வது பாவமூலம் காணவேண்டிய களத்திரம், வரன், காமஸுகம் முதலியவற்றைப்பற்றியும், 8-வது பாவ மூலம் காண வேண்டிய மரணம், ஆயுள், மரணதசம் முதலியவற்றைப்பற்றியும் கூறிய பலன்கள் படிப்பவர்க்கு மிகவும் ஆச்சரியத்தைத் தரக்கூடிய னவாகவும் பெரும்பாலுமனுபவானுஸாரிகளாகவுமிருக்கின்றன.

மேலும், 7-வது பாவபலன் கூறுமிடத்து ஸாராவளி, ஜாதகதத் துவம், ஜாதகபாரிஜாதம் இவற்றிற் கூறிய ஸ்திரீ ஜாதகவிஷயமான அபூர்வ பலன்களையும் வெளியிட்டிருக்கிறோம். கன்னிகை, வரன் இவர்களின் ஜாதகமூலம் அவரவர்களின் ஸ்வரூபஸ்வபாவாதிகளையும், நடத்தைகளையும் அறிந்து கொள்ளுவதற்கு இப்புஸ்தகம் மிகவும் துணையாகவிருக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. புஸ்தகம் டிம்மி 1க்கு 8ல் 400 பக்கங்களுள்ளது. கிளாஸ் ரூ. 3-8. ரப் ரூ. 3.

13. வீடு மூன்றும் பாகம்.—9, 10, 11, 12-வது பாவபலன் கள் முற்கூறிய முறைப்படி எழுதப்பட்டுள்ளன. பாக்கியபாவ பலன் கூறுமிடத்து ஸாராவளியில் அடங்கிய ரம்பமி அத்தியாயமும், த்வியந்தர யோகாத்யாயமும், கர்மபாவபலன் கூறுமிடத்து த்ருவ நாடீ, ஹோராசந்திரிகை, பிருஹத்ஸம்ஹிதையிலுள்ள கிரஹபக்தி யோகம் என்ற அத்தியாயம் இவைகளும் தமிழில் பெயர்த்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது ஒருவனது பாக்கியத்தையும் தொழிலையும் நிர்ணயமாய்ச்சொல்லுவதற்கு மிகவுமுதவியாகவிருக் கும். கிளாஸ் ரூ. 3. ரப் ரூ. 2-8-0.

14. உடுதசாபல நிர்ணயம்.—இத்தலையங்கத்தின் கீழ் பராசர ஸம்ஹிதை, பலதீபிகை, ஸாராவளீ, ஜாதகசந்திரிகை, ஸர்வார்த்த சிந்தாமணி, தமிழ் ஜாதகாலங்காரம் முதலிய புராதன சோதிடக் கிரந்தங்களில் உடுதசா விஷயமாகச் சொல்லிய பலன்களையும், வீடு தசையைப் பரிசீலனம் செய்யவேண்டிய முறையையும் ஒருங்கே சேர்த்து வெளியிட்டிருக்கிறோம். இதில் தேவஜாகரவிபியில் அந்தந் தக் கிரந்தங்களிலுள்ள மூல ச்லோகங்கள் பல அனுபவ ஜாதகங் கள் உதாஹரணங்கள் இவைகளுடன் கூட எளிய நடையில் தமிழில்

எழுதப்பட்ட கருத்துரையுடன் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இப்புஸ்தகத்தில் ஒவ்வொரு தசையையுமெடுத்துக்கொண்டு, புக்தி, அந்தரம், ஸூக்ஷ்மம், பிராணன் வரையுள்ள காலப்பிரிவினைகளைக் கட்டம்போட்டுக் காண்பித்து ஒவ்வொன்றிலும் நடக்கும் பலன்களும் விவரமாய் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே இப்புஸ்தகமொன்று கைவசமிருக்குமாயல் உதசாபலனையறிவதற்கு வேறு புஸ்தகம் தேவையாகவிருக்காதென்பது திண்ணம். டிம்மி 1க்கு 8 பக்க அளவில் சுமார் 480 பக்கங்களுள்ளது. கிளாஸ் ரூ. 4. ரப் ரூ. 3–8–0.

15. பலதீபிகை.—இக்கிரந்தத்தைப்பற்றிச் சோதிட உலகத்தில் அறியாதார் எவருமிரார். பலநூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த மந்திரேச்வரர் என்ற மஹான் தமக்குமுன்னிருந்த எல்லா வடமொழி சோதிட நூல்களையும் நன்கு ஆராய்ந்துபார்த்து அவற்றின் ஸாரமான பாகம் யாவையும் ஒருங்கே திரட்டி இப்பலதீபிகை புஸ்தகத்தில் அமைத்துள்ளார். ஜாதகபலன் கூறும் விஷயத்தில் இப்புஸ்தகத்தில் கூறப்படாத வேறு முறை எதுவுமிராதென்பது திண்ணம். இப்புஸ்தகத்தில் பலன் காணும் விஷயமாய்க் கூறப்படும் முறைகள் யாவும் அனுபவத்துக்கு ஒத்தவைகளாகவே இருக்கின்றன. சோதிடத்தில் சிறிதும் பரிசயமற்றவரும், சுலபமாய் அச்சாஸ்திரத்தை உணருமாறு ஸம்க்ஷேப முதலியனவும் விரிவாயுபதேசிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இப்புஸ்தகமொன்றின் உதவி கொண்டே ஜாதகபலனை நிர்ணயமாய் அறிந்துகொள்ளக்கூடும். இதன் கருத்தை சுலபமாயுணருமாறு விரிவாயும் தெளிவாயும் உதாஹரணத்துடனும் தமிழில் உரை எழுதி தேவநாகர எழுத்தில் மூலத்துடன் வெளியிட்டிருக்கிறோம். கிளாஸ் ரூ. 3–8–0. ரப் ரூ. 3.

16. சகுனபல நிர்ணயம்.—ஸ்ரீவராஹமிஹிராசிரியரால் பிருஹத்ஸம்ஹிதை என்ற கிரந்தத்தில் 85-வது அத்தியாயம் முதல் 95-வது அத்தியாயம் முடியவுள்ள 11 அத்தியாயங்களால் உபதேசிக்கப்பட்ட சகுனபலன்களை சகுனபலநிர்ணயம் என்ற தலையங்கத்தின் கீழ் நாகரலிபியில் மூலத்துடனும், தமிழுரையுடனும் வெளியிட்டிருக்கிறோம். இதில் மிகவும் அனுபவத்தில் ஒத்துவருகின்ற சகுனங்களும் அதன் பலன்களும் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இதில் அக்ஷரகோசாத்தியாயம் என்றதொரு பாகம் சேர்த்து உரை எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதை ஒருவன் நன்கு படித்து அறிந்து கொள்ளுவானேல் கேட்போர் ஆச்சரியப்படும்படி அவரின் பெயரையும், அவரால் கேட்கப்படும் பொருளின் பெயரையும் அவன் எளிதில் சொல்லிவிடக்கூடும் என்பதில் யாதும் ஐயமில்லை. கிளாஸ் ரூ. 1–8–0. ரப். ரூ. 1–4–0.

17. கோசரபல நிர்ணயம். — இதில் கோசரபலன் பார்க்க வேண்டிய முறைகள் விரிவாய் கூறப்பட்டிருக்கின்றன. கோசர

பலன், தசாபுக்தி பலன் இவற்றை எவ்விதம் கவனித்தால் அனுபவத்தில் அது ஒத்துவரக்கூடும் என்பது பல திருஷ்டாந்தங்கள் வாயிலாக விரித்துக்கூறப்பட்டிருக்கின்றது. பள்ளியிற்பயிலும் மாணவர்கள் கூட இதனுதவியால் அந்தந்த வருஷத்தில் மேல் வகுப்புக்கு மாற்றம், பரீக்ஷையில் தேர்ச்சி இவற்றை நன்கு தெரிந்துகொள்ளக்கூடும் என்றால் மற்றவர் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? அணை 12. 14 அணைவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் இதைப்பெறலாம்.

18. வை இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.—அணை 12.

19. ஜாதகசந்திரிகை தமிழ் மொழிபெயர்ப்பு.—இப்புஸ்தகம் சோதிட சாஸ்திரமாகிற இரும்புப்பெட்டிக்குத் திறவுகோலாகும். இதிற்சொல்லிய முறைகள் யாவும் அனுபவத்துக்கு மிக்க ஒத்தவை களாகும். இதில் விவாஹத்துக்கு வேண்டிய 10விதப் பொருத்தம் பார்க்கவேண்டிய முறைகள், அங்காரகதோஷ நிர்ணயம் முதலிய முக்கியமான விஷயங்களுமடங்கியிருக்கின்றன. ரூ. 1. 1–2–0க்கு ஸ்டாம்பு அனுப்பியும் இதைப்பெறலாம்.

20. ப்ரச்னரூடபலநிர்ணயம்.—தேவநாகர எழுத்தில் மூலத்துடனும் தமிழுரையுடனும் கூடியது. இதில் ப்ரச்னம், ஆரூடம் இவை மூலம் காணவேண்டியபலன் விரிவாய்க்கூறப்பட்டிருக்கின்றது. நஷ்டாதி ப்ரச்னங்கள் நேர்ந்தால் நஷ்டமான பொருள், அது சென்றிருக்குமிடம், அதை எடுத்தவன் இன்னார் என்பன முதலியவற்றைக் கேட்பவர் ஆச்சரியமடையும்படி இதனுதவியால் உடனே கூறிவிடலாம். ஒவ்வொரு சோதிடாபிமானியினிடமும் இப்புஸ்தகமொன்று இருப்பது மிகவுமவசியம். கிளாஸ் ரூ. 1–4–0. ரப்பு ரூ. 1.

21. நஷ்ட ஜாதகம்.—இதனால் ஜாதகமில்லாதவனும் ஜாதகத்தைக் கணித்துவிடலாம். தமிழில் அதன் முறைகள் எழுதப்பட்டுள்ளன. அணை 4. 5 அணைவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

22. நவக்கிரஹாராதனக்ரமம்.—இதில் நவக்கிரஹங்களை யாராதிப்பதேன்? என்ற விஷயமாய்ப் பலவாக்ஷேப சமாதானங்களடங்கிய விரிவான உபன்னியாஸமும், எந்தெந்தக் காலங்களில் ஆராதிக்கவேண்டும் என்பதும், நவக்கிரஹப் பிரதிமை, நவக்கிரஹ ஹோமகுண்டம் முதலியவற்றைத் தயாரிக்கவேண்டிய முறையும், ஆராதனத்துக்கு வேண்டிய மந்திரங்கள் தமிழுரையுடனுமடங்கியிருக்கின்றன. அத்துடன் நவக்கிரஹ மந்திரம், நவக்கிரஹ ஸ்தோத்திரம், நவக்கிரஹ கவசம், நவக்கிரஹ அஷ்டோத்தரம், விஷ்ணு கவசம் ஆதித்யஹிருதயம் இவைகள் பாராயணத்துக்குபயோகப்படுமாறு நாகரலிபியில் தனியே பிழையின்றி அச்சிடப்பட்டிருக்கின்றன. கிளாஸ் ரூ. 1-4-0. ரப் ரூ. 1.

வைதிக க்ரந்தங்கள்.

23. மந்திரப் பிரச்னம்.—இதில் கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தோந்நயனம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப் பிராசனம்,

சவுளம், உபநயனம், ஸமாவர்த்தனம், சிராத்தம், அஷ்டகை, ஸர்ப்ப பலி, ஈசானபலி முதலிய ஸம்ஸ்காரங்களில் உபயோகிக்கப்படும் மந்திரங்களும், ஆபஸ்தம்பகிருஹ்ய ஸூத்திரங்களும் தமிழுரையுடனடங்கியிருக்கின்றன. நாகரலிபியில் மூலம் அச்சிடப்பட்டிருக்கிறது. விவாஹாதி ஸம்ஸ்காரங்களிலுபயோகப்படும் மந்திரங்களின் கருத்தைத் தெரிந்துக்கொண்டால் வேத கர்மங்களில் மிக்கச்சிரத்தையுண்டாகுமென்பதில் யாதும் தடையில்லை. கிளாஸ் ரூ. 3. ரப் ரூ. 2–8.

24. ஸாத்தீயோபநிஷத். — இதில் சிக்ஷாவல்லீ, ஆனந்தவல்லீ, ப்ருகுவல்லீ என்ற மூன்று வல்லிகளுக்கும் ஸ்ரீசங்கர பாஷ்யத்திற்கிணங்கிய அத்வைத ஸம்ப்ரதாயார்த்தமும், ஸ்ரீரங்கராமானுஜ பாஷ்யத்திற்கிணங்க விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயார்த்தமும், ஆங்காங்கு வித்யாரண்ய ஸ்வாமிகளால் எழுதப்பட்ட விசேஷமான பொருள்களும் பதவுரை கருத்துரைகளுடன் வெளியிடப்பட்டிருக்கின்றன. தேவநாகரலிபியில் மூலமுள்ளது. கிளாஸ் ரூ. 3. பெதர் வெட் ஆண்டிக் பேபர் ரூ. 4.

25. ஸாத்தீயாரண்யகம் முதல் ப்ரச்னம்.—இதுவே அருணம் என்றும் சூர்யநமஸ்கார ப்ரச்னம் என்றும் சொல்லப்படும். இதன் ஆரம்பம் **भद्रं कर्णेभिः शृणुयाम देवाः** என்பது. இதில் 130 பஞ்சாத்துக்களடங்கியிருக்கின்றன. கிளாஸ் ரூ. 2-8-0.

26. புருஷ சூக்தம் முதலியன.—இதில் புருஷஸூக்தம், ஸ்ரீஸூக்தம், துர்க்காஸூக்தம். கனகதாராஸ்தவம் என்ற லக்ஷ்மீ ஸ்தோத்திரம் இவை அடங்கியிருக்கின்றன. முகவுரையில் ஸ்ரீசூக்தஹோமவிதி ஸ்ரீமந்திரம் முதலியனவும் புருஷ சூக்த ஹோமவிதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ரூ. 1–8–0.

27. ஸ்ரீருத்ரீயம் சமகம்.—ரௌத்ரம், தேவநாகரம் இரண்டிலும் மூலமும் தமிழுரையுமுள்ளது. கிளாஸ் ரூ. 1–8–0.

28. த்ரிவேதி ஸந்த்யாவந்தனம்.

முதற்பதிப்பு.—இதில் தேவநாகரலிபியில் மட்டும் மூலமும், தமிழுரையுமுள்ளது. கிளாஸ் ரூ. 2.

29. வேத இரண்டாவது பதிப்பு.—இதில் ருக், யஜுர், ஸாமவேதிகளின் ஸந்தியாமந்திரங்கள் தேவநாகரம், ரௌத்ரம், தமிழ் ஆகிய மூன்று எழுத்துக்களிலும் தமிழுரையுமுள்ளன மூன்றுவேதிகளுடைய ஸமிதாதானம், ஔபாஸனம், ப்ரம்ஹயக்ஞம், யக்ஞோபவீததாரணம் இவற்றின் மந்திரங்களுமடங்கியிருக்கின்றன. 400 பக்கங்கள். ரூ. 2–4.

30. மூன்றுவேதிகளின் ஸந்தியாதி மந்திரங்கள்.—இதில் ஸந்தியாவந்தனத்தின் மந்திரங்கள் நாகரம், ரௌத்ரம், தமிழ் என்ற மூன்று எழுத்துக்களிலும், ஸமிதாதானம், ஔபாஸனம், ப்ரம்ஹயக்ஞம் இவற்றின் மந்திரங்கள் நாகரம், ரௌத்ரம் இவற்றிலும் அடங்கியிருக்கின்றன. அணு 12.

31. யாஜுஷ ஸௌர்ய நமஸ்கார மந்திரங்கள்.—இதில் நாகரம், ரௌத்ரம் என்ற இரண்டு எழுத்திலும் ஸௌர்ய நமஸ்கார மந்திரம், நவக்

கிரஹ நமஸ்கார மந்திரம் இவையும், நாகரம் தமிழ் இவற்றில் ஆதித்ய ஹிருதயமும் தமிழுரையுடனடங்கியிருக்கின்றன. அணு 5.

32. ஆதித்யஹிருதயம்.—(தேவநாகரம், தமிழ் இரண்டிலும் மூலமும் தமிழுரையுமுள்ளது.) இது ஸ்ரீராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் 107-வது ஸர்க்கமாயமைந்துள்ளது. ஸ்ரீராமனுக்கு ராவண வதத்திற்காக அகஸ்த்ய முனிவரால் உபதேசிக்கப்பட்டது. ஸகல விதமான கஷ்டங்களையும், ரோகங்களையும் பாராயண மாத்திரத்தி னலேயே விலக்கக்கூடியது. தெளிவான தமிழுரையுடன் கூடியது. அணு 2 3 அணுவுக்கு ஸ்டாம்பு அணுப்பியும் பெறலாம்.

33. ஸ்ரீகோபிகாகீதம்.—ராஸக்ரீடாகாலத்தில் ஸ்ரீகோபிகைகள் பாடிய சுலோகரூபமான பாடல்கள். இது ஸ்ரீபாகவதத்திலுள்ளது. மூக வுரையில் ராஸக்ரீடா ரஹஸ்யார்த்தம் வெளியிடப்பட்டுள்ளது. அணு 12.

நாகர எழுத்தில் மூலம்மட்டுமுள்ள புஸ்தகங்கள்.

34. ஸ்ரீமஹாலக்ஷ்மீ ஸ்தோத்திரம்.—இதில் மஹாலக்ஷ்மீ அஷ்டோத்தர சதநாமஸ்தோத்திரம், ஷோடநாமாவளி, ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகளால் செய்யப்பட்ட கனகதாராஸ்துதி என்ற லக்ஷ்மீ ஸ்தோத்திரம் இவை தேவநாகரம், கிரந்தம், தமிழ் என்ற மூன்று எழுத்துக்களிலுமச்சிடப்பட்டிருக்கின்றன. ஹனுமத்கிருத ஸீதா ராம ஸ்தோத்திரமும் அச்சிடப்பட்டிருக்கிறது. அணு 2.

35. ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம்.—(நாகர எழுத்தில்) இதில் லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம், ஷோடநாமாவளி, லலிதா அஷ்டோத்தர சதநாமாவளி, ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகளால் செய்யப்பட்ட த்ரிபுரஸுந்தரீஸ்தோத்திரம், ஸ்ரீலலிதாபஞ்சரத்னம் இவை அடங்கியுள்ளன. ஸ்ரீபாஸ்கரராயரின் பாஷ்யாதிகளை அனுசரித்து பரிசோதித்து அச்சிடப் பட்டது. அணு 5. 0–6–6 அணுவுக்கு ஸ்டாம்பு அணுப்பியும் பெறலாம்.

36. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம்.—இதில் ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம், நாமாவளி, த்வாதசநாமபஞ்ஜரம், பகவத்யானஸோபா னம், கோபாலவிம்சதி, கிருஷ்ணாஷ்டோத்தரம், ராமாஷ்டோத்தரம், ஸ்ரீவெங்கடேசாஷ்டோத்தரம், ஸ்ரீஹநுமதஷ்டோத்தரம், லக்ஷ்மீ அஷ்டோத்திரம் முதலியன அடங்கியிருக்கின்றன. நாகரலிபியில் மூலம் மட்டும். அணு 5. கிரந்த எழுத்தில் அணு 5. 0–6–3 அணுவுக்கு ஸ்டாம்பு அணுப்பியும் பெறலாம்.

37. ஸுப்ரம்ஹண்ய ஸஹஸ்ரநாமஸ்தோத்திரம்.—(நாமாவளியுடன்) அணு 4.

38. பகவத்ஸ்தோத்திரமாலை.—இதில் கணபதி, ஸுப்ரம்ஹண்யர், சிவன், விஷ்ணு, ஸரஸ்வதீ, லக்ஷ்மீ, ராமன், கிருஷ்ணன், ஹனுமான் முதலிய தைவங்களைப்பற்றிய 40 ஸ்தோத்திரங்களடங்கியுள்ளன. நாகர லிபியில் அணு 6. கிரந்தலிபியில் அணு 6. தமிழ் லிபியில் அணு 6.

39. தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்.—கிரந்தம், நாகரம், தமிழ் இவற்றில் மூலம் மட்டும். அணு 2.

40. இந்திராக்ஷீ சிவகவச ஸ்தோத்திரம்.—நாகரம், கிரந்தம், தமிழ் என்ற மூன்று எழுத்திலும் தனித்தனி புஸ்தகமாய் வெளியிடப் பட்டது. ஒவ்வொன்றின் விலை அணு 3.

41. நீதிசதகம்.—(தேவநாகரலிபியில் மூலம் மட்டும்.) அணு 2.

42. ஸ்ரீருத்திரம் முதலியன.—ருத்திரம், சமகம், புருஷஸூக்தம், ஸ்ரீஸூக்தம், ஆயுஷ்யஸூக்தம், மிருத்யுஸூக்தம், பூஸூக்தம் முதலியன நாகரத்தில் ஸ்வரத்துடனுள்ளன. அணு 6. மெ விஷயங்கள் கிரந்தத் தில் ஸ்வரத்துடன். அணு 6.

43. சிவானந்தலஹரீ.—(நாகரலிபியில் மூலம் மட்டும்) அணு 3.

44. ஆபஸ்தம்பீய சிராத்தாதி பிரயோகம்.—நாகரத்தில் சிராத் தம் ஔபாஸனம், ஸ்தாலீபாகம், தர்சதர்ப்பணம், மஹாளய ஹிரண்ய சிராத்தம், புண்யாஹவாசனம் முதலிய 16 விஷயங்களின் மந்திரங்களுள் ளன. அணு 8.

45. வல்லீபரிணய மணிப்ரவாள சதகம்.—ஸுப்ரம்ஹண்ய லீலைகள் இதிலடங்கி இருக்கின்றன. அணு 4.

46. ஸம்ஸ்கிருத தமிழ் அகாதி.—தேவநாகரத்தில் ஸம்ஸ்கிருத பதங்களும், தமிழில் அதன் விளக்கமுமுள்ளது. ரூ. 4.

ஸுப்ரம்ஹண்ய பூஜாக்கிரமம்.

தேவநாகர எழுத்துப் பதிப்பு ரூ. 1. தமிழ் எழுத்துப் பதிப்பு ரூ. 1.

47. இப்பதிப்புகளில் பூஜாக்கிரமம், இரண்டு புஜங்கஸ்தோத்திரம், ஷோடசாக்ஷரீ மந்திரம், மாலாமந்திரம், கவசம், ஹிருதயம், அஷ்டோத் தரம், 2 ஸஹஸ்ரநாமம் முதலிய 28 விஷயங்களடங்கி இருக்கின்றன. தமிழ் பதிப்பில் திருப்புகழ் முதலிய தமிழ் நூல்களினின்றும் அருள் வளர்க்கும் சிறந்த பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

எளிய தமிழ் நடையிலுள்ள உபன்யாஸங்கள்.

48. சிராத்தம்.—இவ்விஷயமாய்ச் செய்யப்படும் ஆக்ஷேபங்களுக் குத் தக்க ஸமாதானமடங்கிய உபன்யாஸம். அணு 3.

49. மறுபிறப்பும் லோகாந்தரமும்.—தமிழ் உபன்யாஸம். மரித்த பிறகு மனிதன் அடையும் கதிகள் இதில் விளக்கப்பட்டுள்ளன. அணு 4.

புஸ்தகங்களுக்கு வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

இப்புஸ்தகங்கள் கிடைக்குமிடங்கள்:—

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,

பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

அல்லது:—

கஸ்தூரிரங்க விலாஸ், நடேசய்யர் தெரு,

புதுமாம்பலம், தியாகராயநகர் போஸ்டு, சென்னை.